தலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

பகு 12 வள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 18 வெள்ளிக்கிழமை (01.04.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 103



ரா ம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

SLS 107 தரம் கொண்டதும்

100 வீத சாதாரண போட்லான்

சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

RAMCO


# வடபகுதிக் கடற்பரப்பில் பயணித்த
# கடற்படையினரைக் காணவில்லை!

## மர்மம் நீடிக்கிறது; இந்தியாவும் தேடுகிறது

(முல்லைத்தீவு)

வட பிராந்தியக் கடலில் கடமையில் ஈடுபட்டிருந்த கடற்படை வீரர்கள் அணியொன்று காணாமற் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கடற்படை வீரர்கள் நால்வரைக் கொண்ட அணியொன்றே காணாமற் போயிருப்பதுடன் அவர்கள் பயன்படுத்திய படகு கடற்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவின் சாலை கடற்படை முகாமிலிருந்து சுண்டிக்குளம் முகாம் வரை பொருட்களை எடுத்துச் சென்றுகொண்டிருந்த நிலையிலே அவர்கள் காணாமற் போயுள்ளனர்.

அவர்கள் பயணித்த படகு எதுவித சேதமுமின்றி கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து பிரஸ்தாப வீரர்கள் யாரேனும் மர்ம நபர்களால் கடத்தப்பட்டிருக்கலாம் அல்லது கொல்லப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் தற்போது எழுந்துள்ளது.

காணாமற் போயுள்ள கடற்படையினரை தேடும் பணியில் இந்தியக் கடற்படையினரும் ஈடுபட்டுள்ளனர். இது தொடர்பில் தமிழக புலனாய்வுத்துறை அதிகாரிகள் இராமேஸ்வரத்தில் தமிழக மீனவர்களிடம் விசாரணை நடத்தியுள்ளனர். இது இவ்வாறிருக்க கடற்படையினர் காணாமற் போன சம்பவத்தை அடுத்து வடமராட்சி கிழக்கு மற்றும் முல்லைத்தீவுப் பகுதி மக்கள், படையினரால் கடும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை உடுத்துறைக் கடலில் மர்மமான படகொன்றை படையினர் கண்டுபிடித்துள்ளதாகவும் இவ் (20ஆம் பக்கம் பார்க்க)

## கேணல் கடாபியைக் கைவிட்டார்
## லிபிய வெளிவிவகார அமைச்சர்



(லண்டன்)

லிபிய வெளிவிவகார அமைச்சர் மௌஸா கௌஸா, லண்டனுக்குச் சென்றுள்ளார். அவர் லிபிய தலைவர் கேணல் கடாபியிடமிருந்து பிரிந்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

லிபியாவிலிருந்து இரு நாட்களுக்கு முன் துனிஷியாவுக்கு சென்ற மௌஸா கௌஸா நேற்று முன்தினம் (20ஆம் பக்கம் பார்க்க)

## லிபியாவின் சுயாதீனத்திற்கு அச்சுறுத்தல் விடும் நாடுகளின் முயற்சிகளுக்கு இலங்கை எதிர்ப்பு

### அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

(கொழும்பு)

நாடொன்றின் சுயாதீனத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்த மற்றுமொரு நாடு முயற்சிக்குமாயின் அதற்கு எதிராக இலங்கை அரசாங்கம் குரல் எழுப்பும் என்று அரசாங்கப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

லிபிய மக்களைப் பாதுகாப்பதற்காகவே கூட்டுப் படைகளுக்கு ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை அனுமதி வழங்கியது. இருப்பினும் மேற்படி கூட்டுப்படைகள் அந்த அனுமதிக்கும் அப்பால் சென்று தங்களது நாடுகளின் தனிப்பட்ட கோபங்களை தீர்த்துக்கொள்வதற்காக சந்தர்ப்பத்தினை பயன்படுத்திக் கொண்டுள்ளன. இவ்வாறாக (20ஆம் பக்கம் பார்க்க)

## ஆறு மாதத்திற்குள் தேர்தல் நடத்தப்படும்

(கொழும்பு)

கலைக்கப்படாத உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் ஆறு மாத காலத்திற்குள் எப்போது வேண்டுமானாலும் நடத்தப்படும் என்று தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று காலை நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போது ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதில் (20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். சிறைச்சாலையில் 3 கைதிகள் தப்பியோடினர்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து நேற்று அதிகாலை மூன்று கைதிகள் தப்பியோடியுள்ளனர். இவ்வாறு தப்பி ஓடியுள்ள மூவரையும் பிடித்துள்ளதாக யாழ். பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை வவுனியா சிறையிலிருந்து வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் செல்லப்பட்ட கைதி ஒருவர் சிறைக் காவலர்களிடமிருந்து தப்பித்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது. இதனையடுத்து வவுனியாவில் பல பகுதிகளிலும் பொலிஸாரும் இராணுவத்தினரும் தேடுதலில் ஈடுபட்டுள்ளனர். (ந-5)

## லங்கா ஈ நியூஸ் ஆசிரியர் கைது

(கொழும்பு)

லங்கா ஈ நியூஸ் இணையத்தளத்தின் செய்தி ஆசிரியர் பேண்ட் ரூபசிங்க நேற்று முற்பகல் வெல்லம்பிட்டிய பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவரை எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கடுவல நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

லங்கா ஈ நியூஸ் இணையத்தள அலுவலகத்திற்கு தீ வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட சந்தேக நபர்களுக்கு தொலைபேசி மூலம் அச்சுறுத்தல் விடுத்தார் என்ற சம்பவம் தொடர்பாக (20ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பாதயாத்திரை திடீர் இரத்து
## பாதுகாப்பு அமைச்சின் அனுமதியில்லையாம்

(யாழ்ப்பாணம்)

நல்லிணக்கத்திற்கான வடக்கு, கிழக்கு சர்வமத ஒன்றியம் நேற்று யாழ்ப்பாணத்தில் நல்லிணக்கத்திற்கான சமாதான பாதயாத்திரை மற்றும் செய்தியாளர் சந்திப்பு என்பவற்றை ஏற்பாடு செய்திருந்தது.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து இந்தப் பாதயாத்திரை பிற்பகல் ...0 மணிக்கு ஆரம்பிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் திடீரென இது கைவிடப்பட்டதாக சர்வமத ஒன்றியத் தலைவர்களால் தெரிவிக்கப்பட்டது.

இதன் பின் பிற்பகல் 3.00 மணியளவில் யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதி பெறாத காரணத்தினால் இந்த பாதயாத்திரை கைவிடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

அங்கு அவர்களால் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் காரணமாக பாதயாத்திரைக்கு எம்மால் பாதுகாப்பு அமைச்சிடம் இருந்து அனுமதி பெற முடியவில்லை. இந்த நாட்டில் இடம்பெற்ற யுத்தத்திற்கு காரணம் மதங்கள் பிளவுபட்டதே. மதத் தலைவர்கள் தமது மதங்களைச் சார்ந்தவர்கள் செய்த தவறு (20ஆம் பக்கம் பார்க்க)


சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட

அனைவருக்குமான நவீன அழகிய தெரிவுகளுக்கு...

நல்லூர்

சரவணா ரெக்ஸ்

இல. 526, 529, பருத்தித்துறை வீதி,

நல்லூர். (பின்வீதி) யாழ்ப்பாணம்.



இல. 770, 772, கே.கே.எஸ் வீதி,

தட்டாதெருச் சந்தி,

யாழ்ப்பாணம்.

(C-2797)

**Study & Work in UK and Canada**

Intake Get Register Now
Collecting the application until March 31st 2011
start the academic on August 2011
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீஸா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)


## மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்தியவருக்கு ரூ.17,500 அபராதம்

வல்வெட்டித்துறைப் பகுதியில் மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய நபருக்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் 17 ஆயிரத்து 500 ரூபாய் அபராதமும் அன்றி ஒருமாத சிறைத் தண்டனையும் வழங்கி தீர்ப்பளித்துள்ளது. மேற்படி நபர் மதுபோதையிலும் வாகன அனு மதிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம் தலைக்கவசம் ஆகியன இன்றி மோட் டார் சைக்கிள் செலுத்திய குற்றச்சாட்டில் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதிபதி குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் மேற்படி அபராதத்தையும் அதைச் செலுத்த தவறின் ஒருமாத சாதாரண சிறைத் தண்டனையையும் அனுபவிக்க வேண்டும் மென்று தீர்ப்பளித்தார். (ந-3,24)


**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290



## பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கான ஆங்கில வகுப்பு

பல்கலைக்கழக அனுமதி பெற்ற புதிய மாணவர்களுக்கான ஆங்கில கற்கை நெறி எதிர்வரும் 25ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் யூன் மாதம் 30ஆம் திகதி வரை STEPS Institute, யாழ்.கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம், நாவலர் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நடைபெறும்.

இக்கற்கை நெறியானது 120 மணித்தியாலங்களைக் கொண்டதுடன், கட்டணமாக ஆயிரத்து 500ரூபாய் மட்டும் செலுத்த வேண்டும். இவ் வகுப்பானது ஆங்கிலம் கற்பிப்பதற்கான 'British Council' இனால் விசேடமாக பயிற்றப்பட்ட ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுவதுடன் சர்வதேச ரீதியான கற்கை நெறிக்கான புத்தகங்களையும் கொண்டமைந்துள்ளது.

ஆங்கில கற்கைநெறி வகுப்பானது ஏனைய தனியார் நிறுவனங்களை விட உறுதிப்படுத்தும் விதமாக வடிவமைக்கப்பட்டுள்ளதோடு இதில் பங்குபற்றுவதாயின் பங்குபற்றுபவரின் ஆங்கில ஆற்றலை மதிப்பீடு செய்வதற்கான சிறிய தேர்வு (Oxford Placement Test) இடம்பெறும். இத் தேர்வானது எதிர்வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமை 'Steps Institute' இல் நடைபெறும்.

இக்கற்கை நெறிக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மாணவர்கள் உள்வாங்கப்படவுள்ளதால் 021 222 4580, 021 222 1395 ஆகிய தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவினை மேற்கொள்ளுமாறு பதில் இயக்குநர் அறிவித்துள்ளார். (ந-2)



(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவின் பிறந்த நாளையொட்டி நேற்று அவரது சிலைக்கு அரசியல் பிரமுகர்களால் மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சிவஞானம் சிறிதரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம். சிவாஜிலிங்கம், முன்னாள் யாழ். மாநகரசபை ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம், பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் ஆகியோர் கலந்து கொண்டனர். (ந-6)

## மின் தடைபற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மத்திய மின் நிலைய பிரதான மின்வழங்கல் வலைப்பின்னலில் திருத்த வேலைகள் நடைபெறவிருப்பதால் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9மணியிலிருந்து மாலை 4 மணிவரை யாழ்.குடாநாடு முழுவதும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## இளைஞன் படுகாயம்

(காரைநகர்)

வேகக்கட்டுப்பாட்டையிழந்த மோர்டார் சைக்கிள் அருகிலிருந்த மின் கம்பத்துடன் மோதியதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் காரைநகர் வயம்பு வீதியில் நேற்று பிற்பகல் 12.45 மணியளவில் இடம் பெற்றுள்ளது. இதில் காரைநகரைச் சேர்ந்த அ.அருள்ராஜ் (வயது 21) என்பவரே படுகாயமடைந்தார். (ந-6)


**திறப்பு விழா அழைப்பு**

**ANNAI BOOK Depot Show Room**

**அன்னை புத்தகசாலை காட்சியறை**

01.04.2011 - வெள்ளிக்கிழமை காலை 9.40 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது.



எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.
இலங்கை, இந்திய சகல துறைசார் புத்தகங்களையும், சிறுவர்களுக்கான ஏராளமான தெரிவுகளையும், CD, DVD வகைகளும் விசாலமான இடவசதியில், விசேட விலைக்கழிவுடன் ஒரே பார்வையில் பெற்றுக் கொள்ள அனைவரையும் அழைக்கின்றோம்.



உரிமையாளர்,
அன்னை புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.
021 222 9881
(சி-2844)



**Hatton National Bank**
Hatton National Bank PLC (PQ82)

30.03.2011 அன்று பத்திரிகையில், ஹட்டன் நஷனல் வங்கிக்கான ஆளணி நியமனம் தொடர்பாக வெளியிடப்பட்ட விளம்பரத்தின்படி, 27 வயதிற்குட்பட்ட பட்டதாரிகளும் விண்ணப்பிக்கலாம் என தவறுதலாக வெளியிடப்பட்டது என்பதனை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இதன் பிரகாரம் 03.04.2011 அன்று 23 வயதிற்கு உட்பட்டவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும் என்பதனை அறியத்தருகின்றோம்.

எனினும் 30.03.2011 அன்று விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தகைமைகள் திருப்திப்படுத்தப்படல் வேண்டும்.
(C-2845)



**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் ஆண்டுப் பொதுக்கூட்டத் தீர்மானங்கள்**
FWC
நடைபெறவிருக்கும், தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்கு தீர்மானங்களை முன்மொழிந்து அனுப்ப விரும்புபவர்கள் அவற்றை 15.04.2011 ஆம் நாள் வெள்ளிக்கிழமைக்கு முன் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
எம்.எம்.அல்போன்ஸ், செயலாளர்,
தொண்டைமானாறு,வெளிக்கள நிலையம்.
ஆசிரியர்,
சென்.ஜோன்ஸ் கல்லூரி,யாழ்ப்பாணம்
(சி-2846)



**யாழ்.வாழ் பொதுமக்களுக்கு இதோ ஓர் வரப்பிரசாதம்!!!** ORIFLAME SWEDEN

புதுவருடத்தை முன்னிட்டு ஒரிபிளேம் சுவீடன் நிறுவனம் யாழ்.வாழ் மகளிர்களுக்காக சந்தர்ப்பக் கூட்டம் ஒன்றை ஒரிபிளேம் யாழ்.கிளை நிறுவனத்தில் நடாத்த உள்ளது.
இக் கூட்டத்தில் இணைவதன் மூலம் உங்கள் வாழ்க்கையில் கீழ்வரும் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

- வரையறை அற்ற வருமானம் உழைக்கலாம்.
- உங்கள் கனவுகளை நிறைவேற்றலாம்.
- உங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தலாம்.
- மேலும் பல...

உங்களுக்காக ஒரிபிளேம் தயாராகிவிட்டது! நீங்கள் தயாராகுங்கள்!!

திகதி: 03 - 04 - 2011
நேரம்: 9.00 - 12.00
இடம்: 187/30, யூனியன் லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திர சந்தியிலிருந்து கொட்டடி போகும் வழியில்)

அனுமதி முற்றிலும் இலவசம்!!!

தொடர்புகளுக்கு: பெயர் : ரிசிக்கா, சர்மிளா
தொலைபேசி இல: 0771606504, 0774323316



அன்றைய தினம் இணைந்து கொள்பவர்களுக்கு அங்கத்துவம் இலவசம்.
(ஒரிபிளேமில் இணைந்திருக்கும் ஆலோசகர்கள் இதில் கலந்து கொள்ளமுடியாது)
சந்தர்ப்பத்தை இழப்பவர்கள் புத்திசாலிகள் அல்ல!!!
(4279)



**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

அமரர்
**திருமதி சிமியோன் பிலோமினம்மா**



அன்னை மடியில் 20.08.1944
ஆண்டவன் அரவணைப்பில் 01.04.2010

தாய்ப் பறவை தன் குஞ்சுகளை
இறக்கைக்குள் அடைத்தாற்போல்
எம்மையெல்லாம் - அன்பெனும்
இறக்கைக்குள் அடைத்து
உருவாக்கி ஒன்றுசேர்த்தீர்
நீர் மரிக்கவில்லை...
என்றும் எம்மில் நிலையாக
'கிறிஸ்து இயேசுவுக்குள்
வாழ்பவன் மரித்தாலும் வாழ்கின்றான்'

கரணவாய் வடக்கு,
கொற்றாவத்தை.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்.
(சி-2843)

# உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா 2011

பெப்ரவரி 19 - ஏப்ரல் 02

ICC Cricket World Cup 2011

## அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்கள்



| வீரர்கள் | போட்டி | ஓட்டங்கள் | சராசரி | சதம் | அரைச் சதம் |
|---|---|---|---|---|---|
| திலகரட்ண டில்சான் (இலங்கை) | 8 | 467 | 66.71 | 2 | 2 |
| சச்சின் டெண்டுல்கர் (இந்தியா) | 8 | 464 | 58.00 | 2 | 2 |
| திரோட் (இங்கிலாந்து) | 7 | 422 | 60.28 | 0 | 5 |
| குமார் சங்கக்கார (இலங்கை) | 8 | 417 | 104.25 | 1 | 3 |
| உபுல் தரங்க (இலங்கை) | 8 | 393 | 65.50 | 2 | 1 |
| வீரேந்திர சேவாக் | 7 | 380 | 54.28 | 1 | 1 |

## அதிக விக்கெட்டுக்கள் சாய்த்தவர்கள்



| வீரர்கள் | போட்டி | ஓவர்கள் | ஓட்டங்கள் | விக்கெட்டுக்கள் | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|
| சகிட் அப்ரிடி (பாகிஸ்தான்) | 8 | 74.3 | 270 | 21 | 2 | 2 |
| சகீர்கான் (இந்தியா) | 8 | 71.3 | 334 | 19 | - | - |
| ரிம் சௌத்தி (நியூசிலாந்து) | 8 | 72.2 | 312 | 18 | - | - |
| ரொபின் பீற்றர்சன் (தென்னாபிரிக்கா) | 7 | 56.0 | 238 | 15 | 1 | - |
| முத்தையா முரளிதரன் (இலங்கை) | 8 | 63.0 | 252 | 15 | 1 | - |

## அதிக சிக்ஸ்சர்கள் விளாசியவர்கள்



| வீரர்கள் | போட்டி | ஓட்டங்கள் | 4 | 6 |
|---|---|---|---|---|
| ரெய்லர் (நியூசிலாந்து) | 8 | 324 | 20 | 14 |
| பொல்லார்ட் (மே.தீவுகள்) | 7 | 180 | 14 | 11 |
| கெவின் ஓபிரையன் (அயர்லாந்து) | 6 | 198 | 19 | 09 |
| சச்சின் டெண்டுல்கர் (இந்தியா) | 8 | 464 | 50 | 08 |

## கடவுள் தான் காப்பாற்றினார் -சச்சின்

பாகிஸ்தான் அணியுடனான அரையிறுதிப் போட்டியில் சச்சின் டெண்டுல்கர் 85 ஓட்டங்கள் விளாசி ஆட்டநாயகன் விருதை வென்றார். இந்த ஆட்டத்தில் அவருக்கு 5 முறை லைப் கிடைத்தது. அவர் கொடுத்த 5 பிடிகளை பாகிஸ்தான் வீரர்கள் கோட்டை விட்டனர். இதுகுறித்து சச்சின் கூறுகையில்,

எனது கிரிக்கெட் வாழ்க்கையில் ஒரு ஆட்டத்தில் 5 வாழ்வு கிடைத்ததேயில்லை. கடவுள்தான் கைகொடுத்துள்ளார். ரெய்னா கடைசிக் கட்டத்தில் அருமையாக ஆடினார். முதலில் ஆடிய வேகத்திற்கு நாங்கள் 310 முதல் 315 ஓட்டங்கள்குவித்திருக்கவேண்டும்.



ஆனால் பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர்கள் அருமையாகச் செயற்பட்டு எங்களை தடுத்துவிட்டனர்.

மேலும் நேரம் செல்லச்செல்ல மைதானத்தின் தன்மை மாறியது. ஓட்டங்கள் குவிக்க மிகவும் சிரமமாக இருந்தது. இந்த நிலையில் தான் 260 முதல் 270 ஓட்டங்கள் வரை எடுத்தால்கூட வெற்றி பெற்றுவிடலாம்என நினைத்தோம். வெற்றியின் பெருமை அனைத்தும் பந்து வீச்சாளர்களையே சேரும்.

இறுதிப் போட்டியில் இலங்கையை எதிர்கொள்கின்றோம். அந்த அணியும் மிகச்சிறப்பானதுதான். எல்லாத் துறைகளிலும் சிறப்பாகச் செயற்பட்டு உலகக் கிண்ணத்தை வெல்ல முயற்சிப்போம். இவ்வாறு சச்சின் டெண்டுல்கர் தெரிவித்தார்.

## துளித்துளியாய்...

### தேர்வுக் குழுவினர் ஏமாற்றம்

இந்தியா- பாகிஸ்தான் ஆட்டத்தை பிரபலங்கள் அனைவரும் நேரில் இரசித்தும் வீரர்களை தேர்வு செய்யும் இந்திய அணியின் தேர்வுக் குழுவினருக்கு அந்த பாக்கியம் கிட்டவில்லை. ஸ்ரீகாந்த், சுரேந்திர பாவே, ராஜா வெங்கட்,நரேந்திர ஹிர்வாணி, யஷ்பால் சர்மா ஆகியோர் பிற்பகல் மொகாலி வந்துவிட்டனர்.ஆனால்ஹோட்டல் அறைகள் ஒதுக்கப்படவில்லை.அதிருப்தியடைந்த அனைவரும் 3 மணிநேரம் ஹோட்டல் வாசலில் காத்திருந்து விட்டு டில்லி சென்றுவிட்டனர்.

### சோனியா - ராகுல் ஆர்வம்

இந்திய காங்கிரஸ் பொதுச் செயலாளர் ராகுல்காந்தி மாலை 6 மணிக்கு மைதானத்திற்குள் நுழைந்தார். நேரடியாக 7 ஆம் நம்பர் வாயில் வழியாக வந்த அவர் பார்வையாளர்கள் மாடத்தில் அமர்ந்தார், இரவு விருந்துக்குச் சென்றுவிட்டு சோனியாவையும் அந்த இடத்திற்கு அழைத்து வந்தார்.அந்த ஸ்டாண்டில் இருந்த பாகிஸ்தான் ரசிகர்களும் சோனியா-ராகுலை செல்போனில் படம் எடுத்தனர். சோனியாகாந்தி சாதாரண ரசிகையைப் போல போட்டியை ஆர்வமுடன் ரசித்தது அனைவரையும் கவர்ந்தது.


### அக்தருக்கு அட்டகாச வரவேற்பு

தனது கடைசி ஆட்டத்திலும் ஆட அக்தருக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. ஆனால் மொகாலி ரசிகர்களின் அட்டகாச வரவேற்பை அவர் ரசித்து மகிழ்ந்தார். நாணயச் சுழற்சி போடுவதற்கு முன் வீரர்கள் அணிவகுப்பில் அவர் வந்தபோது ரசிகர்கள் ஆரவாரம் செய்தனர். அதைக் கையசைத்து அக்தர் ஏற்றுக் கொண்டார்.

### ஒரே நாளில் 120 விமானங்கள்

சண்டிகர் விமான நிலையம் இதுவரை இல்லாத அளவுக்கு நேற்று முன்தினம் பரபரப்பாகக் காணப்பட்டது.காலை 6 மணிமுதல் பிற்பகல்2.15 மணிக்குள் 120 விமானங்கள்வருகை தந்தன. இருநாட்டு பிரதமர்கள்,முக்கிய வி.ஐ.பிக்கள்,நடிகர்,நடிகைகள்,தொழிலதிபர்கள் என அனைத்துத் தரப்பினரும் சண்டிகரில் குவிந்தனர்.

## தவறாகக் கணித்துவிட்டோம் - தோனி



சச்சினும் சேவாக்கும் அருமையான ஆரம்பம் ஏற்படுத்திக் கொடுத்தனர். முதலில் பந்துகள் மெதுவாக எழும்பி வந்தன. ஆனால் நேரம் செல்லச் செல்ல சுழற்பந்து வீச்சுக்கு கைகொடுத்தது அப்ரிடி உள்ளிட்ட சுழற்பந்து வீச்சாளர்கள் அருமையாக ஆடி எங்கள் ஓட்டங்கள் குவிப்பைக் கட்டுப்படுத்தி விட்டனர்.

ஆடுகளத்தின் தன்மையை நாங்கள் தவறாகக் கணித்து விட்டோம். எப்போதுமே பாகிஸ்தான் வீரர்கள் சுழற்பந்து வீச்சில் சிறப்பாக ஆடுவார்கள் என்பதை மனதில் வைத்துத் தான் 3 வேகப் பந்து வீச்சாளர்களுடன் களமிறங்கினோம். சுழலுக்குச் சாதகமாக இருந்தபோதிலும் வேகப்பந்து வீச்சாளர்கள் அனைவருமே மிரட்டினர்.ரெய்னா கடைசி நேரத்தில் சிறப்பாக ஓட்டங்களைச் சேர்த்தார்.

பவர்பிளேயில் ஓட்டங்கள் குவிப்பதில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்தத் தொடரைப் பொறுத்தவரை எங்களது திறமையை முழு அளவில் வெளிப்படுத்துவதிலேயே கவனம் செலுத்துகிறோம். எதிரணியின் பலவீனங்களை கருத்திற்கொள்வதில்லை. இறுதிப் போட்டியிலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினால் தான் உலகக் கிண்ணத்தை வெல்ல முடியும். இவ்வாறு இந்திய அணித்தலைவர்தோனிதெரிவித்தார்.

## இந்திய அணிக்கு வாழ்த்துக்கள் - அப்ரிடி



இந்திய அணிக்கும் அந்நாட்டு ரசிகர்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். இறுதிப் போட்டியிலும் இந்திய அணி சாதிப்பதற்கு வாழ்த்துகிறேன். எங்களை விட எல்லா வகையிலும் இந்திய அணி சிறப்பாக ஆடியது. எங்களுக்கு சிறப்பான இணைப்பாட்டம் கிடைக்கவில்லை. தேவையில்லாத சமயங்களில் மோசமான ஷொட்களை ஆடினோம்.

இதுபோன்ற ஒரு ஆட்டத்தை எங்களிடமிருந்து ரசிகர்கள் யாரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். இதற்காக நான் நாட்டுமக்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். இருப்பினும் இந்தத் தொடரில் யாரும் எதிர்பார்க்காத வகையில் நாங்கள் சிறப்பாக ஆடியது மகிழ்ச்சியளிக்கிறது. 8 ஆட்டத்தில் 6 வெற்றியை அடைந்ததே பெரிய சாதனை தான்.

எனக்கு ஆதரவு தெரிவித்த ரசிகர்கள் கிரிக்கெட் சபைத் தலைவர், நிர்வாகிகள், அணி சக வீரர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு பாகிஸ்தான் அணித் தலைவர் அப்ரிடி தெரிவித்தார்.



காரைநகர் கலாநிதி தியாகராசா மத்திய மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாண கால்நடை உற்பத்தி, அபிவிருத்தி பணிப்பாளர் எஸ்.சிவநாதன் மங்கல விளக்கேற்றுவதனையும் பிரதம விருந்தினரின் பாரியாரான வவுனியா மாவட்ட வைத்தியசாலை வைத்திய அதிகாரி திருமதி வ.சிவநாதன், சிறப்பு விருந்தினர் தொழிலதிபர் எஸ்.நேசேந்திரன் ஆகியோர் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்குவதனையும் மாணவர்களின் உடற் பயிற்சி நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்: காரைநகர் செய்தியாளர்)

## நூலகப் பொறுப்பாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பொதுச் சேவையின் நூலகப் பொறுப்பாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டி பரீட்சை நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் வண்/நாவலர் மகா வித்தியாலயத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இப்பரீட்சை தொடர்பாக அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் 0213215543 என்ற தொலைபேசி இலக்கத்துடன் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர் திருவாகரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3)

## அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றி சென்ற மூவருக்கு அபராதம்

(சாவகச்சேரி)

அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிச் சென்ற லொறி ஒன்றினை இடைமறித்த பொலிஸார் அதில் பயணம் செய்த 3 நபர்களைக் கைது செய்து சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் நேற்றைய தினம் ஆஜர்ப்படுத்தினர்.

வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா சம்பந்தப்பட்டவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து குற்றவாளிகளாகக் கண்டு மூவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

அத்துடன் வாகனத்தை 2 மில்லியன் ரூபா பிணையில் எடுத்துச் செல்ல அனுமதித்ததுடன் வாகன உரிமைக் கோரிக்கை தொடர்பான விசாரணையை எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

(ஸ்ரீ-3-29)




## உரும்பிராய் இந்துவின் நூற்றாண்டு விழா மைதான விளையாட்டு நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி நூற்றாண்டு விழா மைதான விளையாட்டு நிகழ்வுகள் எதிர்வரும் 6 ,7 ஆம் திகதிகளில் மாலை 3 மணிக்கு கல்லூரிவிளையாட்டு மைதானத்தில் கல்லூரி முதல்வர் அ.ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

முதல் நாள் நிகழ்வில் விருந்தினர்களாக சுன்னாகம் இலங்கை வங்கி முகாமையாளர் எஸ்.பி.அரசகுமார், இணுவில் இந்து விளையாட்டுக் கழக தலைவர் லயன் செ. இலகுநாதன், கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.பி வைத்தியதிலக ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் உதயசூரியன் வி.கழகத்தை எதிர்த்து சென் மைக்கல் வி.கழக உதைபந்தாட்டப்போட்டி, யாழ். வலயப் பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டப்போட்டியின் இறுதி நிகழ்வு, யாழ். வலயப்பாடசாலைகளுக்கிடையிலான ஆண், பெண்களுக்கான மென்பந்தாட்டப் போட்டியின் இறுதி நிகழ்வுகள் என்பன நடைபெறவுள்ளன.

இரண்டாம் நாள் நிகழ்வில் விருந்தினர்களாக பாஸ்கரன் மற்றும் அவரது பாரியார் ராதை, ஊரெழு படைமுகாம் கட்டளை அதிகாரி லெப் கேணல் டி.எச்.கே.எஸ். விஜயரத்னா, திருநெல்வேலி ஹற்றன் நஷனல் வங்கி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் பல்கலைக்கழக விளையாட்டுக்கழக அணி எதிர் ஊரெழு றோயல் வி. கழக உதைபந்தாட்டப்போட்டி, யாழ். வலய பாசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட இறுதி நிகழ்வு, உரும்பிராய் இந்துக்கல்லூரி பழைய மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையிலான உதைபந்தாட்டப்போட்டி என்பன நடைபெறவுள்ளன. (ஸ்ரீ-3)

## சைக்கிளில் சமாந்தரமாக சென்றோருக்கு அபராதம்

(சாவகச்சேரி)

வீதியில் சமாந்தரமாக துவிச்சக்கர வண்டியில் சென்ற இருவரை கொடிகாமப் பொலிஸார் கைது செய்து நேற்றைய தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தினர்.

வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு இருவருக்கும் தலா ஆயிரம் ரூபாய் வீதம் அபராதம் விதித்து செலுத்தத் தவறின் ஒரு மாதகால சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3-29)

## நல்லூர் பிரதேச செயலக விளையாட்டு போட்டியில் அரியாலை ஐக்கிய கழகம் முதலிடம்



(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகத்தினால் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் முதலாமிடத்தைப் பெற்று சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

மேற்படி போட்டிகளின் இறுதிநாள் நிகழ்வு யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

விளையாட்டுப் போட்டியில் தடகளப் போட்டிகளிலும் குழுநிலைப் போட்டிகளிலும் புள்ளிகள் அடிப்படையில் முதலாமிடத்தைப் பெற்ற ஐக்கிய விளையாட்டுக் கழக வீரர்கள் வெற்றிக் கேடயங்களோடு அமர்ந்திருப்பதனையும் நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்களையும் படங்களில் காணலாம்.

(ஸ்ரீ-2)

## தொழில்சார் வழிகாட்டல் சேவைகளை வழங்கும் நியுக்கிலியஸ் நிதிச் சம்மேளனம் - 2011

(யாழ்ப்பாணம்)

நியுக்கிலியஸ் பவுண்டேசன் என்னும் அமைப்பினால் யாழ்.மாவட்ட சிறிய, நடுத்தர தொழில் முயற்சியாளர்கள், வர்த்தகர்கள் மற்றும் ஏனைய வியாபாரத்துறை சார்ந்தவர்களுக்காக புதிய நிதியியல் சேவைகள் மற்றும் தொழில்சார் வழிகாட்டல் சேவைகளை வழங்கும் நோக்குடன் அரச மற்றும் தனியார் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களைச் சந்திக்கும் நியுக்கிலியஸ் நிதிச் சம்மேளனம் எனும் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் 12 மணிவரை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி சேவையின் மூலம் உள்ளூர் தொழில் முயற்சியாளர்கள், வர்த்தகர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் தங்கள் வியாபாரங்கள் மற்றும் தொழில் முயற்சிகளை மேலும் அபிவிருத்தி செய்துகொள்வதற்கு மிகப்பொருத்தமான சேவைகளையும் தெரிவுகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

எனவே, அனைத்து யாழ்.மாவட்டத்தினைச் சேர்ந்த தொழில் முயற்சியாளர்கள், வர்த்தகர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் மேற்படி நிகழ்வில் கலந்து பயன்பெற முடியும்.

மேற்படி நியுக்கிலியஸ் பவுண்டேசன் அமைப்பானது இலங்கையினதும் ஏனைய ஆசிய நாடுகளினதும் அபிவிருத்தியை நோக்காக்கொண்டு இயங்கிவரும் இலாபநோக்கமற்ற அமைப்பாகும். இவ்வமைப்பு ஜேர்மன் அபிவிருத்தி ஒத்துழைப்பு (GTZ) எனும் அமைப்பின் இரு திட்டச் செயலாக்கங்களின் வெளிப்பாடு வியூகமாக முன்னாள் தேசத்தை கட்டியெழுப்புதல் மற்றும் பெருந்தோட்ட அடிப்படை வசதிகள் அமைச்சு மூலம் நிறுவப்பட்டதாகும். (ஸ்ரீ-3)

# லிபியாமீதான தாக்குதலில் ஐ.நா.வின் வரையறை மீறப்பட்டுள்ளது

## அமைச்சர் ஹெகலிய தெரிவிப்பு



லிபியா மீதான தாக்குதலில் ஐக்கிய நாடுகளின் வரையறையையும் மீறிய நிலை தென்படுவதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று காலை நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போது ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். லிபியா மீது அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகள் தாக்குதல் நடத்துவது குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவென்று ஊடகவியலாளர் தமது கேள்வியின் போது கேட்டார்.

எந்த ஒரு நாட்டினதும் இறைமை பாதிக்கப்படுவதை அரசாங்கம் என்ற ரீதியில் அனுமதிக்க முடியாது என அமைச்சர் குறிப்பிட்டார்.

அதன்போது ஒரு நாட்டின் பொது மக்கள் சமூகப் படுகொலை செய்யப்படுவதையோ துன்புறுத்தப்படுவதையோ அங்கீகரிக்க முடியாது. அவர்கள் எந்த மக்களாக இருந்தாலும் சரி எந்தப் பிரிவினராக இருந்தாலும் சரி எந்தக் கட்சியினராக இருந்தாலும் சரி அனைவரும் பாதுகாக்கப்படவேண்டும்

ஐக்கிய நாடுகள் சபை பொதுமக்களை பாதுகாக்கும் நோக்கத்திலேயே அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.எனினும் அங்கு அந்த வரையறை மீறப்பட்டுள்ளதாகவே தோன்றுகின்றது என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோவில் முதலாய கோவில்கள் பிள்ளையார் துவஜாரோஹண மகோற்சவம் எதிர்வரும் 6 ஆம் திகதி புதன்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பன்னிரண்டு நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

அத்துடன் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணிக்கு சப்பறத்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் பகல் 11.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ஸ்ரீ-2)

# புதன் கிரகத்தை படம் பிடித்து அனுப்பிய நாசா விண்கலம்



புதன் கிரகத்தை ஆய்வு செய்ய அமெரிக்காவின் நாசா விண்வெளிமையம் மெசஞ்சர் என்ற விண்கலத்தை கடந்த 6 ஆண்டுகளுக்கு முன்பு அனுப்பியது. சூரிய குடும்பத்தில் மிக தொலைவில் உள்ள இந்தக் கிரகத்தை கடந்த 17 ஆம் திகதி இந்த விண்கலம் சென்றடைந்தது. தற்போது இந்த விண்கலம் புதன் கிரகம் அருகே நிலை நிறுத்தப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து அது தனது ஆய்வு பணியை தொடங்கியுள்ளது. இந்த நிலையில் மெசஞ்சர் விண்கலம் புதன் கிரகத்தின் மேற்பரப்பை முதன் முறையாக படம் எடுத்து அனுப்பியுள்ளது. இதன் மேல் பகுதி மற்ற கிரகங்களை போல் அல்லாமல் வழக்கத்துக்கு மாறாகவுள்ளது.

அதில் இருள் மயமான கதிர் வீச்சு காணப்படுகிறது. அது டெபுசி என்று அழைக்கப்படுகிறது. அவற்றின் கீழ் பகுதியும் இதற்கு முன்பு பார்க்காத அளவில் வித்தியாசமாக உள்ளது. இந்த தகவலை நாசா விண்வெளிமையம் தெரிவித்துள்ளது. இந்தப் படம் உட்பட மொத்தம் 363 புகைப்படங்களை எடுத்து மெசஞ்சர் விண்கலம் அனுப்பியுள்ளது. இது குறித்து ஆய்வு செய்த பின்னர் படிப்படியாக அவை வெளியிடப்படவுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# க.பொ.த சாதாரணதர பரீட்சை பெறுபேறுகள்

**சாவகச்சேரி இந்துக் கல்லூரி**

த.தர்ஷிகன் (9ஏ), பு.ஜெயவிகிர்தா (9ஏ), ரா.நிதீஸ்ராம் (8ஏசி),சி.ஜெதீசன் 8ஏசி, பா.சத்தியகுகன் (8ஏசி), இ.கிருஷிகா (8ஏபி), ஜெ.கஜேந்திகா (8ஏபி), வ.துளசி(8ஏபி), மு. சிந்துஜா (8ஏசி), கி.நிவேதிகா (8ஏசி), ச.சஜித்தா (7ஏபிசி), வீ.ராஜ்குமார் (7ஏபிசி), ந.கேகஜன் (7ஏபிசி), ரா.தனீபன் (7ஏ2பி), ரா.கபிலினி (7ஏபிஎஸ்), பா.ஞானநிபாஜினி (7ஏபிசி), ரா.லக்சனா (7ஏபிஎஸ்), உ.தர்சினி (7ஏபிஎஸ்), வை.சிந்துஜன் (6ஏ3பி), த.துஜீவா (6ஏ3பி), ம.மதுஷா (6ஏ3பி), சி.செந்துர்க்குமரன் (6ஏ2பிசி), ப.நர்த்தகி (6ஏ 2பிசி), ச.அஹிம்சா (6ஏ2சிஎஸ்), ஸ்ரீ.றம்ஜா (5ஏ4பி), பா.றாதிகா (5ஏ4பி), ம.கஜீபன் (5ஏ 3பிசி), ப.பிரதீபா(5ஏ2பி2சி), க.கஜசுமணி (5ஏ2பி 2சி), ச.சாயிசன் (5ஏ2பி2சி), ப.நிதுர்சன் (5ஏ 2சி2எஸ்), வி.சங்கீர்த்தனன் (5ஏபி3சி), ச.ஜதீசன் (5ஏ 3சிஎஸ்), வே.லதுர்ஜா (5ஏ2பி 2சி), ர.அகல்யா(4ஏ5பி), பி.தேனுஜன் (4ஏ3பி2சி), ப.பவித்திரன் (4ஏ3பி2சி), ப.அபிவர்ணா (4ஏ3பி2சி), ச.கௌசிகா (4ஏ2பி2சி), த. மாதுங்கன் (4ஏ4பிஎஸ்), கை.பிரதாப் (4ஏபி 4சி), ஜெ.லாவன்யா(4ஏ3பி2சி), செ. டயானா (4ஏபி4சி), இ.சமீதா (4ஏ3பி2சி), வி.சிவானி (4ஏபி3சிஎஸ்), கு.விஜோஜா (4ஏ2பி2சிஎஸ்), கு.சுகன்யா(4ஏ2பிசிஎஸ்), ந.யசிந்தன் (4ஏ2பி 3சி),ஸ்ரீ.ரகுராஜ் (4ஏ2பி2சி),ஆ.குகதாஸன்(4ஏ2பி2சி),மு.லக்ஷியா (3ஏ4பி 2சி),ந.பிரதீபன் (3ஏ4பி2சி), ம.சர்மிலன் (3ஏ2பி4சி), வே.சேஜோன் (3ஏ2பி3சிஎஸ்), ந.சங்கீதன் (3ஏ2பி2சி2எஸ்), ஆ.வஜோஜன்(3ஏ2பி2சி2எஸ்), கு. நிகோஷனா (3ஏபி4சி எஸ்), ம.பிரியங்கா (3ஏ பி2சி2எஸ்), இ.கீர்த்தனன் (3ஏ6சி), ஐ.ஆருரன்(3ஏ3பி2சி), வி. மதுர்சன்(3ஏ5சிஎஸ்), சி.நிதர்சனா (3ஏபி3சிஎஸ்).

**யா/வைத்தீஸ்வராக் கல்லூரி**

ஈ. தனுஜன்(7ஏசிஎஸ்), பா.கோபிசா (4ஏபி3சி),செ.நவநீதா(3ஏ3பிசி), அ.மேரிநிசாந்தினி (3ஏ2சிஎஸ்) (ஸ்ரீ-3)

# வெளிநாட்டில் அகதி அடைக்கல பட்டியலில் இலங்கை 10ஆம் இடம்

வெளிநாடுகளில் அதிகளவில் அடைக்கலம் கோரும் அகதிகளைக் கொண்ட முதல் 10 நாடுகளின் பட்டியலில் இலங்கை இடம் பெற்றுள்ளது.போர் முடிவுக்கு வந்தநிலையிலும் வெளிநாடுகளில் இலங்கையைச் சேர்ந்தவர்கள் அதிகளவில் அடைக்கலம் கோரி வருகின்றனர்.

இதனால் அதிகளவில் அடைக்கலம் கோருவோரைக் கொண்ட நாடுகளின் பட்டியலில் இலங்கை 10ஆம் இடத்தைப் பெற்றுள்ளது. எனினும் போரின் முடிவுக்குப் பின்னர் இலங்கையில் இருந்து வெளிநாடுகளில் அடைக்கலம் கோருவோரின் எண்ணிக்கை குறைந்துள்ளதாக அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயம் வெளியிட்ட அறிக்கையொன்றில் கூறியுள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது, ஐரோப்பிய நாடுகளிலும் அவுஸ்திரேலியாவிலும் அடைக்கலம் கோரும் அகதிகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இலங்கையில் இருந்து வருகைதரும் அகதிகளின் எண்ணிக்கை வீழ்ச்சி அடைந்துள்ளதாகவும் இலங்கையின் வடபகுதி நிலைமைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தையடுத்தே இந்த மாற்றம் நிகழ்ந்துள்ளதாகவும் அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் கிறிஸ் பொவன் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவின் உள்ளகக் கொள்கை மாற்றத்தினால் இலங்கை அகதிகளின் வருகை குறையவில்லை என்றும் அவர் அப்போது குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டில் இலங்கையிலிருந்து வெளிநாடுகளில் அடைக்கலம் தேடுவோரின் எண்ணிக்கை குறைவடைந்துள்ள போதும் அதிகளவில் அடைக்கலம் தேடுவோரின் பட்டியலில் இலங்கை கடந்த 2006 ஆம் ஆண்டிலிருந்து 16 ஆம் இடத்திலிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

# கிழக்கில் 80 மில்லியன் டொலர் செலவில் மின்சாரத் திட்டங்கள்

## சீனா-ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி

(கொழும்பு)

கிழக்கில் 80 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் 374 மின்சாரத் திட்டங்களை ஆரம்பிக்க மின்சக்தி, எரிசக்தி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் 127 திட்டங்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 111 திட்டங்களும் அம்பாறை மாவட்டத்தில் 136 திட்டங்களும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இத்திட்டங்களுக்கு சீனா 60 மில்லியன் டொலரை கடனுதவியாக வழங்கவுள்ளதுடன் ஆசிய அபிவிருத்தி வங்கி 20 மில்லியன் டொலரை நிதியுதவியாக வழங்குகின்றது.

இதேவேளை புதிதாக ஆயிரத்து 865 பேருக்கு மின் இணைப்பும் வழங்கப்படவுள்ளதாகவும் மின்சக்தி, எரிசக்தி அமைச்சு தெரிவிக்கின்றது.

அடுத்த வருட முடிவுக்குள் கிழக்கு மாகாணத்திற்கு 100 வீதம் மின்சார வசதி வழங்க அமைச்சு எதிர்பார்க்கின்றது. (ஸ்ரீ-2)




## இன்று ஒரு தகவல்

# ஆயுள் கடன்

ஆண்டவன் உயிரினங்களைப் படைத்தார். அதன்பின் அந்த உயிரினங்களுக்கெல்லாம் ஆயுள்காலம் எவ்வளவு என்பதை முடிவு செய்ய வேண்டியிருந்தது.

அனைத்து உயிர்களையும் சமமாகவே படைத்திருக்கின்றோம். அப்படி இருக்கும் போது அவற்றின் ஆயுள் காலத்தில் மட்டும் வேறுபாடு எதற்கு? என்று நினைத்தார். எனவே, எல்லா வற்றிற்கும் சராசரியாக 30 வயது என்று முடிவு செய்தார். நான்கு உயிரினங்களுக்கு மட்டும் இந்த முடிவில் திருப்தி ஏற்படவில்லை. அவை ஆண்டவனிடம் முறையிட விரும்பின.

முதலில் கழுதை வந்து நின்றது.

"ஆண்டவனே! நான் வாழ்நாள் முழுவதும் பொதி சுமந்து காலம் தள்ள வேண்டியவன். என் ஆயுள் 30 வருடம் என்பது அதிகமாகத் தோன்றுகிறது. அதைக் கொஞ்சம் குறைத்தால் நல்லது" என்றது.

ஆண்டவன் பார்த்தார்.

அதன் ஆயுளை 18 ஆண்டுகளாக குறைத்து விட்டார்.

அடுத்து நாய் வந்து நின்றது. "ஆண்டவா என் பிழைப்பே நாய்ப்பிழைப்பு. எனக்கு எதற்கு 30 வருடம்" என்று கேட்டது.

"சரி, உன் ஆயுளை 12 வருடங்களாகக் குறைத்து விடுகிறேன்"என்றார் கடவுள்.

அடுத்து குரங்கு வந்து நின்றது.

"சுவாமி எனது சேஷ்டைகள் எப்படிப்பட்டவை என் பதைத் தாங்கள் நன்றாக அறிவீர்கள். எப்பொழுதும் மரத்திலும் கிளையிலும் தொங்கிக் கொண்டிருக்கப் போகிறேன். எனக்கு எதற்கு 30 வருடம்?" என்று கேட்டது.

உடனே கடவுள் "நீ சொல்வது நியாயம்தான். உனது ஆயுள் 10 வருடங்கள்" என்று முடிவு செய்தார்.

இறுதியாக மனிதன் வந்து நின்றான். "கடவுளே எனக்கு 30 வருடங்கள் போதாது. நான் இந்த உலகில் அனுபவிக்க வேண்டியவை அதிகம். எனவே, ஆயுளைக் கொஞ்சம் அதிகப்படுத்திக் கொடுத்தால் நல்லது" என்றான்.

கடவுள் யோசித்தார்.கழுதையிடம் குறைத்த 12 வருடங்கள், நாயிடம் குறைத்த 18 வருடங்கள், குரங்கிடம் குறைத்த 20 வருடங்கள் ஆகிய அனைத்தையும் சேர்த்து மனிதனிடம் கொடுத்து விட்டார்.

பிரச்சினை தீர்ந்தது கடவுளுக்கு. மனிதனுக்கு பிரச்சினை ஆரம்பமாயிற்று.

ஆமாம், அதன் பலனை இப்பொழுது அனுபவிக்கின்றான். ஆண்டவன் அவனுக்கென்று கொடுத்த 30 வருடங்கள் அவன் மகிழ்ச்சியாக வாழ்கின்றான். அது அவனுக்கென்று விதிக்கப்பட்ட ஆயுள். அடுத்த 12 வருடங்கள் கழுதையிடமிருந்து வாங்கியது. அதனால் கழுதை மாதிரி குடும்பப்பாரத்தை சுமக்கின்றான்.

அடுத்த 18 வருடங்கள் நாயிடமிருந்து வாங்கியது அல்லவா எனவே, அந்தச் சமயத்தில் அவன் சொத்து சேர்ப்பதற்காக அல்லது சேர்த்த சொத்தை காப்பதற்காக நாய் மாதிரி அலைகிறான்.

அடுத்த 20 வருடம் குரங்கிடமிருந்து வாங்கியது. அந்தச் சமயத்தில் மரியாதை இழந்து யார் என்ன சொன்னாலும் அவர்களது சொற்படி ஆடவேண்டிய கடமை.

அன்றைக்கு வாங்கிய ஆயுள் கடனை இன்றைக்கு இந்த விதமாக தீர்த்துக் கொள்கிறான் மனிதன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரிகள் தொடர்பான கருத்தரங்கு

உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தினால் வரி செலுத்துநர் சேவைப்பிரிவின் அனுசரணையுடன் எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூட த்தில் உள்நாட்டு இறைவரி ஆணை யாளர் அதிபதி கே.எம். எஸ் கந்தே கெதரவின் தலைமையில் வரி விதிப்பனவு தொடர்பான கருத்தரங்கு (விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்) இடம் பெறவுள்ளது.

கிளிநொச்சி வர்த்தக சங்கம் வரி செலுத்துவோர் மற்றும் வரி ஆலோசகர்களின் வேண்டுகோளிற்கிணங்க, இக்கருத்தரங்கு நடை பெறவுள்ளது.

இதில் வர்த்தகர்கள், கணக்காளர்கள், பொது மக்கள் மற்றும் வரி விடயத்தில் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து பயன் பெறு மாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேலும் இக் கருத்தரங்கில் பங்குபற்றுவதன் முலம் வருமானவரி (IT), தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கானவரி(NBT), பெறுமதி சேர்வரி(VAT), பொருளாதார சேவைக்கட்டணம் (ESC), முத்திரைத்தீர்வை (Stamp Duty) ஆகியவை தொடர்பான தெளிவான விளக்கத்தையும் கடந்த வரவு -செலவுத் திட்டத்தில் அறிவிக்கப் பட்டுள்ளதிருத்தங்களையும் பெற்றுக் கொள்ள முடியுமென உள்நாட்டு இறைவரித் திணைக் களத்தின் யாழ். பிராந்திய பிரதி ஆணையாளர் பா.சிவாஜி தெரிவித்து ள்ளார்.

இக் கருத்தரங்கிற்கான அனுமதி இலவசம் என்பதுடன் இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 021 2222076 என்ற தொலைபேசியுடன் தொடர்பு கொள்ள முடியும் (ஸ்ரீ)

# யாழ். உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தால் மீள்பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் கடந்த 2002 ஆம் ஆண்டிற்கு முன்னரான காலப்பகுதிகளில் எச்என்டிஏ, எச்என்டிசி, எச்என்டிஎம், என்டிபிஎவ், என்டிஈ ஆகியவற்றின் இறுதிப் பரீட்சைகளில் சித்தியடையத் தவறியவர்களிற்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

இதற்கான பரீட்சைகள் யாழ்ப்பாண உயர் தொழில் நுட்பவியல் நிறுவனம் மற்றும் தெகிவளை உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் ஆகியவற்றில் நடைபெறவுள்ளது.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை www.Sliate.net/ அல்லது www.jatialumini, org ஆகிய இணையத்தளங்களின் ஊடாகத் தரவிறக்கம் செய்ய முடியும். அல்லது நிறுவனத்திலும் பெற்றுக் கொள்ளமுடி யும்.

அத்துடன் முடிவுத் திகதி எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை எனவும் மேலதிக விபரங்களை நிறுவன விளம்பர பலகையில் பார்வையிட முடியுமென பதிவாளர் ந.உமாகாந்த் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 90 | 100 | 100 |
| தக்காளி | 90 | 140 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 |
| கோவா | 50 | 40 | 60 |
| கரட் | 120 | 160 | 130 |
| பூசணி | 40 | 50 | 50 |
| புடோல் | 30 | 40 | 60 |
| வாழைக்காய் | 40 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 80 |
| பெரிய வெங்காயம் | 65 | 60 | 70 |
| பாகற்காய் | 70 | 60 | 90 |
| வெண்டிக்காய் | 70 | 60 | 70 |
| கருணைக் கிழங்கு | - | 80 | 100 |
| பயற்றங்காய் | 80 | 100 | 90 |
| லீக்ஸ் | - | 120 | 120 |
| பீற்றூட் | 50 | 50 | 60 |
| கறிமிளகாய் | 120 | 100 | 130 |
| முருங்கைக்காய் | 450 | 500 | 500 |
| போஞ்சி | - | 160 | 120 |
| கத்தரிதம்புள்ள | 30 | 30 | 30 |
| கீரை - 1 பிடி | 5-15 | 20 | 20 |
| தேசிக்காய் | 50 | 40 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 50 |

# இராசி பலன்

*01.04.2011.*
*(பங்குனி 18, வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.10 மணிக்கு*
*திரயோதசி பிற்பகல் 4.38 மணிவரை*
*சதயம் முற்பகல் 9.52 மணிவரை*
*இராகுகாலம் 10.41-12.11 மணிவரை*
*சுப நேரம் 6.11-7.41 மணிவரை*
*உலக கோமாளிகள்தினம்*

**மேடம்** வருமானம் அதிகரித்து வளம் காணும் நாள், கந்தன்வழிபாடு ஆறுதலைத்தரும், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், உறவினர் வருகையுண்டு.

**இடபம்** ஆடை ஆபரணங்கள் சேர்க்கையுண்டு, செல்வாக்கு அதிகரிக்கும் நாள், சொன்ன சொல்லைக்காப்பாற்றி மகிழ்வீர்கள், உற்சாகமான நாள்.

**மிதுனம்** இறைவழிபாட்டால் பெருமை சேர வேண்டிய நாள், மங்கையரால் ஏற்பட்ட மனக்கலகம் மாறும், முன்னோர் சொத்துக்களில் ஏற்பட்ட தகராறுகள் விலகும்.

**கடகம்** விநாயகர் வழிபாட்டால் கஷ்டங்கள் குறையும் நாள், விலையுயர்ந்த பொருட்களை கையாள்வதில் கவனம்தேவை, உடல் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டவேண்டிய நாள்.

**சிங்கம்** உறவினர் வருகையால் உள்ளம் மகிழும் நாள், வாழ்க்கைத் துணைவழியே வரவு வரலாம், தொழில் முன்னேற்ற முண்டு.

**கன்னி** முன்னேற்றம் காண முயற்சியெடுக்கும் நாள், பல நாட்களாக வசூலாக்கப்படாத கடன்கள் திடீரென வசூலாகலாம், தேகாரோக்கியமுண்டு.

**துலாம்** வளர்ச்சி கூடும் நாள்,தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும், பிள்ளைகளால் பெருமை சேர வேண்டிய நாள், முன்னேற்றத்திற்கு பெண்வழி ஒத்துழைப்பு கிடைக்கும்.

**விருச்சிகம்** சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, வாகன சுகமுண்டு, சுப செலவுகள் ஏற்படலாம்.

**தனுசு** பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும், நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவுவர், வியாபார விரோதம் குறையும், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், குடும்பத்தில் சுகங்களும் சந்தோங்களும் அதிகரிக்கும், பணவரவு திருப்தி தரும், உத்தியோக உயர்வுண்டு.

**கும்பம்** கணபதிவழிபாடு மன அமைதியைக் கொடுக்கும், ஒருசில வேலைகளுக்காக பலமணிநேரம் காத்திருக்கவேண்டி வரலாம், சிந்தனை மிகுதியுண்டு.

**மீனம்** சுப செய்திகள் அதிகரிக்கும் நாள், ஆதாயம் இல்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், மாலைநேரம் மகிழ்ச்சிக்குரிய பயணமொன்றுஇடம்பெறலாம்.

வளவன்

# தீவக கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி முடிபுகள்

தீவக கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி முடிபுகள் தீவக கல்வி வலயத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளன. இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு,

(நேற்றைய தொடர்ச்சி)

## ஆண்களுக்கான போட்டிகள்

### நீளம் பாய்தல்

பி.சிவதீபன் (யா/சென்.அன்ரனிஸ் கல்லூரி), கே.நிதர்சன் (யா/சென்.அன்ரனிஸ் கல்லூரி), பி.பத்மமேனன் (யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.)

### உயரம் பாய்தல்

எஸ்.டனிதாஸ் (யா/அனலைதீவு சதாசிவ ம.வி.), ஐ.ஜெசிந் (யா/வேலணை மத்திய கல்லூரி), எஸ்.டேமிஜன் மிலான் (யா/நெடுந்தீவு ம.வி.)

### முப்பாய்ச்சல்

பி.சிவதீபன் (யா/சென்.அன்ரனிஸ் கல்லூரி), பி.துவாரகன் (யா/நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட ம.வி.), பி.பத்மமேனன் (யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.)

### குண்டு எறிதல்

எஸ்.டனிதாஸ் (யா/அனலைதீவு சதாசிவ ம.வி.), கே.நிதர்சன் (யா/சென்.அன்ரனிஸ் கல்லூரி), எஸ்.பிரசாந் (யா/புங்குடுதீவு ம.வி.)

### தட்டெறிதல்

எஸ்.லஸ்ரின் (யா/சென்.அன்ரனிஸ் கல்லூரி), எஸ்.சசிகரன் (யா/அனலைதீவு சதாசிவ ம.வி.), ரி.சத்தியராஜன் (யா/யாழ்ற்ரன் கல்லூரி)

### ஈட்டியெறிதல்

எஸ்.லஸ்ரின் (யா/சென்.அன்ரனிஸ் கல்லூரி), ஆர்.டென்சன் (யா/புங்குடுதீவு ம.வி.), ஏ.கிரிபன் (யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தி.)

## 21 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்கள்

### 100 மீற்றர்

ஜே.ஹரிபிரதாஸ் (யா/சென்.அன்ரனிஸ் கல்லூரி), எம்.கார்த்தீபன் (யா/நயினாதீவு ம.வி.), பி.கொலின்டயஸ் (யா/சென்.அன்ரனிஸ் கல்லூரி)

### 200 மீற்றர்

ஏ.அருள்ராஜ் (யா/சென்.அன்ரனிஸ் கல்லூரி), ஏ.தர்சன் (யா/நெடுந்தீவு ம.வி.), பி.கொலின்டயஸ் (யா/சென்.அன்ரனிஸ் கல்லூரி)

### 400 மீற்றர்

ஏ.டொமிங்கோ (யா/சென்.அன்ரனிஸ் கல்லூரி), என்.ஜெனற் ராஜின் (யா/நெடுந்தீவு ம.வி.), ஏ.அருள்கபில்ராஜ் (யா/சென்.அன்ரனிஸ் கல்லூரி)

### 800 மீற்றர்

என்.ஜெனற் ராஜின் (நெடுந்தீவு ம.வி.), ஏ.அருள்ராஜ் (யா/சென்.அன்ரனிஸ் கல்லூரி), ஜீ.பகீரதன் (யா/சென்.அன்ரனிஸ் கல்லூரி)

### 1500 மீற்றர்

என்.ஜெனற் ராஜின் (நெடுந்தீவு ம.வி.), ஏ.அருள்ராஜ் (யா/சென்.அன்ரனிஸ் கல்லூரி), ஜீ.பகீரதன் (யா/சென்.அன்ரனிஸ் கல்லூரி)

### 5000 மீற்றர்

ஜீ.பகீரதன் (யா/சென்.அன்ரனிஸ் கல்லூரி), ரி.சுலக்ஷன் (யா/சென்.அன்ரனிஸ் கல்லூரி)

### 4×100 மீற்றர் அஞ்சல்

யா/சென்.அன்ரனிஸ் கல்லூரி, யா/நெடுந்தீவு ம.வி., யா/வேலணை மத்திய கல்லூரி

### 4×400 மீற்றர் அஞ்சல்

யா/சென்.அன்ரனிஸ் கல்லூரி, யா/யாழ்ற்ரன் கல்லூரி

### நீளம் பாய்தல்

ஏ.டொமின்கோ (யா/சென்.அன்ரனிஸ் கல்லூரி), ஏ.அன்ரன் அமலதாஸ் (யா/நெடுந் தீவு ம.வி.), ஏ.அருள் கபில்ராஜ் (யா/சென். அன்ரனிஸ் கல்லூரி)

### உயரம் பாய்தல்

ரி.சசிதரன் (யா/வேலணை மத்திய கல்லூரி), ரி.சுலக்ஷன் (யா/சென்.அன்ரனிஸ் கல்லூரி), பி.சசிதரன் (யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.)

### முப்பாய்ச்சல்

ஏ.டொமின்கோ (யா/சென்.அன்ரனிஸ் கல்லூரி), ஏ.அருள் கபில்ராஜ் (யா/சென். அன்ரனிஸ் கல்லூரி), ரி.கிறிஸ்ரி அஜந்தன் (யா/புங்குடுதீவு ம.வி.)

### குண்டு எறிதல்

ஏ.யூட் பிறின்சன் (யா/சென்.அன்ரனிஸ் கல்லூரி), ஜே.கனிஸ்ரன் (யா/சென்.அன்ரனிஸ் கல்லூரி), ஏ.எட்வின் உதயராஜா (யா/நெடுந்தீவு ம.வி.)

### தட்டு எறிதல்

ஏ.யூட் பிறின்சன் (யா/சென்.அன்ரனிஸ் கல்லூரி), கே.முகுந்தகுமார் (யா/வேலணை மத்திய கல்லூரி), ஜே.சஞ்ஜீவன் (யா/நெடுந்தீவு ம.வி.)

### ஈட்டி எறிதல்

ஏ.எட்வின் உதயராஜ் (யா/நெடுந்தீவு ம.வி.), ஏ.யூட் பிறின்சன் (யா/சென்.அன்ரனிஸ் கல்லூரி), ரி.கண்ணதாசன் (யா/புங்குடுதீவு ம.வி.)

(தொடரும்)

# அடையாள அட்டை கண்டெடுப்பு

வவுனியா, கூமாங்குளத்தைச் சேர்ந்த ரத்னேஸ்வரன் சாந்தரூபன் என்பவரது 822183395v எனும் இலக்கமுடைய அடையாள அட்டையும் ஆவணங்கள் அடங்கிய கைப்பையும் கண்டெடுக்கப்பட்டு வலம்புரி காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே உரியவர் அலுவலக நேரத்தில் நேரில் சமுகம் தந்து பெற்றுக்கொள்ளவும். (ஸ்ரீ-2)

# வங்கி வைப்புப் புத்தகம் கண்டெடுப்பு

கைதடி நாவற்குழி தெற்கைச் சேர்ந்த முருகானந்தம் சுதாகரன் என்பவரது சேமிப்புக் கணக்கு வைப்புப் புத்தகம் கண்டெடுக்கப்பட்டு வலம்புரி காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. எனவே, அலுவலக நேரத்தில் நேரில் வந்து ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும். (ஸ்ரீ-2)

# விண்ணப்பம் கோரல்

யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் க.பொ.த உயர்தரம்-2013 கணித, விஞ்ஞான, கலை, வர்த்தகப் பிரிவில் கல்வி கற்க விரும்பும் மாணவர்கள் விண்ணப்பப் படிவத்தினை பாடசாலையில் பெற்று எதிர்வரும் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு அதிபர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# புதிய கணித அறை திறப்பு விழா

கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் புதிதாகப் புனரமைக்கப்பட்ட உபகரணங்களுடன்கூடிய கணித அறை நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு வடமராட்சி வலய கணிதபாட உதவிக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெறவுள்ளது. இக்கணித அறையை வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா திறந்துவைக்கவுள்ளார். அத்துடன் கடந்த 2010ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட வலயமட்ட கணித வினாடிவினாப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளது. (ஸ்ரீ-3-19)

# பிரித்தானியாவிலுள்ள இலங்கை தமிழரை கைதுசெய்ய இன்ரர்போல் பிடியாணை

ஆட்கடத்தல் வலையமைப்பை இயக்கி வருபவர் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பிரித்தானியாவில் உள்ள இலங்கைத் தமிழரை சர்வதேச பொலிஸ் அமைப்பான இன்ரர்போல் கைது செய்வதற்கான பிடியாணையைப் பிறப்பித்துள்ளது.

இலங்கை அதிகாரிகளால் தேடப்படும் சந்தேகநபரான சண்முகசுந்தரம் கந்தஸ் கரன் என்ற 40 வயதுடைய குறித்த நபர் கடத்தல், ஆட்கடத்தல், சட்டவிரோத குடியேற்றம் மற்றும் பயங்கரவாதம் ஆகிய குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர் என இன்ரர்போல் இணையத்தளம் தகவல் வெளியிட்டுள்ளது.

குறித்தநபர் சட்டவிரோதமாக கடந்த 2009 ஆம் ஆண்டு 76 இலங்கையர்களை பயணிகள் கப்பலில் கனடாவிற்கு அனுப்பியுள்ளார். இலங்கை அரசாங்கத்தின் நம்பத் தகுந்த வட்டாரங்களின் தகவலின்படி இலங்கையில் பிறந்த குறித்த நபர் நொண்டி சங்கர் என்று அழைக்கப்படுவதாகவும் பிரித்தானிய கடவுச் சீட்டைக் கொண்டுள்ளவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தோனேசியா, தாய்லாந்து, மலேசியா மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகளில் ஆட்கடத்தல் வலையமைப்பை இயக்கி வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தெற்காசிய நாடுகளிலேயே பாரிய ஆட்கடத்தல் வலையமைப்பை இயக்கி வருவதாகவும் ரவிசங்கர் என்ற கனேடியருடன் இவர் ஓசன் லேடி கப்பலில் ஆட்கடத்தலை ஒழுங்கமைத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கம்போடியாவில் ஓசன் லேடி என்ற பெயரில் கப்பலைப் பதிந்துள்ளார்.

கடந்த 2009ஆம் ஆண்டு கொலம்பிய கடற்பரப்பில் இருந்து 76 இலங்கையர்களுடன் கப்பல் புறப்பட்டு மலேசியாவில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

அதன்பின் 10 மாதங்களுக்குப்பின் எம்.வீ.சன் சீ கப்பல் 492 இலங்கையர்களுடன் தாய்லாந்தில் இருந்து கனடா நோக்கி புறப்பட்டுள்ளது எனத் இன்ரர்போல் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)

union assurance
Trust in your tomorrow, today.
வேலைவாய்ப்பு
Join us as an Insurance Adviser to experience what you hoped for...
රක්ෂණ උපදේශකයෙකු ලෙස අප හා අත්වැල් බැඳගන්නා ඔබගේ සිහිනයන් නිසැකවම අපි සැබෑ කරන්නෙමු...
உங்கள் நம்பிக்கைக்குரிய அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள காப்புறுதி ஆலோசகராக எம்மோடு இணைந்து கொள்ளுங்கள்.




இணையுங்கள் உங்கள் வாழ்க்கையை வெற்றியாக்க (யாழ்ப்பாணம், வன்னிப்பிரதேசங்களைச் சேர்ந்தவர்களுக்கான வேலைவாய்ப்பு) இலங்கையில் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான யூனியன் அஷ்யூரன்ஸ் யாழ்.மாவட்ட கிளைக்கு பின்வரும் பதவிகளுக்குத் தகுதியானவர்களுக்கு உடனடி நியமனம் வழங்கவுள்ளது.

பதவி வெற்றிடங்கள்

சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி முகாமையாளர் → பதவி - 5
பதவி - 4 ← தனிப்பட்டோர் நிதி முகாமையாளர்
சிரேஷ்டதனிப்பட்டோர் நிதி ஆலோசகர் → பதவி - 3
பதவி-1
பதவி - 2 ← தனிப்பட்டோர் நிதி ஆலோசகர்
காப்புறுதி ஆலோசகர்

அடிப்படைத் தகைமைகள் :-
- க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- காப்புறுதித்துறையில் முன்னனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
- விளையாட்டுத் துறையில் திறமையுள்ளவர்கள்.
- தற்போது A/L பரீட்சைக்கு தோற்றியவர்களும் நேர்முகத் தேர்விற்கு தோற்றலாம்.
- வன்னிப்பிரதேசத்தில் வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருக்கும் இளைஞர், யுவதிகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
- உங்களது இலக்கை அடைவதற்கான உறுதியான மனோநிலை.
- உங்கள் வெற்றியை நோக்கி பணிபுரிவதற்கான ஆர்வம்.
- திடசித்தம்.

யூனியன் அஷ்யூரன்ஸில் இணைவதன் ஊடாக நீங்கள் காப்புறுதி உலகில் அங்கீகரிக்கப்படுகிறீர்கள்.

குறிப்பு:- ஏற்கனவே வேறு தொழில் துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களும் தமது வருமானத்தை மேம்படுத்த எமது நிறுவனத்தில் பகுதி நேரமாக வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

ஏன் தயக்கம் :- தோற்றுங்கள் நேர்முகத் தேர்வுக்கு சுயவிபரக் கோவையுடன்

காலம் :- செவ்வாய்க்கிழமை - 04.04.2011
நேரம் :- மு.ப 9.00 மணி
இடம் :- யூனியன் அஷ்யூரன்ஸ்,
139, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-2841)

திருமதி ச.சுகன்யா
அபிவிருத்தி உத்தியோகத்தர்
தொ.பே: 077 3668851

# காசநோய் சமூக அணுகுமுறை

(23)

## காசநோய்க்கான விழிப்புணர்வு

காசநோய் தொடர்பாக சமூகத்தில் விழிப்பூட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். காசநோயாளருக்கு இலகுவில் இலவசமாக சிகிச்சை கிடைப்பதற்கு உதவலாம். இனம் காணப்பட்ட காசநோயாளிகள் ஒழுங்காக ஆறுமாதங்கள் மருந்தினை உள்ளெடுக்கின்றார்களோ என்பதனைக் கண்காணிக்கலாம். காசநோயாளிகளுக்கும்,அவர்களது குடும்பத்திற்கும் ஆதரவு நல்கலாம்.

**காசநோய் பரவாது இருப்பதற்கான பொதுவான அறிவுரைகள்**

காசநோய் ஏற்படாது தடுக்க நோயைப் பரப்புவோரைக் கண்டுபிடித்து அவர்களுக்குச்சரியாக சிகிச்சை பெறவைத்தல் இன்றியமையாததாகும். நோயாளிகள் சரியான சிகிச்சையினை பெற அவரது குடும்பத்தவர்களும் உதவவேண்டும். அப்பகுதிச் சுகாதார சேவையாளர்களும் இதற்கு உதவ வேண்டும். காற்றோட்டமான சூரிய ஒளி படும் இடத்தில் வசித்தல் வேண்டும். காசநோய்க் கிருமிகள் காற்றில் 6 மணி நேரம் வரை இருக்கும். 20 நிமிடத்தில் சூரிய ஒளியில் அழிந்துவிடும்.

பொதுவான சுகாதாரப் பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். இருமும் போதும், தும்மும்போதும் மூக்கு வாய்ப் பகுதியினைக் கைக்குட்டையினால் மூடிக் கொள்ள வேண்டும். கண்ட கண்ட இடங்களில் சளி, எச்சில் துப்புவதைத் தவிர்த்தல் வேண்டும். நோயாளியில் சளியைக் கவனமாகச் சேகரித்து ஆழமாகப் புதைத்துவிடல் அல்லது எரித்துவிடல் வேண்டும்.

பொதுஇடங்களில் கண்ட கண்டபடி துப்பாது இருப்பதற்குரிய கவிதை

"துப்பாதே துப்பாதே தூயவிடத்தில் துப்பாதே

துப்பாதே துப்பாதே தூயவிடமாக்கத் துப்பாதே

தப்பாது தப்பாது அப்பாலும் தயவுகாட்டு – நீ

எப்போதும் எவரெதிரிலும் துப்பாயெனச் செப்பு"

**கிராமிய காசநோய்க் கட்டுப்பாளர்கள்**

காசநோய் நகரம், கிராமம் சேரிப்புறம் எனப் பிரதேச வேறுபாடுகள் இன்றிக் காணப்படுகின்றது.எனவே காசநோயாளர்களை இலகுவில் இனம் காணப்பட்டு சிகிச்சை பெற வெவ்வேறு வழிகளை நாடல் வேண்டும்.

நகரத்தின் வர்த்தக நிலையங்கள் மற்றும் தொழில் நிலையங்கள் என்பவற்றில் காசநோய் தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்வுகள் அமைதல் வேண்டும்.தனிப்பட்ட வைத்திய நிலையங்களிலும் சளிப்பரிசோதனை செய்வதற்கு அதாவது 2கிழமைகளிற்கு மேல் இருமல் காணப்படின் சளிப்பரிசோதனை செய்வதற்கு வசதிகள் அமைக்கப்படல் வேண்டும். நகரங்களில் உள்ள கழகங்கள் கிராமத்தில், சேரிகளில் காசநோய் தடுப்பில் உதவ வேண்டும்.

கிராமத்தில் கிராமிய காசநோய்க் கட்டுப்பாட்டாளர்கள், விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.நோய் அறிகுறி உடையவர்களை சளிப்பரிசோதனைக்கு உட்படுத்தி உதவலாம்.மேலும் சேரிகளில் மருந்துகளை கிரமமாக உட்கொள்வதனை அவதானிக்கலாம்.

சமூக ஒன்றிணைப்பினை ஏற்படுத்தி விழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். நோய் அறிகுறி உடையவர்களை மருத்துவ பரிசோதனைக்கு வழிகாட்டலாம்.

**காசநோய்க் கட்டுப்பாட்டில் பொதுநிறுவனங்களின் பங்களிப்பு**

1. நோயாளர்களுக்கு உணவுப் பொருட்களை அன்பளிப்புச் செய்யலாம்.

2. நோயாளர்களின் போக்குவரத்திற்கு உதவலாம்.

3.இரண்டு கிழமைகளிற்கு மேல் இருமல் காணப்படின் சளிப்பரிசோதனை செய்வதற்கு தனிப்பட்ட நுணுக்குக்காட்டி நிலையங்களை உருவாக்கலாம்.

**காசநோய்க்கட்டுப்பாட்டில் கிராமத்தில் தேவைப்படும் தலைமைத்துவப்பண்புகள்**

குறித்த இலக்கினை வைத்து செயற்படல் வேண்டும் .உதாரணமாக குறித்த கிராமத்தில் காசநோயினை இல்லாது செய்தல் என்ற நோக்கில் செயற்படல் வேண்டும்.

இதற்கு உரிய ஒழுங்கமைப்புக்களாக விழிப்புணர்வு நடவடிக்கைகள், சளிப் பரிசோதனை, மருத்துவ ஆலோசனை, மருந்து வழங்கல், மருந்தினைக் கைவிட்டவர்களை கண்டறிதல் எனத் திட்டமிட்டு செய்யக்கூடியவற்றை செய்யலாம்.


இதற்காக தனிப்பட்ட நலனிற்கும் சமூக நலனிற்கும் இணக்கப்பாடுகளை ஏற்படுத்தி ஒத்துழைப்பினை பெறல்வேண்டும். குறிப்பாக பல காச நோயாளிகள் கசிப்புக்குடிப்பவர்களாக உள்ளனர். எனவே கிராமங்களில் உள்ள பெரியர்வர்கள், இளைஞர்கள் இதற்கு ஒத்துழைப்பு நல்கலாம்.காசநோயினைக் கட்டுப்படுத்துவதில் கசிப்புப் பாவனையாளரிடம்விழிப்புணர்வு செய்து சளிப்பரிசோதனை செய்வது மிகவும் இன்றியமையாதது.

கிராமமட்டத்தில் காசநோய்க் கட்டுப் பாட்டில் ஈடுபடுபவர்கள் நோய் அறிகுறியுடையவர்களை நெறிப்படுத்துபவர்களாகவும் சிகிச்சையினை ஊக்குவிப்பவர்களாகவும் விளங்கல் வேண்டும். இவர்கள் சுகாதார சேவைக்கும் நோயாளிக்கும் இடையே இணைப்பினை ஏற்படுத்தக்கூடியவர்களாக திகழ்தல் வேண்டும். மேலும் சுகாதார சேவையினருக்கு உதவியாகவும் ஒத்துழைப்பவர்களாகவும் இருத்தல் வேண்டும். கிராம மட்டத்தில் காசநோயினைக் கட்டுப்படுத்த அதாவது காசநோய் இல்லாத சூழலை ஏற் படுத்த நடைமுறைப்படுத்த வேண்டியவற்றை அறிந்திருத்தல் வேண்டும்.

முதலில் தீர்மானிக்க வேண்டும்."எமது கிராமத்தில் காசநோய் பரவுவதை கட்டுப் படுத்துவோம். அல்லது எமது கிராமத்தில் காசநோயினை இல்லாது செய்வோம்" அல்லது எமது கிராமத்தில் காசநோயாளிகளுக்கு உதவிபுரிவோம் எனறு அடுத்து அதற்குரிய திட்டங்களை தயாரித்தல் வேண்டும். அதன் பின் ஆரம்பநிலையில் சிலவற்றினை அமுல் படுத்த வேண்டும். உதாரணமாக 2 கிழமைக்கு மேல் இருமல் இருப்பின் சளிப்பரிசோதனைக்கு வழிகாட்டல் இறுதியாக முழு மையாக அமுல்படுத்தல். உதாரணமாக கிராமத்தில் காசநோய் பரவக் கூடிய காச நோயாளராக இருக்கக் கூடிய கசிப்பு உற்பத்தியினையே இல்லாதுசெய்தல்.

**இவற்றிற்காக கிராமிய காசநோய்க் கட்டுப்பாட்டாளரிடம் இருக்கவேண்டிய பண்புகள்.**

1. சிறந்த முகாமைத்துவம் அவர்களது செயற்பாடுகள் முன்னேற்றத்திற்கு உதவக் கூடியதாக அமைதல் வேண்டும்.



Dr,சி.யமுனானந்தா, MBBS,DTCD
மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி,
மார்புநோய் சிகிச்சை நிலையம்,
பண்ணை,யாழ்ப்பாணம்.

2. சிறந்த தலைமைத்துவம் காசநோய் கட்டுப்பாட்டில் பிரயோசனமாக அமைதல் வேண்டும்.

3. தனிப்பட்ட வல்லமை கிராமத்தில் காசநோயின் தாக்கத்தினை வெளிப்படுத்தும் முறை பின்னூட்டலை பெறல் காசநோயாளர் கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை புரிந்து கொள்ளல்.

4. தமது பாத்திரத்தினை சரியாகச் செய்தல்.

5. தொடர்பாடல் திறமை தொடர்பாடல் வழிமுறைகளை அறிந்து கருத்துக்களை கூறல். தொடர்பாடலுக்கு தடையாக உள்ளவற்றை அறிதல். கூட்டாக கலந்துரையாடல், ஒன்றுபட்டு செயற்படல், நாடகங்கள் மூலம் செய்தியினைக் கூறல்.

6. ஒன்றுபட்டு ஒற்றுமையாக செயற்படல், குழுக்களினை அல்லது குறித்த இளைஞர் யுவதிகளை தனியாக சேர்த்து காசநோய் கட்டுப்பாட்டில் உதவுதல்.

7. சமூகத்தில் ஏனையவர்களினதும் பங்களிப்பினை பெறல். இவற்றின் மூலம் காசநோய் அறிகுறி உடையவர்கள் கண்டறியப்பட்டு சிகிச்சை அளிக்கப்படும் சூழலை உருவாக்கல் வேண்டும். காசநோய் நலன் பேணலில் அடிப்படை உரிமை பேணப்பட உதவுதல்.

8.காசநோய் கிசிச்சைக்கான தேவையினை உருவாக்கலாம். (தொடரும்)

# அரசின் அடக்குமுறைக்கு எதிராக பாரிய போராட்டம்

## அனைத்து பல்கலை. மாணவர் ஒன்றியம் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு எதிராக சகல சமூகங்களை ஒன்றிணைத்து பாரிய போராட்டங்களை முன்னெடுக்க போவதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அத்துடன்தற்போதைய உயர்கல்வி அமைச்சர் அந்த பதவிக்கு தகுதியானவர் அல்ல என மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் சஞ்சீவ பண்டார தெரிவித்துள்ளார். அரசாங்கத்தின் அரசியல் தேவைக்கு அமைய சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் உள்ள மாணவர் ஒன்றியத்திற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார். கொழும்பில் கடந்த 29 ஆம் திகதி நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

மாணவர் ஒன்றியம் சட்டவிரோத செயற்பாடுகள் எதிலும் ஈடுபடவில்லை. பல்கலைக்கழக நிர்வாகம் சுமத்தும் குற்றச்சாட்டுக் களில் எவ்வித உண்மையுமில்லை எனவும் உபவேந்தர் அரசாங்கத்தின் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப செயற்பட்டு இவ்வாறான பொய் குற்றச்சாட்டுக்களை தொடர்ந்தும் சுமத்தி வருவதாகவும் சஞ்சீவ பண்டார குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

தாவடி-கொக்குவில் ஸ்ரீ வட பத் திரகாளி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற் பகல் 10.30 மணிக்கு கொடியேற் றத்துடன் ஆரம்பமாகி பதினைந்து தின ங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு சப்பைரத உற்சவமும் எதிர் வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.45 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் பகல் 11 மணிக்கு சித்திரா பௌர்ணமி தின தீர்த் தோற் சவமும் மாலை 5.30 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ)

# விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் 206 பேர் இன்று விடுவிக்கப்படவுள்ளனர்

புனர்வாழ்வளிக்கப்பட்ட 206 முன்னாள் போராளிகள் இன்று வெள்ளிக்கிழமை விடுதலை செய்யப்படவுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுதந்தரணசிங்க தெரிவித்துள்ளார்.

இவர்களில் 205 ஆண் போராளிகளும் ஒரு பெண் போராளியும் உள்ளடங்குவதாக அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் போராளிகளை சமூகத்தோடு இணைக்கும் நிகழ்வு வவுனியா கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளதுடன் இந் நிகழ்வில் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் புனரமைப்பு அமைச்சர் சந்திர கஜதீர பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளதாக பிரிகேடியர் சுதந்தரணசிங்க தெரிவித்தார்.

இதேவேளை இதனை விட அதிகமான இன்னுமொரு தொகுதி புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளி சிங்கள –தமிழ் புத்தாண்டை முன்னிட்டு விடுவிக்கப்படவுள்ளதாக சுதந்த ரணசிங்க மேலும்குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# இலங்கையிலிருந்து அகதிகளாக செல்வோரின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

## அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையிலிருந்து அகதிகளாகச் செல்வோரின் தொகை குறைவடைந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் 10 வருடங்களுக்கு முன்பிருந்த அகதி அந்தஸ்து கோருவோரின் தொகை தற்போது அரைவாசியாகக் குறைந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் அறிக்கையின்படி கடந்த ஆண்டு 44 வளர்ச்சியடைந்த நாடுகளில் 3 இலட்சத்து 58 ஆயிரத்து 800 பேர் அகதி அந்தஸ்தைக் கோரியுள்ளனர். இது கடந்த 2001 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 42 வீத குறை வான எண்ணிக்கையாகும். இந்த எண்ணிக்கையில் சேர்பியர்களே முன்னிலை பெற்றுள்ளனர். (ஸ்ரீ-2)

# நினைவாற்றலை வளர்க்கும் முறைகள்

டாக்டர். எஸ். நாராயணராஜன்
M.B.A. Ph.D

"என்னால் படித்ததை நினைவில் வைக்க முடியவில்லை" என சில மாணவர்கள் கருதுகிறார்கள்.

"அத்தனை செய்திகளையும் மூளையில் போட்டு வைத்தால் அது எப்படித் தாங்கிக்கொள்ளும்?" என்றும் சிலர் கருத்துச் சொல்வார்கள்.

ஆனால் 'மனித மூளைக்கு மிக அபார திறமை இருக்கிறது' என ஆராய்ந்து அறிவியல் அறிஞர்கள் கண்டறிந்துள்ளார்கள். இவர்கள் "மனித மூளையில் இரண்டு 'குயிண்டிலியன்' (Quintillion) அளவுக்கு சின்னச் சின்ன செய்திகளை பாதுகாப்பாக சேமித்து வைக்கமுடியும்" என்று ஆராய்ந்து சொல்லியிருக்கிறார் கள்.

அதாவது ஒன்று என்ற எண்ணிற்குப்பிறகு 18 பூச்சியங்களைச் சேர்த்தால் எவ்வளவு மதிப்புவருமோ அதுதான் 'குயின்டிலியன்' என்பதன் மதிப்பாகும். அதாவது மனித மூளையின் சக்தி 40 விதமான மொழிகளை நினைவில் கொள்ளுகின்ற அளவுக்கு அபார சக்தி கொண்டது. இப்படி அதிக கொள்ளளவு கொண்ட மனித மூளையில், தேவையான அளவு தக வல்களைத் திரட்டிச் சேமித்துப் பாது காப்பாக, முறைப்படி வைக்காதது தான் இன்றைய மாணவ மாணவிகளது குறைபாடாகும்.

ஒரு நூலகத்தில் பலவிதமான புத்தகங்கள் உள்ளன. ஆனால் அந்தப் புத்தகங்கள் ஒழுங்கான முறையில் அடுக்கி வைக்கப்படவில்லை. இதனால் நமக்கு வேண்டிய புத்தகத்தை உடனே கண்டுபிடிக்க இயலாது. தேவையான புத்தகத்தை எளிதான முறையில் கண்டறிவதற்கு "புத்தகப்பட்டியல் அடங்கிய குறிப்பேடும் (Catalogue) அவசியம் தேவை"

இந்த நூலகம் போலவே நமது மூளையும் ஒரு "ஒழுங்கில்லாத நூலகம் (Disorganised) ஆகும். தேவையான புத்தகங்களை எளிதில் கண்டபிடிக்க உதவும் குறிப்பேடு போல மூளையில் குவிந்து கிடக்கும் தகவல்களையும் எளிதில் கண்டுபிடிக்க உதவும்.

குறிப்பேடு போல மூளையில் குவிந்து கிடக்கும் தவல்களையும் எளிதில் நினைவில் கொள்ள நமது மூளைக்கு நன்கு பயிற்சி கொடுக்க வேண்டும். குறிப்பிட்ட செய்திகளை குறிப்பிட்ட நேரத்தில் நினைவில் கொண்டுவரும் நினைவாற்றல் கலையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.


நினைவாற்றலை வளர்த்துக் கொள்வதற்கு பல வழிகள் உள்ளன.

அவற்றுள் ஒன்றுதான் தொடர்பு கொள்ளுதல் முறை (Association) முறையாகும். பொதுவாக நமது மூளையில் சேமித்து வைத்திருக்கின்ற தகவல்களை புதிதான தகவல்களோடு தொடர் புபடுத்தி பார்க்கின்ற பொழுதுதான் நாம் கற்ற பாடம் நினைவில் நிற்கின்றது. அறிவைப் பெருக்குவதற்கு தொடர்பு படுத்தல் மிகவும் உறுதுணையாக அமையும்.

சிறுகுழந்தையாக இருக்கின்ற பொழுது சில தகவல்களை நமக்குச் சொல்லியிருப்பார்கள். அவையெல்லாம் நம்மையறி யாமலேயே நம்முடைய மூளையில் தேக்கி வைக்கப் பட்டிருக்கும். நேரம் வரும் பொழுது அந்தச்செய்திகள் நம்மை அறியாமலேயே ஒன்றுக்கொன்று தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளும்.

உதாரணமாகப் பக்கத்து வீட்டில் பாம்பு வந்துவிட்டது என்று வைத்துக் கொள்வோம். அவர்கள் "பாம்பு பாம்பு" என்று சத்தம் போட்டு அழைக்கிறார்கள். அவர்கள் அருகில் சென்று "பாம்பு எங்கே சென்றது?" என்று கேட்டு நாம் தேட ஆரம்பிப் பதற்குள் நமது மனதில் எத்தனையோ விதமான எண்ணங்கள் வந்து நிழலாடும். சின்னக்குழந்தையாய் இருந்த போது பள்ளியில் பார்த்த பச்சைப்பாம்பு, பாம்பு கடித்து இறந்து போன மாமா பையன், பாம்புவடிவில் சினிமாவில் வந்த நாகக்கன்னி, பாம்புக்கடிக்கு அரைகுறையாகத் தெரிந்து வைத்திருந்த சித்த மருத்துவம். இப்படி கூடைகூடையாய் துண்டுத் தகவல்கள் பாம்பைப்பற்றி நம் எண்ணத்தில் தோன்றும். இவை யெல்லாம் நாம் அறிந்தோ அறியாமலோ தெரிந்து வைத்த தகவல்கள் தானே.

எனவே தான் ஒன்றுக்கொன்று தொடர்பு ஏற்படுத்தி ஒரு தகலை கவனமாக நினைவில்கொண்டால் அந்தத்தகவல் மனதில் நிலைத்து நிற்கும் என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.




உதாரணமாக நீங்கள் கீழக்கண்ட பத்து வார்த்தைகளை வரிசையாக நினைவில்வைக்க வேண்டும் என முடிவு செய்வதாக வைத்துக் கொள்வோம்.


1. மேசை
2. நண்பர்கள்
3. வியாபாரம்
4. உரையாடல்
5. பழக்கவழக்கம்
6. விளையாட்டு
7. செய்தியறிதல்
8. பாசம்கொள்ளுல்
9. வெற்றி
10. படிப்பு

மேலே குறிப்பிட்டுள்ள வார்த்தைகளை வரிசையாக நினைத்துக் கொள்ள ஒவ்வொரு வார்த்தைக்கும் இடையே நீங்கள் ஒரு தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளலாம். உதாரணமாக ஒரு புதிய சூழலை மனதில் உருவாக்கிக் கொள்ளலாம். உங்கள் பலசரக்குக் கடைமேசை அருகே உங்கள் நண்பர்கள் வந்து நின்று நீங்கள் வியாபாரம் செய்வதைக் கவனிக்கிறார்கள். நீங்கள் வாடிக்கை யாளரிடம் உரையாடல் செய்வதைப் பார்க்கிறார்கள். உங்கள் பழக்கவழக்கம் ஒரு விளையாட்டைப் போல இனிமையாக இருக்கும் செய்தி அறிந்ததால் உங்கள் மீது பாசம் கொள்கிறார்கள். உங்கள் வியாபார வெற்றி, உங்கள் சிறந்த படிப்பினால் தான் உருவானது என எண்ணு கிறார்கள்.

இப்படித்தொடர்பை ஏற்படுத்திப் பார்த்தால் மேலே குறிப்பிட்டுள்ள அத்தனை வார்த்தைகளும் வரிசையாக மனதில் தங்கிவிடும்.

நினைவாற்றறலை வளர்க்க உதவும் இன்னொருமுறை "காட்சிப் படுத்தல்" (Visualisaion) ஆகும். அதாவது மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலன்களால் பெறப்பட்ட தகவல்களை அல்லது செய்திகளை காட்சியாக மனதில் உருவாக்கி நினைவில் நிறுத்திக் கொள்வதை இது குறிக்கும்.

இந்த முறையில் ஒருதகவலை நினைவில் வைத்துக்கொள்ளும்போது கற்பனை (Imagination) செய்து ஒரு காட்சியை உருவாக்கிக்கொள்ளுவது அவசியமாகும். படைப்புத்திறன் (Creative power) மூலம் நினைவில் கொள்ளும் இந்த முறைமையை பல மாணவர்கள் தங்களின் நினைவாற்றலை வளர்த்துக்கொள்ள பயன் படுத்துகிறார்கள்.




உதாரணமாக வரலாற்றுப்பாடத்தில் ஐரோப்பியர்கள் இந்தியாவிற்கு வருகைதந்ததை நினைவில வைத்துக் கொள்ள வேண்டும் என ஒரு மாணவன் விரும்புகிறான். இந்த வரலாற்று நிகழ்ச்சிகளை நினைவில் வைத்துக்கொள்ள இந்தியாவிற்கு ஐரோப்பியர் வருகைதந்த காலத்தையும் அவர்களுடைய நாகரிக முறை எப்படி அமைந்திருக்கும்? என்ப தையும் முதலில் மனதில் கற்பனை செய்து கொள்ள வேண்டும். இந்தி யாவிற்கு வந்த போர்த்துக் கேயரான வாஸ்கோடகாமா கோழிக்கோடு என்னும் இடத்தில் கடற்பயணம் மூலம் வந்ததையும் அங்கு போர்த் துக்கேயர் வீழ்ந்த நிலையினையும் அதன் பின் டச்சுக்காரர்கள், ஆங்கி லேயர்கள், பிரஞ்சுக்காரர்கள் வந்த நிகழ்வுகளையும் அப்படியே மனதில் பதிய வைக்கலாம். எப்படியெனின் உங்களை ஒரு கடற்பயண வீரராக கற்பனைசெய்து கொள்ளுங்கள். நீங்களே இந்தியாவிற்கு வருவதைப் போலவும், இந்தியாவிலுள்ள வாழ்க்கைமுறை, வீடுகள், கைவினைக்கலை, உடைகள், தொழில்கள்ஆகிய முக்கியமானவற்றை நீங்கள் பார்ப்பதாக எண்ணிக்கொள்ளுங்கள். மேலும் நீங்கள் அந்த முக்கியமான இடங்களில் வாழ்வதைப் போலவே கற்பனையை உருவாக்கிக்கொண்டு அந்தக் காட்சிகளை ஒரு தொலைக் காட்சித் தொடர்போல நினைவில் நிறுத்திக்கொள்ளுங்கள். இதனால் வரலாற்றுப்பாடத்தில் உள்ள காட்சிகள் நினைவுபடுத்த வேண்டிய நேரத்தில் நம் நினைவில் எளிதில் வந்து தோன்றும்.


இப்படி நினைவில் நிறுத்த வேண்டிய தகவல்களை காட்சிகளாக மனதில் விரித்து நினைவில் பதிய வைக்க முயற்சி செய்வது நினைவா ற்றலை வளர்த்துக்கொள் வதற்கு உதவும் சிறந்த முறையாகும்.

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# இரசாயன உணவுச் சேர்மானங்களும் அவற்றினால் ஏற்படும் ஒவ்வாமையும்

சமீபகாலம் வரை உணவுப் பகுப்பாய்வானது உணவின் வாசனை மற்றும் அதனுடைய ஊட்டச்சத்து மதிப்பு என்ற வரம்பிற்கு உட்பட்டதாகவே இருந்தது.. இருப்பினும் உணவு மற்றும் சுகாதாரத்திற்கு இடையே உணவின் சேர்மானங்கள் முக்கிய பங்காற்றலாம் என்பதற்கான ஆதாரங்களும் இருக்கின்றன.

தாவரம், உணவு மற்றும் நுண் உயிர்கள் ஆகியவற்றிலிருந்து பெறப்படும் இர



சாயனச் சேர்மானங்கள் நீண்டகால சுகாதார மதிப்பு மிக்க மருத்துவப் பயன்களை வழங்குகின்றன. இவ் ஊட்டச்சத்து மருந்து இரசாயனங்களிற்கான உதாரணங்களாக புரோபயோட்டிக்குகள் (Probiotics), அண்டியொக்சைட்டுக்கள் (antioxides) மற்றும் பைதொகெமிக்கல்கள் (Phytochemical) ஆகியவை இருக்கின்றன. இவ்வகையான சில உணவுச் சேர்மானங்கள் அத்தியாவசியமானவையாகவும், நன்மை பயக்கக்கூடியனவாகவும் காணப்படுகின்றன. இருந்தபோதிலும் செயற்கையாக உருவாக்கப்படும் சில உணவுச் சேர்மானங்கள் ஒவ்வாமையை ஏற்படுத்துகின்றன.

தரமற்ற செயற்கை நிறங்கள் கலந்து உணவுப் பொருட்களைச் சாப்பிடுவதால் உடல் உறுப்புக்கள் பாதிப்படைகின்றன. செயற்கை நிறங்களில் இருக்கும் 'ஒரமின்' என்ற பொருள் கல்லீரல், சிறுநீரகங்களை பாதிப்படையச் செய்கிறது.

'மொட்டோனில்யெல்லோ' என்பது வயிறு, கல்லீரல் , சிறுநீரகம் போன்றவற்றைப் பாதிக்கின்றது. "ரோடமின் பி" என்பது இரத்தத்தில் இருக்கும் சிவப்பணுக்களை அழித்து உடலில் எதிர்ப்புச் சக்தியைக் குறைக்கும்.

சில வகை உணவுப் பொருட்கள் பழுதடையாமல் இருப்பதற்கு சில ஏசோ சாயங்கள் (Azo dyes) கார்மோசின், அமராந்த், எரித்ரோசின், சொக்லெட் பிரவுன் போன்ற இரசாயனங்கள் சேர்க்கப்படுகின்றன. உதாரணமாக ஜாம், சோஸ் போன்ற உணவுப் பொருட்களிலும் அன்னாசி, செரி, பப்பாளி, மாம்பழம் போன்ற பதப்படுத் தப்பட்ட பழங்களிலும், மென்பானங்களிலும் இவ்வகைச் செயற்கை நிறச்சாயங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவை சில சமயங்களில் ஒவ்வாமையை உண்டு பண்ணுகின்றன.

உணவின் சுவை, வாசனையை அதிகரிப்பதற்கும் உணவைப் பாதுகாப்பதற்கும் சில உணவு அமிலங்கள் சேர்க்கப்படுகின்றன. உணவு அமிலங்களாக சிற்றிக்கமிலம் (citric acid) , டாட்டாரிக் அமிலம் (tartaric acid), மலிக்கமிலம் (malic acid), பியூமரிக்கமிலம் (fumeric acid), இலற்றிக்கமிலம் (lactic acid) என்பன பாவிக்கப்படுகின்றன.

உணவைப் பழுதடையாமல் நீண்ட காலம்



பாதுகாப்பதற்கு சல்பைற் (sulphite), பென்சோயிக்கமிலம் (benzoic acid) , பராபெண்ட் (parabents) என்பன பயன்படுத்தப்படுகின்றன.

$SO_2$, சோடியம் சல்பைட், சோடியம் இரு சல்பைட், பொட்டாசியம் இரு சல்பைட், பொட்டாசியம் மெற்றாசல்பைட் என்பன உணவை பாதுகாப்பதற்காக உணவில் சேர்க்கப்படுகின்றன. சல்பைட்டுக்கள் ஆஸ்துமா (Asthma) வை ஏற்படுத்துகின்றன.

குளிர்பானம், பழரசம் என்பவற்றை நீண்ட காலத்திற்கு பழுதடையாமல் பாதுகாக்கவும், திராட்சை ரசத்தை (wine) சுத்தமாக வைத்திருப்பதற்கும், அதன் நிறம் மாற்றமடையாமல் இருப்பதற்கும் சல்பைட்டுக்கள் உணவில் சேர்க்கப்படுகின்றன.



சல்பைட்டுக்கள், நைத்திரைட்டுக்கள், நைத்திரேற்றுக்கள், சோடியம் பென்சோவேட் (sodium benzoate) அடங்கிய உணவுச் சேர்மானங்கள் மற்றும் அஜினமோட்டோ போன்ற பொருட்களில் உள்ள மொனோசோடியம் குளுடாமேட் (Mono sodium glutamate) போன்றன பல விதமான ஒவ்வாமை பாதிப்புக்களை உண்டாக்கக் கூடியன.

சல்பைட் ஆனது விற்றமின் B ஐ அழிக்கிறது. அத்துடன் குறைந்த இரத்த அழுத்தம், பலவீனம், ஆஸ்துமா போன்றவற்றை உருவாக்ககூடியது.

சில தொகுக்கப்பட்ட பீனோலிக் அண்டியொக்சியன்ட்களாவன: (Phenolic antioxidants), Butylated hydroxy ansole (BHA), Butylated hydroxy toluene (BHT) இவை காற்றுப் புகாமல் இருக்க குழந்தைகளின் உணவுகளில் பயன்படுத்தப்படுகின்றன. இவை சிலருக்கு தோலில் தடிப்பையும் (Urticaria) உதடு , கண் , காது , தொண்டை போன்ற இடங்களில் வீக்கத்தையும் , ஆஸ்துமாவையும் ஏற்படுத்தக் கூடியன. Aspartame, மொனோசோடியம் குளுட்டாமேட் என்பன சூப் , மென்பானங்களில் சுவையை அதிகரிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றன. இவை சில சமயங்களில் தலைவலியை ஏற்படுத்தக்கூடும்.

அநேகமாக E எண்ணைக் கொண்ட உணவுச் சேர்மானங்கள் நன்மை பயக்கக் கூடியவை. நன்மை பயக்கக் கூடிய சில E எண்களும் அவ் எண்கள் குறிக்கும் உணவுச் சேர்மானங்களும் பின்வருமாறு ,

E என்பது European community என்பதைக் குறிக்கும். E 101 றைபோபிளேவின் (விற்றமின் $B_2$), $E_{200-203}$ சோர்பேற் (Sorbate) இன் பெறுதிகள், $E_{260}$ அஸ்கோபிக்கமிலம் (விற்றமின் C இன் பெறுதிகள், $E_{330-333}$ சிற்றிக் கமிலம், $E_{412}$ Guar gum, $E_{578}$ கல்சியம் குளுகோனேட்.

உணவில் காணப்படும் இரசா யன சேர்மானங்கள் முறையாக பதப்படுத்தப்பட்டு சந்தையிடப்பட்டால் மிகவும் பயன் மிக்க நன்மை பயக்கக் கூடியனவாகவும் காணப்படும்.

(முற்றும்)

பா.கஜிதா,
செய்முறை வழிகாட்டுநர்,
இரசாயனவியற்றுறை.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 39

A+A = B அத்துடன் 10000A+ 1000A + 100 B+ 10A +A என வரும் எண்கள் எவையாயினும் 37 ஆல் பிரிபடக் கூடியவையை தருக? விடைகளை 12.04.2011 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

Mr. S.Selvarajan
Editor, Section A
Jaffna Science Association
Dept. of Mathematics & Statistics,
University of Jaffna, Jaffna.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட இரசாயனவியல் துறையில் கலாநிதி மீனா செந்தில்நந்தனனிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 38க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

திருமதி .சித்திரா சசீதர்
639/1, நாவலர்வீதி,
நல்லூர்.

**புதிர் 38 இற்கான கேள்வியும் விடையும்:**

$(10A+B)^2 = 100A+10C+C$ அத்துடன் $(10B+A)^2=100C+10C+A$

எனின் A +B +C யின் பெறுமானம் என்ன?

$12^2 = 144, 21^2 = 441$

$\therefore A+B+C = 1+2+4 = 7$

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
## புதிர் இல . 39

சரியான விடை :..........................................
முழுப்பெயர் :..........................................
முகவரி :..........................................
:..........................................
தொ.பே. இல :..........................................
கையொப்பம் :..........................................

# 2010ஆம் ஆண்டு ஜூலையில் நாட்டின் சனத்தொகை 20.6 மில்லியன்

## புள்ளிவிபர திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

கடந்த 2010 ஆம் ஆண்டு ஜூலை மாதம் வரை நாட்டின் சனத்தொகை 20.6 மில்லியன்களாகும் என்று புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டி.பி.பி. சுரஞ்சனா வித்யாரத்ன தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது,

10 வருடங்களுக்கு ஒருமுறையே நாட்டில் சனத்தொகைக் கணக்கெடுப்பு நடைபெறுகிறது. அந்தவகையில் 10 வருடங்களுக்கு ஒருமுறையே நாட்டின் சனத்தொகை மற்றும் ஏனைய தரவுகள் கணிக்கப்படுகின்றன.

எனினும் புள்ளிவிபரவியல் திணைக்களம் ஒவ்வொரு வருடத்திற்கும் ஒருமுறை உள்ளக ரீதியான கணக்கெடுப்புகளை நடத்துகின்றது. அதன்படி பார்க்கும்போது 2010 ஆம் ஆண்டு ஜூலை மாதம் வரை நாட்டின் சனத்தொகை 20.6 மில்லியன்களாகும்.

மேலும் 2011 ஆண்டு மேற்கொள்ளப்படும் குடிசனத் தொகை மதிப்பீட்டின் பின்னர் அனைத்து விதமான புதிய தகவல்களையும் மக்கள் பெற்றுக்கொள்ளலாம். (ஸ்ரீ-2)

# மலேசியாவிலுள்ள இலங்கை தமிழ் அகதிகள் திருப்பியனுப்பப்படும் நிலை

(கொழும்பு)

மலேசியாவிலுள்ள இலங்கை தமிழ் அகதிகளுக்கு சட்டபூர்வ வதிவிடப் பத்திரம் அற்ற நிலையில் அந்நாட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு இரகசியமாகத் திருப்பியனுப்பப்படும் நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை அகதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அகதிகள் பதிவேடு சட்டரீதியான பதிவற்றதாகும். உள்ளூர் பொலிஸாரால் கைது செய்யப்படக்கூடிய நிலை காணப்படுகிறது. இதனால் வெளியில் செல்லமுடியாத நெருக்கடி நிலையிலுள்ளனர்.

சட்டபூர்வமாக மலேசியாவில் தங்குவதற்கு அனுமதியற்ற நிலையில் வேலைவாய்ப்பு, கல்வி மருத்துவம் ஆகிய அடிப்படை விடயங்களை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

அகதிகளுக்கான ஐ.நாவின் சாசனத்தில் இந்தியாவைப்போன்று மலேசியாவும் கைச்சாத்திடாத நிலையில் அகதிகள் தொடர்பில் மலேசியாவின் நடவடிக்கைகளுக்கு ஐ.நா.வினால் அழுத்தங்களை பிரயோகிக்க முடியாதுள்ளது என ஐ.நா. பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஏற்கனவே ஐ.நாவின் யு.என்.எச்.சி.ஆர். நிறுவனம் உட்பட பல உள்ளூர்தொண்டுநிறுவனங்கள் சுட்டிக்காட்டியுள்ள நிலையில் சமீபத்தில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதிநிதிகள் அகதிகளைச் சந்தித்துள்ளனர்.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அகதிகளுக்கான அமைச்சகத்தின் பங்களிப்புடன் உருவாக்கப் பெற்ற மலேசிய, இலங்கை தமிழ் அகதிகள் ஒருங்கமைப்பு எனும் அமைப்பின் செயற்றிட்டங்களை பார்வையிட்டதோடு அகதிகளோடு கலந்துரையாடல்களையும் நடத்தியுள்ளனர். (ஸ்ரீ-2)

# இவ்வருட தேசிய மே தின வைபவத்தை பிரமாண்ட முறையில் கொண்டாட தீர்மானம்

## அமைச்சர் மைத்திரிபால தெரிவிப்பு



கிராமிய மட்டத்திலிருந்து அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான மக்களாணை உள்ளூராட்சித் தேர்தலில் அளிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிப் பொதுச் செயலாளரும் சுகாதார அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன பலமுள்ள அரசு அதிகாரத்திலிருப்பதால் இவ்வருட தேசிய மே தின வைபவத்தை விரிவான அடிப்படையில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் சுட்டிக் காட்டினார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, இன்று நாட்டில் பலமுள்ள அரசாங்கம் காணப்படுகின்றது. மூன்றிலிரண்டு பெரும்பான்மையையும் விடக்கூடுதலான பலம் அரசுக்குக் கிடைத்திருக்கின்றது.

இந்தப் பின்புலத்தில் எதிர்வரும் தேசிய மே தினத்தை பிரமாண்டமான முறையில் கொண்டாடத் தீர்மானித்திருக்கின்றோம். மிகப் பெரியதொரு தொழிலாளர் பேரணியை நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கான பணிகளை ஆளும் கட்சிகளின் தொழிற்சங்கக் கூட்டமைப்பு மேற்கொண்டு வருகின்றது.

மக்கள் நம்பிக்கையை வென்றெடுத்திருக்கும் நாம் அந்த நம்பிக்கை வீண் போகாத வகையில் நடந்து கொள்ள வேண்டும். அந்தப் பாரிய பொறுப்பு உள்ளூராட்சிச் சபைகளின் உறுப்பினர்களின் கரங்களிலேயே தங்கியுள்ளது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் செவ்வாய்க்கிழமை நண்பகல் இடம்பெற்ற இந்தச் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர்கள் சுசில் பிரேமஜயந்த, விமல் வீரவன்ச, பேராசிரியர் திஸ்ஸ விதாரண, மைத்திரிபால சிறிசேன, பாராளுமன்ற உறுப்பினர் ராதாகிருஷ்ணன் உட்பட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-2)

# செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி வலய பாடசாலைகளில் கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான திறன் விருத்தி செயலமர்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது என வடமராட்சி வலயக் கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ம. ஈஸ்வரதேவன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

# லண்டனில் தமிழர்களுக்கு சொந்தமான கடையில் துப்பாக்கி சூட்டு சம்பவம்

## இருவர் காயம்

தெற்கு லண்டன் பகுதியில் தமிழர்களுக்கு சொந்தமான பலசரக்கு கடை ஒன்றில் நடத்தப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் 5 வயது சிறுமியும் 35 வயதுடைய கடை உரிமையாளரும் காயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்த கடை உரிமையாளரும் சிறுமியும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தற்போது அவர்கள் ஆபத்தான கட்டத்தை தாண்டி விட்டதாகவும் வைத்தியசாலை வட்டாரத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஐந்து பேரைக் கொண்ட குழுவினரே நேற்று முன்தினம் இரவு 9.15 மணியளவில் தாக்குதல் நடத்தியுள்ளதாக நேரில் கண்ட சாட்சியான கிருபாகரன் நந்தீஸ்வரன் என்பவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

கடை உரிமையாளர் மீது முதலில் போத்தலால் தாக்கிவிட்டு வெளியில் இருந்த நபர்கள் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதாகவும் இதில் 5 வயது சிறுமியின் நெஞ்சில் துப்பாக்கிச் சூடுபட்டு கீழே விழுந்ததை தான் நேரில் கண்டதாக பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார்.

கடை உரிமையாளர் கடைக்கு மேலே உள்ள மாடி குடியிருப்பில் வசிப்பவர் என்றும் காயமடைந்த 5 வயது சிறுமி தாயுடன் கடைக்கு வந்த போது இத்துப்பாக்கி சூட்டிற்கு இலக்காகி உள்ளதாகவும் லண்டன் குற்றத்தடுப்பு பிரதம பரிசோதகர் ரொனி பௌவ்டன் தெரிவித்துள்ளார்.

லண்டன்நகரகுற்றத்தடுப்பு பிரிவுபொலிஸ் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். எனினும் இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)



ஆ. பிருந்தாபன் எழுதிய தமிழ் இலக்கியத் தொகுப்பு தரம் -9 நூல் வெளியீட்டு விழா யாழ். மத்திய கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கல்லூரியின் பிரதி அதிபர் செ.பத்மநாதன் நூலை வெளியிட முதற்பிரதியை கோப்பாய் வடக்கு றோ.க.த.க.பாடசாலை அதிபர் கு.திலீபன் பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம்.


# ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்
## தாவடி தெற்கு, கொக்குவில்
## வருடாந்த மஹோற்சவம்-2011

அம்பிகை அடியார்களே,

அம்பாளின் வருடாந்த மஹோற்சவம் 03.04.2011 ஞாயிற்றுக்கிழமை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி 17.04.2011 ஞாயிற்றுக்கிழமை சித்திராபௌர்ணமி தின தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறும்.

கொடியேற்றம் 03.04.2011 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணி
வருடப்பிறப்பு விசேட பூஜை 14.04.2011 வியாழக்கிழமை பகல் 11.33 மணி
சப்பறம் 15.04.2011 வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணி
இரதோற்சவம் (தேர்) 16.04.2011 சனிக்கிழமை காலை 9.00 மணி
தீர்த்தோற்சவம் 17.04.2011 ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணி
பகல் திருவிழா காலை 8.30 மணிக்கும் இரவு உற்சவம் மாலை 5.00 மணிக்கும் ஆரம்பமாகி நடைபெறும்.


சுபம்

ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்,
தாவடி தெற்கு,
கொக்குவில்.

ரவிஜயா,
ஆதீனகர்த்தா.

(4265)

# ஏன் ஆனந்தமாக இல்லை?



ஆழமான முட்டாள்தனம்

பெரும்பாலான மனிதர்கள் வாழ்க்கையில் துன்பத்திற்கு ஆளாகும் போதுதான், வாழ்க்கையை ஆழமாகப் பார்க்கவும், அதிலிருந்து கற்றுக்கொள்ளவும் செய்கிறார்கள். இது புத்திசாலித்தனத்தின் அறிகுறியல்ல. ஆனந்தமாக இருக்கும் போதுதான் வாழ்க்கையை மிக ஆழமாகப் பார்க்கவேண்டும்.

ஆனால் சந்தோஷமாக இருக்கும் போது பலரும் வாழும் விதம் மிகவும் மேலோட்டமானதாகவும் அற்புதமானதாகவும் இருக்கிறது. வாழ்வில் ஏதாவது ஒரு அசம்பாவிதம் நடந்தால்தான் அவர்களால் வாழ்க்கையை ஆழமாகப் பார்க்க முடியும்.

நீங்கள் ஆசிரமத்தில் தங்கியிருப்பதாக யாரிடமாவது சொல்லிப் பாருங்கள்... உடனே அவர்கள் "ஓ! என்ன ஆயிற்று? உங்கள் கணவர் இறந்துவிட்டாரா? உங்கள் குழந்தை இறந்துவிட்டதா? அல்லது வேறு ஏதாவது மோசமான சம்பவம்நிகழ்ந்துவிட்டதா?" என்று துக்கம் விசாரிப்பார்கள்.

பெரும்பாலான மனிதர்கள் தங்களது வாழ்வில் ஏதாவது மோசமாக நடந்தால்தான், இல்லையென்றால் எல்லாமுமே தவறாகப் போனால் தான் வாழ்வின் ஆழமான பரிமாணத்தை நோக்கிப்போவார்கள். என்பதால் தான் மக்கள் இத்தகைய கேள்விகளைக் கேட்கின்றார்கள். இது மனித குலத்தின் துர்ரதிஷ்டமான வரலாறு. ஆனால் இது இப்படி யிருக்கத் தேவையில்லை. அதிகமான மக்கள் ஏதோ ஒன்றைச் செய்கிறார் கள் என்பதாலேயே அது சரியான செயலாக ஆகிவிடாது.

கடந்தகாலத்தைத் திரும்பிப் பார்த்தாலே இதற்கு ஏகப்பட்ட உதாரணங்களை எடுக்கமுடியும். 1970களில் கிட்டத்தட்ட 80சதவீத ஆண்கள் புகைப்பிடித்தார்கள். அந்தக் காலகட்டத்தில் அது சரியான செயலாகவே கருதப்பட்டது. புகைப்பிடிக்காமல் இருந்தால் நீங்கள் சரியான ஆண் இல்லை. 'மார்ல்பரோ ஆண்; அவனே நிஜமான ஆண்!' கையில் சிகரெட் வைத்திராத ஒருவன் நிஜமான ஆண் அல்ல.

இப்படியொரு கருத்து அப்போது உருவாக்கப்பட்டிருந்தது. அதை எல்லோரும் நம்பினார்கள். இளைஞர் சமுதாயமோ கர்ம சிரத்தையோடு பின்பற்றியது.ஆனால் இன்று புகைப் பிடிப்பதென்பது ஒரு அபத்தமான செயல் என்ற பெரும் பிரச்சாரம் மிகத்தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் பயனாக புகைப் பிடிப்போரின் எண்ணிக்கை இன்று நம்பமுடியாத அளவு குறைந்திருப்பதை நீங்கள் கண்கூடாகப் பார்க்கலாம். இந்தப் பிரச்சாரமும் விழிப்புணர்வும் இதே போல் தொடர்ந்தால் இன்னும் ஐம்பது ஆண்டுகளில் எவருமே புகை பிடிக்க மாட்டார்கள்.

கடந்தகாலங்களில் மக்கள் அதிகம் புகை பிடித்தார்கள்; அதிகமாக இருமினார்கள்; புற்றுநோயால் பீடிக்கப்பட்டாலும் புகை பிடிப்பதைத் தொடர்ந்தார்கள். என்பதை எதிர்கால சந்ததியினருக்கு நம்புவது கடினமாக இருக்கும். அப்படியொரு காரியத்தை மக்கள் கடந்த காலத்தில் ஏன் செய்தார்கள் என்பதை அவர்களால் புரிந்து கொள்ளக்கூட முடியாது.

வாகனங்களிலிருந்து வெளியேறும் புகையையே நாம் குறைக்க முயன்று கொண்டிருக்கும்போது, மனிதர்கள் எப்படி புகை பிடித்திருக்கக் கூடும்? இரு தலைமுறைகளுக்குப் பிறகு புகை பிடிக்கும் பழக்கம் என்று ஒன்று இருந்ததாக அவர்கள் நம்பவே மாட்டார்கள்.

விக்டோரியா காலத்தில் இங்கிலாந்திலும் ஐரோப்பாவின் பலதேசங்களிலும் காசநோயால் பீடிக்கப்பட்டிருப்பதென்பது ஒரு நாகரிகமாகவே கருதப்பட்டு வந்தது. இதை நீங்கள் நம்புவீர்களா? ஆனால் உண்மை அதுதான். காசநோய் இருப்பதென்பது நாகரிகமாக இருந்தது.

நிறைய இளம் புத்திசாலிகளும் கவிஞர்களும் கலைஞர்களும் புதிசாலிகள் என்றால் இருமிக்கொண்டே இருக்கவேண்டும் எனக் கருதியதால், காசநோய்க்கு சிகிச்சை எடுத்துக் கொள்ள மறுத்தார்கள். நோயின் தாக்குதல் தீவிரமாகி இறந்தும் போனார்கள். ஒருவர் ஆரோக்கியமாகவும் வலுவாகவும் இருந்தால் அவருக்கு மூளை இல்லை; அவர் வெறும் மாமிசப்பிண்டம் என்ற கருத்து அப்போது நிலவியது.

காசநோய்க்கு நாம் பறிகொடுத்த மிகச்சிறந்த கவிஞர்களில் ஒருவர் ஜான்ஸ்கீட்ஸ் தனது நோய்க்கு சிகிச்சை எடுத்துக் கொள்ள மறுத்ததால் 25வயதிலேயே அவர் இறந்தார். இது நடந்தது ஒரு நூற்றாண்டு அல்லது இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு தான். இப்போது இதை நீங்கள் நம்புவீர்களா? ஏனென்றால் உங்கள் சமூக அடையாளத்தோடு உங்களது புத்திசாலித்தனம் மிக ஆழமாகச் சிக்கிக் கொண்டால் பின்னர் வாழ்வின் யதார்த்தத்தோடு பொருந்தி உங்கள் மூளை வேலைசெய்யாது. இதை நீங்கள் நன்றாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

## ஆன்மீகம் 11

உங்களது மனம், உடல், உணர்வு ஆகிய மூன்றுமே உங்கள் வாழ்வின் ஆதாரமான உயிர்ச்சக்திக்கு எதிரான வேலை செய்கின்றன. இது தான் துயரத்தின் ஊற்றுக்கண் உங்களின் உயிர்ச்சக்தி அளவற்ற ஆனந்தத்தை அடைய எப்போதும் ஏங்கிக் கொண்டிருந்தபோது உங்களது மனமும் உணர்வுகளும் சில நேரங்களில் உங்களது உடலும் எதிர்த் திசையில் சென்று கொண்டிருக்கின்றன. இது முட்டாள்தனமாக உள்ளது இல்லையா? நீங்கள் புரிந்து கொள்ளவே முடியாத, அளவிடக்கூட முடியாத ஆழமான முட்டாள்தனம் இது. முட்டாள்களால் தாங்கள் எந்த அளவிற்கு ஆழமான முட்டாள்கள் என்பதை புரிந்து கொள்ள முடியாது. உங்கள் வாழ்விற்கு எதிராகவே நீங்கள் செயற்படுவதால் இது மிகவும் ஆழமான முட்டாள்தனமாகும்.

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# ஈழத்தில் சிறுவர் இலக்கியம்-ஒரு நோக்கு

02

சிறுவர்பாடல்கள் எவை?

சிறுவர்களுக்காகச் சிறுவர் உள்ளத்தோடு சிறுவர் மொழியில்சிறுவர் உலகத்தை விளக்கும் பாடல்களே சிறுவர்பாடல் எனலாம். இச்சிறுவர் பாடல்கள் எளிய சொற்கள், இனிய சந்தம், தெளிவான பொருள் ஆகியனவற்றைக் கொண்டனவாக அமைதல் வேண்டும். இம்மூன்று அம்சங்களைக் கொண்ட பாடல்கள் சிறுவர்களது உள்ளங்களில் நல்ல கற்பனை, சிறந்த உணர்ச்சி,உயர்ந்த விளக்கம் ஆகியவற்றை நன்கு பதியச்செய்யும் என்பது திண்ணம்.

"நாங்கள் இளம் தளிர்கள்
நாளை மலரும் மரங்கள்
ஓங்கிவளரும் மரங்கள்
உலகை ஆளும் கரங்கள்"

எனச் சிறுவர்கள் தங்களைப்பற்றி பாடுவதாகப் பாடுகிறார் கவிஞர் அழகு-பழனிச்சாமி. நாளை உலகை ஆளும் கரங்களாகக் கருதப்படும் சிறுவர்களின் இயல்புகள், விருப்புக்கள், சூழல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆக்கப்படும் பாடல்கள், கவிதை, விடுகதைகள், நெடுங்கதைகள், நாடகங்கள், சிறுவர் சஞ்சிகைகள், மொழிபெயர்ப்புக்கள் அனைத்துமே சிறுவர் இலக்கியத்தின் பாற்பட்டது என்பர்.

சிறுவர்இலக்கிய வளர்ச்சி

சங்ககாலம் முதல் இக்காலம் வரை சிறுவர் இலக்கியம் படிப்படியாக வளர்ச்சி பெற்றே வந்துள்ளது. சிறுவர் இலக்கிய வளர்ச்சியின் முதல் நிலையாக விடுகதைகளைக் குறிப்பிடலாம். விடுகதைகளின் தலையாய நோக்கம் அவர்களது சிந்தனைக்கு வேலை கொடுத்து மகிழ்வித்தலேயாகும். விடுகதை என்பது விடுவிக்க வேண்டிய கதை எனப்பொருள்படும். விடுகதை சிந்தனைக்குப்பயிற்சி அளிக்கிறது. கதை என்ற சொல் இருப்பினும் இவை பெரும்பாலும் பாடல்களாகவே முன்னர் அமைந்திருந்தன.

சிறுவர் இலக்கிய வளர்ச்சியின் இருண்டாவது நிலை, நாட்டுப்புறப்

> "கொழும்பில் நடைபெற்ற சர்வ தேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

பாடல்களின் தோற்றமாகும். நாட்டுப்புறப்பாடல்களை நமது தாய்மாரும் இயற்றிஇருக்கவேண்டும். அவர்களது உணர்ச்சிப்பெருக்கினால் வாய் வழியாகப்பிறந்த பாடல்கள் இன்று ஏடுகளின் எழுத்தளவில் இடம்பெற்று கிராமிய இலக்கியமாகிவிட்டன.

"சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு..."
"கைவீசம்மா கைவீசு..."
"காக்கா காக்கா பறந்து வா..."
"குருவி குருவி பறந்து வா..."

போன்ற பாடல்களை எடுத்துக் காட்டாகக் கூறலாம்.இவ்வாறு பறவைகளையும், பிராணிகளையும், பிள்ளைகளையும் அழைக்கும் பாடல்களை நாட்டுப்புறப்பாடல்களில் நாம் பெரிதும் காணலாம்.

நீதிப்பாடல்கள்

சிறுவர் இலக்கிய வளர்ச்சியின் மூன் றாவது நிலை நீதிப்பாடல்கள் சம்பந்தப்பட்டனவாகும். சிறுவர்களின் ஒழுக் கம், அறிவு, மனப்பாங்கு என்பவற்றை விருத்தி செய்யும் நோக்கிலும் நீதி நெறிகளை அறிந்து கொள்ளும் வகை யிலும் நீதிப்பாடல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. கி.பி. 16ஆம் நூற்றாண்டளவில் தோன்றிய ஔவையாரின் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி நூல்களும் அதிவீரராமபாண்டியன் பாடிய வெற்றிவேட்கையும் 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய உலகநாதரின் உலகநீதியும் எளிய இனிய சொற்களில் எல்லோரும் உணர்ந்து பயன்பெறும் அரிய நீதிகளைக் கூறுகின்றன. இவையும் சிறுவர் இலக்கியத்தின்பாற்படும் எனக் கூறப்படுகின்றன.எனினும் இக்கூற்று ஏற்புடையதல்ல என்பதே குழந்தைக்கவிஞர் பலரதும் கருத்தாகவுள்ளது. சிறுவர்களின் அறிவு, அனுபவம், மனப்பாங்கு என்பவற்றிற்கு அப்பாற்பட்ட அறிவுரைகள் பல அவற்றில் இடம்பெற்றுள்மையே அதற்குக்காரணம் ஆகும். எடுத்துக்காட்டாக ஔவையாரின்

"தையல்சொற் கேளேல்"
"மைவிழியார் மனை அகல்"
"துடியாப்பெண்டிர் மடியில் நெருப்பு"
"பிறர்மனை புகாமை அறனெனத் தகும்" (கொன்றை வேந்தன்)

என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

சிறுவர்களுக்காக எழுதிய முதல் ஆண்பாற் கவிஞர் அதிவீரராமபாண்டியன் என்பர். இவர் எழுதிய வெற்றிவேட்கை அறிவுரை பகரும் வகையிலேயே அமைந்துள்ளது.

"எழுத்தறிவித்தவன் இறைவனாவான்"
"கல்விக்கழகு கசடற மொழிதல் ..."
"கற்கைநன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"

இவையெல்லாம் வெற்றிவேட்கை தரும் அறிவுரைகளாகும். இவை சிறுவர்களின் அறிவாற்றலுக்கு அப்பாற்பட்ட கருத்துக்களையே போதிக்கின்றன.

அதிவீரராமபாண்டியனிற்குப் பின்


த. துரைசிங்கம்
(ஓய்வுபெற்ற கல்விப்பணிப்பாளர்)


வந்தவர், உலகநாதர்.இவர் சிறுவர்களுக்கென படைத்த நூல் உலகநீதி; இதில் இடம்பெற்றுள்ள யாவும் வளர்ந்தோருக்குப் பயன்படத்தக்க நீதிகளையே பெரிதும் எடுத்துக்கூறுகின்றன.

"ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்"
"கற்புடைய மங்கையரைக் கருத வேண்டாம்
இருதாரம் ஒருநாளும் தேடவேண்டாம்"

என்பன இதற்கேற்ற சான்றுகளாக உள்ளன.

(தொடரும்)





மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் திருமதி கலைவாணி அம்பலவாணர் மங்கல விளக்கேற்றுவதனையும் மாணவிகளது இடைவேளை நிகழ்வினையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் க.சண்முகலிங்கம் தடைதாண்டல் விளையாட்டுப் போட்டியில் தேசிய மட்டத்தில் சாதனை நிகழ்த்திய மாணவி மு.துஸ்யந்திக்கு வெற்றிக் கேடயம் வழங்குவதனையும் படங்களில் காணலாம். (படங்கள்: சாவகச்சேரி செய்தியாளர்)

# தோட்டத் தொழிலாளர்களின் சம்பளவுயர்வு தொடர்பான பேச்சுவார்த்தை ஒத்திவைப்பு

பெருந்தோட்ட தொழிலாளர்களின் வேதன உயர்வு தொடர்பான பேச்சுவார்த்தை எதிர் வரும் 4ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட தொழில் தருநர் சம்மேளனம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற் சங்கமான இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் ஆகியவற்றுக்கும் இடையில் நேற்றைய தினம் இந்த பேச்சுவார்த்தை இடம்பெறவிருந்தது.

எனினும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் வேண்டுகோளுக்கு அமைய எதிர் வரும் ஏப்ரல் 4ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளதாக பெருந்தோட்ட தொழில் தருநர் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் பிரதியமைச்சருமான முத்து சிவலிங்கத்தை வினவிய போது அமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்று நுவரெலிய பிரதேசத்துக்கு விஜயம் செய்தமை காரணமாகவே பேச்சுவார்த்தையில் பங்கேற்க முடியவில்லை என்று குறிப்பிட்டார்.

எனினும் பேச்சுவார்த்தை எதிர்வரும் 4 ஆம் திகதி நடைபெறும் என்று பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

## கோட்டமட்ட போட்டிகளில் சாதனை

தெல்லிப்பழை கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிகளில் யாழ்.மகாஜனா கல்லூரி 51 போட்டிகளில் முதலிடத்தையும் 26 போட்டிகளில் இரண்டாம் இடத்தையும் 10 போட்டிகளில் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளது.

(ஸ்ரீ-6)

## முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்த 53 ஆயிரம் பேர் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்

### அரச அதிபர் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்களில் இன்னும் 53 ஆயிரம் பேர் மீள்குடியமர்த்தப்பட வேண்டியுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் பத்திநாதன் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் கடந்த 29 ஆம் திகதி வவுனியா மெனிக் பாம் முகாமில் இருந்து 59 குடும்பங்களைச் சேர்ந்த 197 பேர் கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் இன்றைய தினம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்டப்பட்ட மணவாளர்பட்டமுறிப்பு பிரதேசத்தில் மேலும் ஒரு தொகுதி மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளனர்.

86 குடும்பங்களைச் சேர்ந்த 237 பேர் மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## ஒத்திவைக்கப்பட்ட சபைகளுக்கான தேர்தலை வெசாக் தினத்திற்குப் பின் நடத்தவும்

### ஐ.தே.க. கோரிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி உட்பட ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை வெசாக் தினத்திற்குப் பின்னர் நடாத்துமாறு தேர்தல் ஆணையாளர், ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரிடம் ஐ.தே.க. கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் கடந்த 29ஆம் திகதி இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அக்கட்சியின் பொதுச்செயலாளரும் எம்.பி.யுமான திஸ்ஸ அத்தநாயக்க இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில், உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி காரணமாகவும் சட்டச்சிக்கல்கள் காரணமாகவும் உள்ளூராட்சி சபைகள் பலவற்றுக்குத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டன. வெசாக் தினத்திற்கு முன்பாக ஒத்திவைக்கப்பட்ட சபைகளுக்குத் தேர்தலை நடாத்த அரசு தயாராகி வருகின்றது என்று எமக்குத் தகவல் கிடைத்துள்ளது.

வெசாக் தினத்திற்கு முன்னர் தேர்தலை நடாத்துவதை நாம் எதிர்க்கின்றோம். வெசாக் தினத்திற்கு முன் தேர்தலை நடாத்தினால் வெசாக் நிகழ்வுகளுக்கும் புத்த ஜெயந்திக்கும் இடையூறுகள் ஏற்படும் என்றார்.

(ஸ்ரீ-2)

## தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மணற்காடு அருள்மிகு கும்ப நாயகி முத்துமாரியம்பாள் ஆலய மஹோற்சவப் பெருவிழாவின் தேர்த்திருவிழா நாளை சனிக்கிழமை காலை நடைபெறும். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்த உற்சவம் இடம்பெறும்.

(ஸ்ரீ-2)

## 2011.04 01 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★1793 - ஜப்பானில் உன்சென் எரிமலை வெடித்ததை அடுத்து நிகழ்ந்த நில நடுக்கத்தில் 53 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

★1826 - சாமுவேல் மோரி உள் எரிபொறிக்கான காப்புரிமம் பெற்றார்.

★1867 - சிங்கப்பூர் பிரித்தானிய குடியேற்ற நாடாகியது.

★1873 - அட்லாண்டிக் என்ற பிரித்தானியாவின் நீராவிக் கப்பல் கனடாவில் நோவா ஸ்கோஷேயில் மூழ்கியதில் 547 பேர் கொல்லப்பட்டனர்.

★1891 - சிக்காகோவில் றிக்லி நிறுவனம் (Wrigley Company) ஆரம்பிக்கப்பட்டது.

★1924 - அடொல்ஃப் ஹிட்லர் ஐந்தாண்டுகள் சிறைத்தண்டனை பெற்றார். ஆனாலும் அவர் 9 மாதங்களில் விடுதலை பெற்றார்.

★1935 - இந்திய ரிசர்வ் வங்கி ஆரம்பிக்கப்பட்டது.

★1937 - யேமனின் ஏடென் பிரித்தானிய குடியேற்ற நாடாகியது.

★1939 - எசுபானிய உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.

★1945 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்காவின் படைகள் ஜப்பானின் ஒக்கிநாவா தீவுகளில் இறங்கின.

★1946 - அலூஷன் தீவுகளில் நிகழ்ந்த 7.8 அளவு நிலநடுக்கம் காரணமாக ஹவாய் தீவுகளில் ஆழிப்பேரலை ஏற்பட்டு 157 பேர் கொல்லப்பட்டனர்.

★1946 - மலாய் கூட்டமைப்பு உருவானது.

★1948 - பரோ தீவுகள் டென்மார்க்கில் இருந்து தன்னாட்சி பெற்றது.

★1949 - சீனக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் சீனத் தேசியக் கட்சியுடன் பெய்ஜிங்கில் நடத்திய பேச்சுக்கள் தோல்வியில் முடிந்தன.

★1957 - இந்தியாவில் நயா பைசா நாணயம் அறிமுகப்படுத்தப்பட்டது.

★1973 - புலிகளைக் காப்பதற்கான செயற்றிட்டம் இந்தியாவின் ஜிம் கார்பெட் தேசியப் பூங்காவில் ஆரம்பிக்கப்பட்டது.

★1976 - அப்பிள் கணனி ஸ்டீவ் ஜொப்ஸ், (Steve Wozniak) ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்டது.

★1981 - சோவியத் ஒன்றியத்தில் பகலொளி சேமிப்பு நேரம் முதல் தடவையாக அறிமுகப்படுத்தப்பட்டது.

★1997 - ஹேல்-பொப் வால்வெள்ளி பூமியின் சுற்றுப்பாதை வீச்சைக்கடந்தது.

★2001 - யூகொஸ்லாவியாவின் முன்னாள் ஜனாதிபதி சுலோபதான் மிலோசெவிச் போர்க்குற்றங்களுக்காக பொலிஸாரிடம் சரணடைந்தார்.

★2001 - நெதர்லாந்து சமப்பால் திருமணத்தைச் சட்டபூர்வமாக்கிய முதலாவது நாடானது.

★2004 - கூகுள் 1000 மெகாபைட் கொள்ளளவுள்ளதான ஜீமெயில் என்ற இலவச மின்னஞ்சல் சேவையை அறிமுகப்படுத்தியது.

★2006 - ஈரான் மேற்கில் லோரில் டான் மாகாணத்தில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 66 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

★1815 - ஒட்டோ ஃபொன் பிஸ்மார்க், ஜேர்மனிய அரசியலாளர் (இ. 1898)

★1865 - ரிச்சார்ட் சிக்மோண்டி, நோபல் பரிசு பெற்றவர் (இ. 1929)

★1875 - எட்கார் வாலஸ், ஆங்கில எழுத்தாளர் (இ. 1932)

★1878 - சி.கணேசையர், ஈழத்துத் தமிழறிஞர் (இ. 1958)

★1919 - ஜோசப் மறி, நோபல் பரிசு பெற்றவர்

★1933 - குளோட் கொஹென் - டனூட்ஜி, நோபல் பரிசு பெற்றவர்.

★1940 - வங்காரி மாதாய், அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர்

### இறப்புகள்

★1960 - துங்கு அப்துல் ரகுமான், மலேசியாவின் மன்னர் (பி. 1895)


★1968 - லேவ் லண்டாவு, நோபல் பரிசு பெற்ற ரஷ்ய இயற்பியலாளர் (பி. 1908)

★1976 - மக்ஸ் ஏர்ண்ஸ்ட், ஜேர்மனிய ஓவியர் (பி. 1891)

★2007 - தி.வே.கோபாலையர், தமிழறிஞர் (பி. 1926)

**1979 - ஈரான் 98% மக்கள் ஆதரவுடன் ஓர் இஸ்லாமியக் குடியரசாகியது.**

# நான்கு அணு உலைகளை அழிக்க ஜப்பான் முடிவு



(டோக்கியோ)

ஜப்பானில் அண்மையில் ஏற்பட்ட பூகம்பத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள 4 அணு உலைகளை குளிர்விக்கும் பணியில் எதிர்பார்த்த பலன் கிடைக்காததால் அவற்றை அழிக்க அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

கடந்த 11 ஆம் திகதி ஜப்பானின் மியாகி மாநிலத்தில் கடுமையான பூகம்பமும் அதைத் தொடர்ந்து சுனாமியும் ஏற்பட்டது. பூகம்பம் ரிக்டரில் 9.2 ஆக பதி வானது. இந்த பேரழிவில் சிக்கி 30 ஆயிரம் பேர் உயிரிழந்திருக்கலாம் என கருதப்படுகிறது.

பூகம்பம் காரணமாக புகுஷிமா டைச்சி அணுமின் நிலையத்தில் மின்சாரம்துண்டிக்கப்பட்டது. இதனால் இங்குள்ள 6 அணு உலைகளை குளிர்விக்கும் பணி பாதிக்கப்பட்டது. அமெரிக்க கடற்படையின் உதவியுடன் கடல்நீரைக்கொண்டு அணு உலைகளை குளிர்விக்கும் பணி முடுக்கி விடப்பட்டது. எனினும் 4 அணு உலைகளை குளிர்விக் கும் முயற்சியில் எதிர்பார்த்த பலன் கிடைக்க வில்லை. 5 மற்றும் 6 ஆவது உலைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன.

அதிக வெப்பம் காரணமாக இந்த அணு உலைகள் வெடித்ததால் அப்பகுதியில் காற்றிலும், கடலிலும் கதிர்வீச்சு பரவி வருகிறது. வழக்கமான அளவைவிட பல ஆயிரம் மடங்கு கதிர்வீச்சு பரவிவிட்டதாக இந்த தொழிற்சாலையை இயக்கும் டோக்கியோ எலக்ரிக் பவர் கம்பனி (டெப்கோ) தெரிவித்துள்ளது. இதனால் பலரது உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக கடுமையாக போராடியும் 4 அணு உலைகளை குளிர்விக்க முடியவில்லை எனவும் அவற்றை அழிக்க முடிவு செய்துள்ளதாகவும் டெப்கோ கூறியுள்ளது.

கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள 1 முதல் 4 அணு உலைகளை குளிர்விக்க கடுமையாக முயற்சி செய்தோம். எனினும் பலன் கிட்ட வில்லை. எனவே அவற்றை அழிப்பதைத் தவிர வேறு வழி இல்லை. இந்த விபத்துக்கு மன்னிப்புகேட்டுக்கொள்கிறேன் என டெப்கோ தலைமை அதிகாரி சுனேஹிசா கட்சுமடா தெரிவித்துள்ளார்.

அணு உலைகளை குளிர்விப்பதற்கான தீவிர முயற்சியில் ஈடுபட்டிருந்த டெப்கோ தலைவர் மசடகா ஷிமிசு கதிர்வீச்சால் பாதிக்கப்பட்டுள்ளதால் அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் டெப்கோ தெரிவித்துள்ளது. (ஸ்ரீ)

## மியன்மாரில் 20 ஆண்டுகால இராணுவ ஆட்சி முடிவுக்கு வந்தது

மியான்மாரில் கடந்த 20ஆண்டுகளாக நிலவி வந்த இராணுவ ஆட்சி நேற்று முன்தினம் முடிவுக்கு வந்தது. இதையடுத்து புதிய ஜனாதிபதி தலைமையிலான அமைச்சரவை பொறுப் பேற்றுக் கொண்டது.

மியான்மாரில் தான் ஷவே தலைமையிலான இராணுவ ஆட்சி கடந்த 20 ஆண்டுகளாக இடம்பெற்று வந்துள்ளது.

கடந்தாண்டு நவம்பரில் பொதுத்தேர்தல் நடத்தப்பட்டது. இதில் இராணுவத்தின் ஆதரவு பெற்ற ஐக்கிய ஒற்றுமை மேம்பாட்டுக் கட்சி வெற்றி பெற்றது. அதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் இராணுவ ஆட்சி முடிவுக்கு வந்தது. புதிய ஜனாதிபதியாக தெய்ன் செய்ன் பொறுப்பேற்றுக் கொண்டார். அவருடன் இரண்டு துணை ஜனாதிபதிகள் 58 அமைச்சர்கள் உள்ளிட்ட அமைச்சரவையும் நேற்று முன்தினம்பொறுப்பேற்றுக்கொண்டது. இராணுவ ஆட்சித் தலைவரான தான் ஷவே எதிர்காலத்தில் என்னென்ன பொறுப்புக்கள் வகிப்பார் அல்லது ஆட்சிக்கு ஆலோசகராக இருப்பாரா எனப் பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன. தற்போது அவர் இராணுவத்தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டு அவரது பதவிக்கு ஜெனரல் மின் அவுங்ஹைங் நியமிக்கப் பட்டுள்ளார். இந்தப் புதிய அரசு பொறுப்பேற்றதன் மூலம் மியான்மாரில் ஜனநாயகம் மலரும் என்று நிபுணர்கள் சிலர் கருதுகின்றனர்.

ஆனால் அமைச்சர்களில் பலர் இராணுவத்தின் முன்னாள் ஜெனரல்கள் என்பதால் இதுவும் இராணுவ ஆட்சியின் நீட்சியாகவே இருக்கும் என்று பலர் கருத்து தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# கேணல் கடாபிக்கு அடைக்கலம் தர தயார்

## உகண்டா அரசு அறிவிப்பு



(கம்பாலா)

மக்களின் கிளர்ச்சியாலும் அமெரிக்க கூட்டுப் படைப்புக்களின் தாக்குதலாலும் அதிர்ந்து போயிருக்கும் லிபிய ஜனாதிபதி கடாபி வேண்டும் என்றால் எங்கள் நாட்டில் தஞ்சம் புகுந்து கொள்ளலாம் என உகண்டா அரசு அழைப்பு விடுத்துள்ளது.


இது குறித்து உகண்டா அரசின் செய்தித் தொடர்பாளர் டமலே மிருண்டி பத்திரிகையாளர்களுக்கு தெரிவிக்கையில், ஆபத்தில் இருக்கும் யார் தஞ்சம் கேட்டாலும் அடைக்கலம் அளிக்க வேண்டும் என்பது தங்கள் நாட்டின் கொள்கை என்றும் எனவே, ஜனாதிபதி கடாபி விரும்பினாலும் அவர் உகண்டாவில் தங்கிக் கொள்ளலாம் என்று கூறினார். (ஸ்ரீ-2)





பிரான்ஸ் நாட்டின் ஸ்பைடர்மேன் என அழைக்கப்படும் ஆலன்ராபர்ட் என்ற மலையேற்ற வீரர், உலகின் மிகவும் உயரமாக கட்டடமான டுபாயில் உள்ள பூர்ஜ்கலிபா (600 மீற்றர்) கட்டடத்தின் மீது ஏறி உலகசாதனைக்காக முயற்சி செய்வதைப் படத்தில் காணலாம்.

# எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி வீட்டுக்காவலில் சிறை வைப்பு



(கெய்ரோ)

எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக் மற்றும் அவரது குடும்பத்தினர் சவுதிக்கு செல்லவில்லை என்றும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவ உயர் நிலைக் குழு தெரிவித்துள்ளது.

எகிப்தில் கடந்த 40 ஆண்டுகளாக தொடர்ந்து ஜனாதிபதியாக பதவி வகித்தார் முபாரக். இவரது சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக கடந்த மாதம் மக்கள் போராட்டம் வெடித்ததால் பதவி விலகினார். இதையடுத்து எகிப்தின் இராணுவ உயர்நிலைக் குழு காபந்து அரசாக செயல் பட்டு வருகிறது.

முபாரக் மற்றும் அவருடைய குடும்பத்தினருக்கு சொந்தமான பல்வேறு சொத்துக்களை இராணுவ கவுன்சில் முடக்கி உள்ளது. அரசியல் சட்டத்தைத் திருத்தி ஜனநாயக முறையில் விரைவில் புதிய அரசு அமைக்கப்படும் எனவும் அது உறுதி அளித்துள்ளது.

பதவி விலகிய முபாரக் துனிசியா முன்னாள் ஜனாதிபதியைப் போல சவுதி அரேபியாவுக்கு தப்பிவிட்டதாக செய்தி வெளியானது. இந்நிலையில் எகிப்து இராணுவ உயர்நிலை கவுன்சில் இந்தத் தகவலை மறுத்துள்ளது.

முபாரக் மற்றும் அவரது குடும்பத்தினர் எகிப்தில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக தனது இணையத்தளத்தில் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே அவருக்கு மாதம் 15 ஆயிரம் ரூபா உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும் இதற்கு முன் அவர் ஜனாதிபதியாக பணிபுரிந்தமைக்கு ஓய்வூதியமாக இத் தொகை வழங்கப்பட்டு வருவதாகவும் அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)





# மக்கள் எழுச்சி எதிரொலி; சிரிய பிரதமர் இராஜினாமா

(டமாஸ்கஸ்)

சிரிய மக்களின் தொடர் போராட்டம் காரணமாக அந்நாட்டு பிரதமர் முகம்மது நாஜி ஓட்ரி செவ்வாய்க்கிழமை இராஜினாமா செய்துள்ளார்.

அவரது இராஜினாமாவை ஜனாதிபதி பஷார் அல்-அஸ்ஸத் ஏற்றுக் கொண்டு விட்டதாகவும் புதிய அரசு அமையும் வரை அவர் காபந்து பிரதமராக நீடிப்பார் என்றும் அந்நாட்டு அரசு செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. ஓரிரு நாட்களில் புதிய அமைச்சரவை பதவியேற்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

கடந்த 40 ஆண்டுகளாக சிரியாவில் இடம்பெற்றுவரும் அஸ்ஸத் குடும்பத்தினரின் ஆட்சி முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்து 2 மாதங்களாக பொதுமக்கள் பல் வேறு போராட்டங்களில் ஈடுபட்டனர்.

அரசுக்கு எதிரான இந்தப் போராட்டங்களின்போது பாதுகாப்புப் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் 130 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இதனை மறுத்துள்ள சிரிய அரசு 30 பேர் மட்டுமே இறந்திருப்பதாகத் தெரிவித்துள்ளது. இந்நிலையில் பிரதமர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

நாட்டில் இப்போது நிலவும் நிலைமையைக் கருத்தில் கொண்டு ஜனாதிபதி பஷார் அல் -அஸ்ஸத் தொலைக்காட்சியில் நாட்டு மக்களுக்கு உரையாற்றுவார் என்று அரசு செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. அவரது உரையின்போது ஆட்சி மாற்றம் குறித்தும் சட்ட திட்டங்கள் குறித்தும் அவசர நிலை பிரகடன ரத்து குறித்தும் அறிவிப்புகள் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# தேசிய வருமானத்தை பெருக்க கித்துள், பனை மரங்களைப் பயன்படுத்தத் திட்டம்

கித்துள் மற்றும் பனை மரங்களின் மூலம் தேசிய வருமானத்தை பெருக்குவதற்கான பாரிய அபிவிருத்தி திட்டமொன்றை அரசாங்கம் துரிதகதியில் மேற்கொண்டு வருகின்றது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறார்.

கித்துள் மற்றும் பனை மரங்களிலிருந்து கள் இறக்கி அதன் மூலம் பாணியை தயாரித்து நாட்டிலுள்ள பாமர மக்களின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் கித்துள் மற்றும் பனை மரங்களில் ஏறுவதற்கு அனுமதிப் பத்திரம் பெறவேண்டிய நடைமுறையை அரசாங்கம் நீக்கியுள்ளது.

அலரிமாளிகையில் நடந்த நிகழ்வொன்றில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உரை நிகழ்த்துகையில், இலங்கையில் 29 இலட்சத்து ஏழாயிரம் கித்துள் மரங்கள் இருக்கின்ற போதிலும் அவற்றில் 15 சதவீதமான அதாவது 90 ஆயிரம் கித்துள் மரங்களில் இருந்தே கள் மற்றும் கித்துள் பாணி வர்த்தக ரீதியில் பெறப்படுகின்றது என்று தெரிவித்தார்.

தற்போது இலங்கை சீனியை இறக்குமதி செய்ய 40 மில்லியன் ரூபாவை செலவு செய்கின்றது. கித்துள் பாணியை கூடுதலாக உற்பத்தி செய்தால் சீனி இறக்குமதிக்கான செலவை 50 சதவீதம் குறைத்து விடலாம் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஒரு கித்துள் மரத்திலிருந்து ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு 10 ஆயிரம் முதல் 20 ஆயிரம் ரூபா வரை வருமானம் பெறமுடியும். கித்துள் மரமொன்றில் இருந்து நாளொன்றுக்கு 8 லீற்றர் பதனீரை பெற்று அதியுயர் தர கித்துள் பாணியையும்-கித்துள் கருப்பட்டியையும் தயாரித்து சந்தைப்படுத்தி நாட்டின் தேசிய வருமானத்தை பெருக்க முடியும் எனச் சுட்டிக்காட்டியிருக்கும் ஜனாதிபதி இவற்றை ஜப்பான் - அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

## உறுப்பெழுத்து, துரித கணிதச் செய்கைப் போட்டி

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவில் கல்வி கற்கும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கிடையிலான உறுப்பெழுத்துப் போட்டி மற்றும் துரித கணித செய்கைப் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளது. இதில் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையான மாணவர்களுக்கான உறுப்பெழுத்துப் போட்டி காலை 8.30 மணிக்கும் தரம் 2 தொடக்கம் தரம் 5 வரையுள்ள மாணவர்களுக்கான துரித கணிதச் செய்கைப் போட்டி காலை 9 மணிக்கும் நடைபெறும் என்று தென்மராட்சி வலய ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-29)

## 22 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் ஆறுமாதங்களுக்கு ஒத்திவைப்பு

கலைக்கப்படாத 22 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் ஆறு மாதங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதுடன் அவற்றின் பதவிக் காலம் டிசெம்பர் 31வரை நீடிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜுலை 30ஆம் திகதியுடன் பதவிக்காலம் முடிவடையும் 22 உள்ளூராட்சி சபைகளும் டிசெம்பர் 31ஆம் திகதியுடன் காலாவதியாவதற்கு இவ்வாண்டின் 11ஆம் இலக்க அவசர நிலை சட்டத்தின் கீழ் உள்ளூராட்சி நிறுவனங்கள் முகாமைத்துவ கட்டளையின் கீழ் அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது.

இதற்கமைவாக குறிப்பிட்ட 22 உள்ளூராட்சி சபைகளினதும் பதவிக்காலத்தை நீடிப்பதற்கான அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் 29ஆம் திகதி நள்ளிரவு வெளியிடப்பட்டுள்ளது. தெஹிவளை- கல்கிஸை மாநகர சபை, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டே மாநகர சபை, கொலன்னாவ நகரசபை, மொரட்டுவ மாநகரசபை, கொடிகாவத்தை முல்லேரியா பிரதேச சபை, நீர்கொழும்பு மாநகர சபை, கம்பஹா மாநகரசபை, கண்டி மாநகர சபை, குண்டசாலை பிரதேச சபை, கண்டி கங்க வட்டகேந்திர பிரதேச சபை, மாத்தளை மாநகரசபை, நுவரெலியா மாநகரசபை, காலி மாநகரசபை, மாத்தறை மாநகரசபை, அம்பாந்தோட்டை மாநகரசபை, சூரியவெவ பிரதேச சபை, அம்பாந்தோட்டை பிரதேச சபை, கல்முனை மாநகர சபை, குருநாகல் மாநகர சபை, அநுராதபுரம் மாநகர சபை, பதுளை மாநகரசபை, இரத்தினபுரி மாநகரசபை ஆகிய 22 உள்ளூராட்சி மன்றங்களினதும் பதவிக் காலம் இவ்வாறு நீடிக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணம் கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளராக (நிர்வாகம்) கடமையாற்றிக் கொண்டிருக்கும்

**உயர்திரு யோ.ரவிந்திரன் (SLEAS II)**

அவர்கள் SLEAS II என்ற தரத்திற்கு உயர்வடைந்துள்ளமையையிட்டு பெருமையடையும் நாம், பாடசாலைகளின் கல்வி வளர்ச்சிக்கும் கல்விச் சமூகத்திற்கும் உன்னதமாக சேவையாற்றிக் கொண்டிருக்கும் இவரை மேலும் பல பதவியுயர்வுகள் பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.



அதிபர், ஆசிரியர்கள்.

யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம்.

(4275)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பிரிய நண்பரும் கொட்டடி சீனிவாசகம் வீதியில் வசித்து வருபவருமான திரு. நாகலிங்கம் தனேந்திரன் (ச.நீ) அவர்கள் கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற சமாதான நீதிவான்களுக்கான மனித உரிமை அமைப்பின் மாநாட்டின் போது கலாநிதி பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இவர் கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கம், சனசமூக நிலையம், வில்லூன்றி இந்து மயான பரிபாலன சபை, யாழ்ப்பாண பிரதேச செயலக மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் போன்ற பொது அமைப்புக்களின் தலைமைப் பொறுப்புக்களையும் நிர்வகித்து வருவது குறிப்பிடத்தக்கது. பிரதேசத்தில் சமய, சமூகசேவைகள் பலவற்றையும் முன்னின்று செயற்படுத்தி வரும் திரு.தனேந்திரன் அவர்களை பாராட்டி வாழ்த்துவதில் நாம் பெருமையடைவதுடன் அவர் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகிறோம்.



**திரு. நாகலிங்கம் தனேந்திரன்**

பொ.சிறீராஜபுலேந்திரன் குடும்பம்
சரவணா அச்சகம்-யாழ்ப்பாணம்

(சி-2838)



## "எடிசெலாட்" விற்பனை மேம்பாட்டு அதிகாரி வெற்றிடம்

பின்வரும் இடங்களில் இருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது

- வல்வெட்டித்துறை
- முல்லைத்தீவு
- பருத்தித்துறை
- கொடிகாமம்
- ஊர்காவற்றுறை
- காரைநகர்
- கோப்பாய்
- திருநெல்வேலி
- மானிப்பாய்



- நீங்கள் 18 வயதுக்கு மேற்பட்டவரா?
- நுகர்வோருடன் பேசி விற்பனையை மேம்படுத்த விருப்பமுள்ளவரா?
- தொழிற் பயிற்சிகள், சலுகைகள் பெற ஆர்வமுள்ளவரா?
- இலங்கையின் முதற்தரமான தொலைபேசி நிறுவனத்தில் பணியாற்றி, வாழ்வில் முன்னேற விருப்பமுள்ளவரா?

அப்படியாயின் நாங்கள் தேடுபவர் நீங்கள் தான்!

விண்ணப்பதாரிகளுக்கு 01.04.2011-15.04.2011 வரை நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும்.

சம்பளத்திட்டம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

❖ சுயமாகத் தயாரித்த சுயவிபரக் கோவையுடன் (BIO-DATA) கீழ்வரும் முகவரிக்கு சமுகமளிக்கவும்.

விபரங்களுக்கு


Mr.H.Mohamed: 07 22 465478

விரைந்து

R&R TELECOM JAFFNA (PVT) LTD,
127, MPCS BUILDING,
K.K.S. ROAD, JAFFNA. T.P.: 021-222 1644

(சி-2842)

# இந்தியாவின் சனத்தொகை 121 கோடியைத் தாண்டியது



இந்தியாவின் சனத்தொகை 121 கோடியைத் தாண்டியுள்ளது. இது கடந்த 2001 ஆம் ஆண்டின் சனத் தொகையை விட 18 கோடி அதிகம் எனினும் கடந்த முறை 21 வீதமாக இருந்த சனத் தொகை வளர்ச்சி தற்போது 17 வீதத்தால் குறைந்துள்ளது. இந்தியாவின் சனத் தொகைக் கணக்கெடுப்பின் விபரத்தை டில்லி யில் உள்துறை செயலாளர் மற்றும் சனத்தொகை கணக்கெடுப்பு பதிவாளர் ஆகியோர் வெளியிட்டனர். இதன்படி 2011 ஆம் ஆண் டுக்கான இந்தியா வின் சனத்தொகை 120. 60 கோடியாக அதிகரித்துள்ளது. மொத்த சனத்தொகையில் ஆண்களின் எண்ணிக்கை 62.3 கோடியாகவும் பெண் களின் எண்ணிக்கை 58.6 கோடியாகவும் உள்ளது. இந்தியாவில் 75% மக்கள் கல்வி அறிவு பெற்றுள்ளனர்.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சனத் தொகை கணக்கெடுப்பு (சென்சஸ் 2011) பெப்ரவரி 9 இல் ஆரம்பமாகி பெப்ரவரி 28 இல் முடிந்தது.

முதல் இந்திய சனத் தொகை கணக்கெடுப்பு 1872 இல் இடம்பெற்றது. வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு காலகட்டங்களில் நடந்தது. கடந்த 1881 இல் நாடு முழுவதும் ஒரே நேரத்தில் நடைபெற்றது. அது முதல் 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை இக் கணக்கெடுப்பு நடக்கிறது.

தற்போது நடத்தப்பட்டது 15 ஆவது கணக்கெடுப் பாகும். சுதந்திரத்திற்கு பின் 7 ஆவது கணக் கெடுப்பு என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# கருணாநிதி குடும்பம் அபகரித்த சொத்துக்கள் மீட்கப்படும்

## ஜெயலலிதா தெரிவிப்பு

(திருவண்ணாமலை)

அ.தி.மு.க. ஆட்சி மலர்ந்தால் மக்களிடமிருந்து கருணாநிதி குடும்பம் அபகரித்த சொத்துக்கள் மீட்கப்படும் என அ.தி.மு.க செயலர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.



நேற்று முன்தினம் திருவண்ணாமலையில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றுகையில்,

எதிர்வரும் சட்டப் பேரவைத் தேர்தல் ஆட்சி மாற்றத்துக்கு மட்டும் இல்லை. தமிழக மக்களுக்கு விடுதலை பெற்றுத் தரவும் ஒரு வாய்ப்பாகும். தி.மு.க.வின் அராஜக ஆட்சியில் இருந்து தமிழகத்தை விடுவிக்க தேர்தல் ஜனநாயகம் நமக்கு அளித்த வரமாகும்.

விலைவாசி உயர்வைக் குறைக்க எந்த நடவடிக்கையும் எடுக்காமல் கருணாநிதி அரசு விலைவாசி பெருக வழிவகுத்தது.

அ.தி.மு.க.ஆட்சி மீண்டும் ஏற்பட்டால் ஏழை மக்களிடம் இருந்து கருணாநிதி குடும்பத்தினர் அபகரித்த சொத்துக்கள் மீட்கப்பட்டு அவர்களிடமே ஒப்படைக்கப்படும்.

மத்திய அரசில் அங்கம் வகித்தும் தமிழகத்தின் ஜீவாதாரப் பிரச்சினைகளான காவிரி, முல்லைப் பெரியாறு, பாலாறு, பொன்னையாறு பிரச்சினைகளைத் தமிழக அரசு விட்டுக் கொடுத்து விட்டது.இதனால் விவசாயம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்றார். (ஸ்ரீ-2)

# இந்தியா- பாகிஸ்தான் இடையே அமைதி ஏற்பட இணைந்து செயற்படுவோம்

## பாகிஸ்தான் பிரதமர் உறுதி

இருநாடுகளுக்கு இடையே அமைதி ஏற்பட பிரதமர் மன்மோகன் சிங்குடன் இணைந்து செயற்படுவோம் என பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானி தெரிவித்தார்.

இந்திய- பாகிஸ்தான் அணிகளுக்கிடையே மொஹாலியில் புதன்கிழமை நடைபெற்ற கிரிக்கெட் ஆட்டத்தைக் காண்பதற்காக இந்தியா கிளம்புமுன் ராவல் பிண்டி விமான நிலையத்தில் செய்தியாளரிடம் அவர் கூறியதாவது,

இருநாட்டு உறவைப் பொறுத்தவரை பேச்சுவார்த்தை மீண்டும் தொடங்கியுள்ளது மகிழ்ச்சியளிக்கக்கூடியதாகும்.உள்துறைச் செயலர்களுக்கு இடையேயான பேச்சுவார்த்தை ஆக்கபூர்வமான முறையில் அமைந்திருந்ததற்காக பாராட்டுக்கள்.

பிரதமர் மன்மோகன் சிங் மிகவும் அனுபவமிக்கவர்.ஆக்கபூர்வமான சிந்தனையுடையவர். இருநாட்டு உறவு குறித்து அவர் எப்போதும் எதிர்மறையான கருத்துக்களைக் கொண்டிருந்ததில்லை. இந்தப் பிராந்தியத்தில் அமைதி ஏற்படுத்த வேண்டும் என்ற உறுதி எங்கள் இருவரிடமும் உள்ளது. சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்துவதன் மூலம் மக்களுக்குத் தொண்டாற்ற முடியும். இந்திய கிரிக்கெட் அணியை பாகிஸ்தான் வருமாறு அழைப்பீர்களா என செய்தியாளர்கள் கேட்டதற்கு அவர் பதிலளிக்கை யில்,



இப்போது நாடு கடுமையான சூழ்நிலையை எதிர்கொண்டுள்ளது. பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடி வருகிறோம். உகந்த அமைதியான சூழ்நிலையை உருவாக்க மக்கள் அரசியல் தலைமை என மொத்த நாடுமே முயற்சி செய்து வருகிறது.

சூழ்நிலை கனிந்தவுடன் பாகிஸ்தான் வருமாறு இந்திய கிரிக்கெட் அணிக்கு அழைப்பு விடுப்போம் என்றார். (ஸ்ரீ-2)

# சத்திய சாயிபாபாவுக்கு சத்திர சிகிச்சை



ஆந்திர மாநிலம் புட்டபர்த்தியிலுள்ள பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவுக்கு கடந்த திங்கட்கிழமை திடீரென மூச்சுத் திணறலும் மயக்கமும் ஏற்பட்டதையடுத்து புட்டபர்த்தியில் அவர் நடத்தி வரும் சத்யசாயி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இதனிடையே நிமோனியா நோயால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அவரது நுரையீரலில் நீர் சேர்ந்திருப்பதாகவும் சத்ய சாய் அறக்கட்டளை நிர்வாகிகள் தெரிவித்தனர்.

மேலும் அவருடைய இருதயத் துடிப்பும் மெதுவாகக் குறைந்து வினாடிக்கு 60 முறைக்கும் குறைவாக துடித்தது. இந்த நிலையில் சாயிபாபாவுக்கு சத்திரசிகிச்சை மூலம் பேஸ் மேக்கர் கருவி பொருத்தப்பட்டது.

இதனால் அவருடைய இருதயத் துடிப்பு மெதுவாக சீரானதோடு உடல் நிலையில் தொடர்ந்து முன்னேற்றம் காணப்படுவதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையே உலகம் முழுவதிலும் இருந்து சாயி பாபா பக்தர்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வருகின்றனர்.

எனவே, சாயிபாபா உடல்நிலை குறித்து கவலை அடைய வேண்டாம் என்றும் மருத்துவமனையில் இருந்து அவர் விரைவில் திரும்புவார் என்றும் சத்ய சாயி அறக்கட்டளை அதிகாரிகள் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)



*தஞ்சாவூர் பெரிய கோவில் சித்திரை பெருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியதை முன்னிட்டு பெரியநாயகி அம்மாள் சமேத பெருவுடையார் உற்சவர் அலங்காரத்தில் எழுந் தருளி அருள் பாலித்தனர்.*

தவறு ஒன்றுதான் அரசின் தயவை வேண்டும்.
உண்மைக்கு அது வேண்டியதில்லை.
- தாமஸ் ஜெபர்சன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# சேடம் இழுக்கும் நிலையில் தமிழ் ஆசிரியர் சங்கங்கள்

எங்கள் தலைவிதி எதுவுமே ஒழுங்காக இல்லை. அரச நிர்வாகங்களில் காலம் கடந்தும் இருக்கின்ற முதிய நிர்வாகிகள் மரணத்தின் பின்னும் மீள் நியமனம் பெறும் வகையில் வடக்கின் அதியுயர் பதவிக்கு இலட்சார்ச்சனை செய்கின்றனர்.

இலட்சார்ச்சனை தமிழிலும் ஆங்கிலத்திலும் இடம்பெறுவதை பார்க்கும் போது சீ... என்ன? சீவியம் என்று எண்ணத் தோன்றுகிறது.

என்ன செய்வது இனத்தை விற்று பிழைப்பு நடத்தும் அடிமைத்தனம் இருப்பதைக் காணும் போது நெஞ்சம் பொறுக்கவில்லை.

இது மட்டும்தான் எங்கள் அவலம் என்று யாரும் நினைத்து விடக் கூடாது. எல்லாவற்றிலும் இதே நிலைதான்.

குறிப்பாக தமிழ் ஆசிரியர் சங்கங்களை எடுத்துப்பாருங்கள். ஆசிரியர்கள் எவருமே அந்தச் சங்கத்தின் பொறுப்பான பதவிகளில் இல்லை.

ஆசிரியர் சங்கத்திற்கு அதிபர் பொதுச் செயலாளராக இருப்பார். உதவிக் கல்விப் பணிப்பாளர் சிரேஷ்ட பொதுச் செயலாளராக இருப்பார். ஆசிரியர் சங்கத்தில் எப்படி இவர்கள் என்று கேட்டால் அப்படி தான் யாப்பாம்.

அட! நாசமறுப்பாரே! உங்க உங்க பதவிக்கேற்றவாறு நடந்து கொள்ளக்கற்றுக்கொள்ளுங்கள். ஆசிரியர் சங்கம் என்றால் ஆசிரியர்களை அந்த சங்கத்தின் அனைத்துப் பதவிகளுக்கும் நியமியுங்கள்.

இதை விடுத்து பதவி ஆசையில் நீதிமன்றம் வரை சென்று தங்கள் பதவியைத் தக்க வைக்கும் சீர்கேடு எங்கள் ஆசிரியர்களின் உரிமையோடு விளையாடுகின்றது.

அண்மையில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் இளம் ஆசிரியர் ஒருவர் மர்மமான முறையில் தாக்கப்பட்டு பின்னர் சிகிச்சை பலன் இன்றி மரணமடைந்தார்.

அவரின் மரணத்திற்கு யார் காரணம்? என்பது இதுவரை வெளிப்படுத்தப்படாத விடயமாக உள்ளது.

ஒரு ஆசிரியர் மர்மமான முறையில் சந்தேகத்துக்கு இடமான வகையில் உயிரிழந்தார் எனில் அதற்கு எதிராக ஆசிரியர் சங்கங்கள் குரல் கொடுக்க வேண்டும் அல்லவா?

ஆனால் இதுவரை எந்த ஆசிரியர் சங்கமும் அந்த ஆசிரியரின் மரணம் தொடர்பில் குறைந்தது அனுதாபம் கூட தெரிவிக்கவில்லை.

ஏன் அப்படி தெரியுமா? ஆசிரியர்கள் தவிர்ந்த உயர் பதவிகளில் இருப்பவர்கள்–ஓய்வுக்குப் பின்னரும் ஆசிரியர் சங்கத்தின் பதவியை கட்டிப்பிடித்துக்கொண்டிருப்பவர்கள். ஒருபோதும் ஆசிரியர்களுக்காக குரல் கொடுக்க மாட்டார்கள்.

இந்த உண்மையை அப்பாவி தமிழ் ஆசிரியர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். மர்மமான முறையில் மரணத்தை தழுவிக்கொண்ட அந்த இளம்தமிழ் ஆசிரியர் ஒரு சிங்களவராக இருந்தால் கொழும்பு புகையிரத நிலையத்தின் முன்பாக ஆசிரியர்கள் திரண்டு ஆர்ப்பாட்டம் செய்திருப்பர்.

விகாரமாதேவி பூங்காவிற்கு முன் உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பித்திருக்கும். என்னசெய்வது செத்தது தமிழ் சீவனல்லோ. அதனால் மௌனம்–இந்த அவலம் தீரவேண்டுமாயின் சேடம் இழுக்கும் எங்கள் தமிழ் ஆசிரியர் சங்கங்கள் சீவனைவிட, புதிய ஆசிரிய சங்கங்கள் ஆசிரியர்களால் ஆரம்பிக்கப்பட வேண்டும். அப்போது தான் விமோசனம் கிடைக்கும்.

# ஐ.தே.க.தலைமைத்துவத்துக்கு எதிராக செயற்பட்டோர் மீது நடவடிக்கை

ஐக்கிய தேசியக் கட்சியில் சஜித் பிரேமதாசவை தலைவராக்குவதற்கு முயற்சிகளை மேற்கொண்டவர்களுக்கு எதிராக ரணில் விக்கிரமசிங்க பழிவாங்கும் படலத்தை ஆரம்பித்துள்ளார்.

அதன் முதற்கட்டமாக அண்மையில் கூடிய செயற்குழு கூட்டத்தின்போது, கட்சியின் அமைப்பாளர் பதவிக்கு பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டாரவின் பெயர் பிரேரிக்கப்பட்ட போதிலும் அதனைச் சாமர்த்தியமாகப் பிற்போடுவதில் வெற்றிகண்டிருந்தார்.

அதன்பின் சஜித்துக்கு ஆதரவாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தா முன்பாக கோஷம் எழுப்பிய நகரசபை உறுப்பினர் ஒருவரின் கட்சி உறுப்புரிமை நீக்கப்பட்டதுடன் அவருக்கெதிராக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

தற்போது சஜித் அணியின் தத்துவாசிரியராகச் செயற்பட்ட ஷிரால் லக்திலக மீது தலைமைத்துவதற்கு எதிராகச் சதித்திட்டங்களை மேற்கொண்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அத்துடன் அவர் வகித்த கோட்டே அமைப்பாளர் பதவியும் பறிக்கப்பட்டுள்ளது.

புதியதொரு அமைப்பாளர் நியமிக்கப்படும்வரை கோட்டே தொகுதியின் தற்காலிக அமைப்பாளராக மலிக் சமரவிக்கிரம நியமிக்கப்பட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## சமாந்தரமாக சைக்கிளில் சென்றவர்களுக்கு அபராதம்

யாழ்.நகர வீதியில் சமாந்தரமாக சைக்கிளில் பயணித்த 7 பேர் நேற்றைய தினம் யாழ்ப்பாணப் பொலிஸாரால் பிடிக்கப்பட்டு யாழ்.நீதவான் நீதி மன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர். இதில் பாடசாலை மாணவர்கள் மூவரும் உள்ளடங்குவர்.

குறித்த வழக்கை விசாரித்த யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராசா 4 பேருக்கு தலா 500 ரூபாய் அபராதமும், பாடசாலை மாணவர்களுக்கு அறிவுறுத்தலும் வழங்கி விடுதலை செய்தார். (ந-6)

# ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

## காவல்துறையும் நீதிமன்றமும் யாருக்கு தேவை விடைதேடுவோம் (மாற்:12:28–24)

முதன்மையான கட்டளை எது என்றால்? அன்பு செய்வது என்போம். சரி இரண்டாவது இடத்தில் உள்ள கட்டளை எது? அன்பு செய்வது. அதுவும் சரி. மூன்றாவது இடத்தில் உள்ள கட்டளை எது? அன்பு செய்வது. இதுவும் சரி. எல்லாக் கட்டளைகளுக்கும் மூலம், ஆதாரம், அடிப்படை அன்புதான். எனவேதான் எல்லாக் கட்டளைகளையும் சுருக்கி இரண்டு கட்டளையாக்கினார். அதையும் இயேசு சுருக்கி ''ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்'' (யோவா 13: 34) என்னும். புதிய கட்டளையைக் கொடுத்தார்.

சட்டங்கள், கட்டளைகள் எல்லாம் யாருக்கு? இன்று எம் மத்தியில் அன்பு வற்றி வரண்டுபோன சமுதாயத்திற்கு கட்டளைகளும் சட்டங்களும் அவசியம். ஆணவம் பேசும் ஆட்சியாளருக்கும் மனிதருக்கும் காவல்துறையும் நீதிமன்றமும் கட்டாயம் தேவையாகி விடுகிறது. பெற்றோரும் பிள்ளைகளும் பாசப்பிணைப்பில் வாழும் குடும்பத்திற்கு எனன சட்டம் தேவை? பகிர்ந்து வாழ்வதற்கு யார் இவர்களுக்கு சட்டம் இயற்றுவது? எனவேதான் எல்லா சட்டங்களையும் தூக்கி எறிந்துவிட்டு, அன்பு ஒன்றையே சமுதாயத்தின் தாரக மந்திரமாகச் சொல்லுகிறார் இயேசு. இதுவே இறையாட்சியின் தொடக்கம். இத்தவக்காலத்தில் நமது அன்பை ஆழப்படுத்துவோம். அதிகரித்துக் கொள்வோம். கடவுளை அன்பு செய்வதும், அடுத்தவரை அன்பு செய்வதுமே இறைவனுக்கு உகந்த பலி. அதைவிடச் சிறந்த காணிக்கையோ, பலியோ, செபமோ, வழிபாடோ வேறு எதுவும் இருக்க முடியாது.

உங்கள் திருவிழாக்களை அருவருக்கின்றேன் (ஆமோஸ் 5:21-26) இம்மக்கள் உதட்டால் என்னைப்போற்றுகின்றனர். உள்ளமோ வெகு தொலைவில் உள்ளது. ஆகவே, இறையாட்சிக்கு உட்படுத்தல் என்பது சட்டங்களைக் கடைப்பிடித்தாலும் அல்ல,

ம. பிரான்சிஸ்க்,
கத்தோலிக்க சுதந்திர,
பத்திரிகையாளர்.

இறை புகழ்ச்சியும் அல்ல. மாறாக இரண்டிலும் கருவாகி உருப்பெற்று அடுத்தவரை அன்பு செய்வதில் நிறைவடைதல் ஆகும். அங்கு இறையாட்சியின் மாட்சி நிறைந்திருக்கும். இவ்வாறு வாழ்வோர் இறையாட்சிக்குத் தொலைவில் இல்லை. நாமும் இறைவார்த்தையில் புதுப்பிக்கப்பட்டு புதுவாழ்வு வாழ்வோம்.

# வெள்ளி நற்சிந்தனை

## செவ்வியல் தமிழில் சீர்மியம்

மனக்கவலை என்பது மனிதனை வருத்தும் ஒரு நோயாகும். இந்நோய் வாய்ப்பட்டவரை இனங்காண்பதும் கடினம். வெளிப்படையான தோற்றம் எதுவும் இந்நோய்க்கில்லை. ஆனால், செயற்பாட்டில் இந்நோயின் தாக்கத்தை அறிந்து கொள்ளலாம். வள்ளுவப் பெருந்தகை மனக்கவலையை மாற்றும் வழியை எடுத்தியம்பியுள்ளார்.

''தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கல்லால் மனக்கவலை மாற்றல் அரிது.''

எனவே, இறைவனுடைய திருவடிகளைச் சேர்ந்த பின்னரே மனக்கவலை தீரும் என்பது வள்ளுவருடைய கருத்தாகும். மணிவாசகர் நாம் வாழும் காலத்திலேயே மனக்கவலையை மாற்றுவதற்கு வழி கூறுகிறார். ஒன்றைப் பெற்றுப்பின்னர் அதை இழந்து விட்டால் மனதில் பெருங் கவலை ஏற்படுகிறது. கவலை என்பது எமக்கு ஏற்பட்ட ஒரு துன்பம் பல்வேறு கிளைகளாகப் பரந்து எம்மை வருத்தும் நிலையாகும்.

மனதிலே பல்வேறு எண்ணங்களிலே துன்பம் எம்மை வருத்தும் போது நாம் சோர்ந்து விடுவோம். உடல் தளரும் நிலை ஏற்படும். மணிவாசகர் இறைவனால் திருவடி தீட்சை பெற்றவர். அதனால் இறைவனு டைய மலர்ப்பாதம் கண்டவர். அதன் அற்புதமான தொடுகையால் ஏற்படும் இன்பத்தை நன்கு உணர்ந்தவர். எனவே, மீண்டும் அந்த இன்பத்தைப் பெற விழைகிறார்.

நல்லமலர்களைப் புனைந்து இறைவனை ஏத்தி வழிபாடு செய்தால் இறைவன் மலரடிகளைக் காணலாம். மனக்கவலைகளை மாற்றலாம் என்பது எமது முன்னோர்களின் அனுபவக் கூற்று. இதனையே மணிவாசகர் எடுத்துரைத்து எல்லோரும் மனக் கவலையின்றி வாழ வழி காட்டியுள்ளார். மலரிட்டுவழிபடல், இறைவனை ஏத்தித் தொழுதல் என்ற இருசெயற்பாடுகளையும் தொடர்ந்து செய்தால் மனக்கவலை மாறிவிடும்.

இச்செயற்பாட்டைத் தொடர்ந்து செய்ய வேண்டும் என்பதை வெகுநயமாகப் பாடலிலே அவர் குறிப்பிட்டுள்ளார். 'ஏத்தேன் நாத்தழும்பேற' என்ற தொடர் இதனை நன்கு விளக்கிநிற்கிறது. தொடர்ந்து இறைவனைச் சொற்களால் ஏத்திப் பாடி வழிபாடு செய்யும் போது நாவிலே தழும்பு ஏற்படுகிறது. மனக் கவலை ஏற்படும்போது நல்லமலர்களை மாலையாகத் தொடுத்து இறைவனுக்கு அணிவித்து வழிபட வேண்டும். மாலை தொடுக்கும் செயற்பாடு எமக்கு ஒரு மனத்தைப் பண்படுத்தும் செயற்பாடாகும்.

நல்ல மலர்களைத் தெரிந்தெடுத்து அழகான மாலையாகப் புனைந்து வழிபாடு செய்யும் போது மனம்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

இறைவன் திருவடிகளையே சிந்தித்துக் கொண்டிருக்கும். நாம் அவ்வாறு செய்ய முடியாத போது மனவருத்தம் தொடரும். மணிவாசகர் இறைவனையடையும் நினைவோடு வாழ்ந்த போது இறைவன் திருவடிகளைக் காண விரும்புகிறார். வழிபாட்டால் தன்னைச் சீர்மியம் செய்யாத நிலையைப் பற்றி மீட்டுப் பார்க்கிறார்.

இது எமக்கும் பொருந்தும். மனக் கவலை ஏற்படும் போது நல்ல மலர்களை எடுத்து மாலை புனைந்து இறைவனை வழிபாடு செய்தால் போதும். அது இறைவன் திருவடியை நாம் காண வழிசெய்யும்.

''வருந்துவனின் மலர்ப்பாத
மவை காண்பான் நாயடியேன்
இருந்துநல மலர்புனையேன்
ஏத்தேன் நாத் தழும்பேறப்
பொருந்தியபொற் சிலைகுனித்
தாய் அருளமுதம் புரியாயேல்
வருந்துவனத் தமியேன்மற்
றென்னேநா னாமாறே''

# மறுபடியும் தி.மு.க ஆட்சிக்கு

# வரக்கூடாது; வரவே கூடாது



## ஜெயாவை ஆதரிக்கிறார் 'இளைய தளபதி' விஜய்

தேர்தல் களத்தில் தி.மு.க மேடையில் 'காமெடிப் புயல்' மையம்கொள்ள... ஆளும் கட்சிக்கு குஷியோ குஷி; அ.தி.மு.க. கூட்டணிக்கோ லேசான ஷார்க். இந்த நிலையில், அ.தி.மு.க. அணிக்குத் தனது பகிரங்கமான ஆதரவைத் தந்திருக்கிறார் நடிகர் விஜய். இப்போது தி.மு.க. ஷாக்! திருச்சியில் ஜெயலலிதாவை சந்தித்துத் திரும்பிய எஸ்.ஏ.சந்திரசேகரனிடம் பேசினோம்.

"கடந்த முறை போயஸ் கார்டனில் அம்மாவை சந்தித்தபோதே, 'விஜய் மக்கள்இயக்கத்தின் முழு ஆதரவை நிச்சயம் அ.தி.மு.க. கூட்டணிக்கே தருவோம்' என்று உறுதி அளித்து இருந்தேன். இடையில் நானே இயக்கி, தயாரித்த 'சட்டப்படி குற்றம்' படத்தை வெளியிடவிடாமல் ஏகப்பட்ட குளறுபடிகள். முதலில் செல்வப் பெருந்தகை எம்.எல்.ஏ. மூலமாக தேர்தல் கமிஷனுக்குக் கடிதம் கொடுத்து தொல்லை கொடுத்தார்கள். அது தோற்றது. பிறகு ரிலீஸ் தேதிக்கு முதல் நாள் திடீரென்று வெளியிடாமல் தடுக்க, ரகசியமாகத் தடை வாங்கும் வேலையில் ரத்திக் என்பவர் இறங்கினார்.

எனக்கும், அவருக்கும் வாய்க்கால் வரப்பு தகராறுகூட கிடையாது. 'அப்புறம் எதற்கு?' என்று விசாரிக்க... மதுரையில் இருக்கும் மத்திய அமைச்சருக்கு ரத்திக் நெருங்கிய நண்பர் என்று அறிந்து அதிர்ந்தேன். பொதுவாக, அரசியல்வாதிகளின் சொத்துகளுக்கு பினாமிகள் இருப்பார்கள் என கேள்விப்பட்டு இருக்கிறேன். வழக்குப் போடக்கூடவா பினாமிகள்! அந்தத் தடையையும் முறியடித்தேன்.

கடந்த 26ஆம் திகதி திடீரென்று திருச்சியில் இருந்து அம்மாவின் போன் வந்தது. அடுத்த நாள் அங்கு சென்று சங்கம் ஹோட்டலில் அம்மாவைச் சந்தித்தேன். 'எம்.எல்.ஏ.ஸீட் கேட்கவில்லை. டிமாண்ட் எதுவும் வைக்கவில்லை. உணர்வுரீதியாக 'விஜய் மக்கள் இயக்கம்', தனது பரிபூரண ஆதரவை அ.தி.மு.க. கூட்டணிக்கு அளிக்கும். இந்த நிமிடம் முதல் அவர்கள் தேனீக்களாக உழைப்பார்கள்...' என்று உறுதி அளித்தேன்.

திருச்சி மாவட்ட இளைஞர் அணி தலைவர் கரிகாலன், மாவட்டத் தலைவர் ராஜா இருவரையும் அம்மாவிடம் அறிமுகம் செய்து வைத்தேன். ராஜா அ.தி.மு.க. ஆதரவாளர். கரிகாலன் குடும்பத்தினர் பரம்பரை பரம்பரையாக தி.மு.க-வினர். 'இளைய தளபதி விஜய் காட்டும் வழியே எங்கள் வழி. அப்பா என்ன செய்யச் சொல்றாரோ அதையே செய்வோம்...' என்று அவர்கள் சொல்ல, அம்மா முகத்தில் ஏகப்பட்ட சந்தோஷம்!


'மறுபடியும் தி.மு.க. ஆட்சிக்கு வரக்கூடாது; வரவே கூடாது. மீண்டும் வந்தால் அநியாயங்கள், அட்டூழியங்கள் அதிகரிக்கும். யாருமே நம்மைக் காப்பாற்ற முடியாது...' என்ற பயம் மக்களின் மனதில் படிந்திருக்கிறது. எனக்கும்கூட. தமிழ்நாட்டுக்கு விடிவு காலம் பிறக்க தி.மு.க. ஆட்சி ஒழிய வேண்டும். அ.தி.மு.க ஆட்சி மலர வேண்டும். இது தான் விஜய்யின் கருத்தும். விஜய்யுடன் கலந்து பேசிவிட்டு நான் பிரச்சாரத்துக்குப் புறப்படப் போகிறேன்!" என்று பேசியவர் வார்த்தைகளில் கத்திரி வெயிலின் கனல்.

விஜய்க்கு நெருக்கமான புள்ளிகள் பலர், "பெரிய ஹீரோக்களுக்கும் சரி, சாதாரண டெக்னீஷியன்களும் சரி... யாருமே தி.மு.க. ஆட்சி வரக் கூடாது என நினைக்கிறார்கள். தி.மு.க வாரிசுகள் தமிழ் சினிமாவை ஆக்கிரமிப்பதைப் பார்த்து வெறுப்பில் விஜய் வெதும்பி இருக்கிறார். 'நிதிகளின் கைகளில் தமிழ் சினிமா மாட்டிக்கொண்டு தவிக்கிறது...' என்று அம்மா மதுரையில் பேசியதை விஜய் ரசித்தார்.

எங்களிடம், 'என்ன பண்றது? நாங்கதான் தெரியாம இடத்தைக் கொடுத்துட்டோம்... இப்போ மடத்தைப் பிடுங்கிற கதையா இருக்கு' என்று ரொம்பவும் ஃபீல் பண்ணினார். சினிமா நடிகருக்கு மக்கள் தரும் மரியாதையை தி.மு.க-வினரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. பாலிவுட் படவுலகம் மாதிரியே கோலிவுட்டும் அதிகாரத்தின் பிடியில் சிக்கித் தவிக்கிறது.

'எதையும் எடுத்தேன்... கவிழ்த்தேன்' என்று அவசர முடிவு எடுக்கும் பழக்கம் விஜய்க்கு இல்லை. ஒவ்வோர் அடியையும் நின்று நிதானமாக யோசித்த பிறகே வைப்பார். தேர்தல் நெருங்கும் நேரத்தில், நிச்சயம் ஜெயலலிதா - விஜயகாந்த்தை, விஜய் ஆதரித்துப் பேசுவார். தி.மு.க. அரசின் அதிகாரத் துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்டு நடுத்தெருவில் நிற்கும் தயாரிப்பாளர்களைப் பட்டியல் போட்டுக் காட்டுவார். விஜய்யின் ஒற்றைக் குரல், ஒட்டுமொத்த சினிமாவின் உறுதியான குரலாக ஒலிக்கும்!" என்று உணர்ச்சிவசப்பட்டனர்.

அ.தி.மு.க. அணிக்கு புதிய ஆக்ஸிஜன் கொடுத்து இருக்கிறார் விஜய்!




# உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா 2011

பெப்ரவரி 19 - ஏப்ரல் 02

ICC Cricket World Cup 2011








உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டி நாளை மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெறுகின்றது. இப் போட்டியில் இந்திய அணியை சந்திக்கவுள்ள இலங்கை அணியினர் மும்பையில் தீவிர பயிற்சியில் ஈடுபட்டபோது.....

## இரண்டாவது முறை உலகச் சம்பியன் யார்?

# இறுதிச் சமருக்கு இலங்கை-இந்திய அணிகள் தயார்

(மும்பை)

பத்தாவது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி நாளை மும்பையில் நடைபெறுகின்றது.

இப் போட்டியில் வெற்றிபெற்று இரண்டாவது முறை உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றும் முதலாவது ஆசிய அணி என்ற பெருமையைப் பெறுவதற்கு இலங்கை-இந்திய அணிகள் மோதுகின்றன.

இலங்கை அணி இத் தொடரில் ஏற்கனவே மும்பை மைதானத்தில் நடைபெற்ற நியூசிலாந்து அணிக்கு எதிரான லீக் போட்டியில் வெற்றிபெற்றது.

இது இலங்கை அணிக்கு சாதகமான விடயமாகவிருந்தாலும் இந்திய அணியுடன் அதன் சொந்த மண்ணில் விளையாடுவது சவாலானது.

உலகக்கிண்ண அரங்கில் இந்திய அணி 1983ஆம் ஆண்டு நடைபெற்ற மூன்றாவது உலகக் கிண்ணத்தையும் இலங்கை அணி 1996ஆம் ஆண்டு நடைபெற்ற 6 ஆவது உலகக்கிண்ணத்தையும் கைப்பற்றின.

இந்நிலையில் இரு அணிகளுமே இரண்டாவது முறை உலகக் கிண்ணத்தை கைப்பற்றுவதற்கு போராடுமென்பதால் இரசிகர்களுக்கு நாளை கிரிக்கெட் விருந்து கிடைப்பதுநிச்சயம்.

**இராமாயணமாக வர்ணிக்கும் இந்திய ஊடகங்கள்**

பாகிஸ்தானுக்கு எதிராக மொகாலியில் நடந்த மகாயுத்தத்தில் இந்திய அணி வெற்றிபெற்றது. அடுத்து இலங்கையுடன் நடக்க உள்ள இறுதிப் போட்டி இராமர்-இராவணன் இடையிலான போராக இந்திய ஊடகங்கள் வர்ணிக்கின்றது.

இந்திய துணைக் கண்டத்தில் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கிறது. நேற்று முன்தினம் மொகாலியில் நடந்த அரையிறுதியில் பரம எதிரிகளான இந்தியா-பாகிஸ்தான் அணிகள் மோதின. உலக மகாயுத்தமாக கருதப்பட்ட இப் போட்டியில் வெற்றிபெற்ற இந்திய அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

மும்பையில் நாளை நடக்க இருக்கும் இறுதிப் போட்டி இந்திய அணி இலங்கையை எதிர் கொள்கின்றது. இதனை இராமர்-இராவணன் போராக இந்திய ஊடகங்கள் கருதுகின்றனர். இது தொடர்பாக இந்திய ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தியில்,

அதில் நாளை இராமர் (இந்தியா), இராவணன் (இலங்கை) இடையே போட்டி நடக்க உள்ளது. இதில் இராவணனை வதம் செய்து சீதாவை (உலகக்கிண்ணத்தை) இராமர் கொண்டு வருவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மும்பையில் உள்ள இராமர் கோயில்களில் இந்திய அணியின் வெற்றிக்காக நேற்று சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டன.

## இறுதிப் போட்டியில் முரளிதரன் விளையாடுவாரா?

## வாஸ், ராண்டீவ் மும்பைக்கு அழைப்பு

(மும்பை)

உலகக் கிண்ண கிரிக்கெட் இறுதிப் போட்டியில் காயம் காரணமாக இலங்க்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன் பங்கேற்பது சந்தேகமாகியுள்ளது.

உலகக்கிண்ணக் கிரிக்கெட்டில் மூன்றாவது முறையாக (1996, 2007, 2011) இலங்கை அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

இந் நிலையில் இலங்கையின் சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன் தொடையின் பின் பகுதியில் ஏற்பட்டுள்ள காயத்தால் அவதிப்படுகிறார்.

ஏற்கனவே அரையிறுதிப் போட்டியில் உடற்தகுதியில்லாத நிலையிலும் பங்கேற்றார்.

ஒருவேளை நாளை பங்கேற்றால். இது தான் இவரது கடைசி சர்வதேச போட்டியாக அமையும்.

இதேபோல் முழங்கால் மற்றும் தொடையின் பின்பகுதியில் ஏற்பட்ட காயத்தினால் சகலதுறை வீரர் மத்யூஸ் விளையாடுவதும் சிக்கலாக உள்ளது.

இதனால் கடந்த 2008 இற்குப் பின் ஒருநாள் போட்டிகளில் விளையாடாத வேகப்பந்து வீச்சாளர் சமிந்த வாஸ் (37), இளம் வீரர் ராண்டீவ் (26) ஆகியோரை மும்பை செல்லுமாறு இலங்கை கிரிக்கெட் சபை கேட்டுக் கொண்டுள்ளது. இதையடுத்து இருவரும் மும்பை செல்வது தெரிகிறது.

நாளைய போட்டியில் முரளிதரன், மத்யூஸ் முழுமையான உடல் தகுதி பெறவில்லை எனில், இவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கலாம்.

# மும்பை மைதானத்தில் பல அடுக்குப் பாதுகாப்பு

(மும்பை)

உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி நடக்கவுள்ள மும்பை வான் கடே மைதானத்திற்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

பத்தாவது உலகக்கிண்ண தொடரில் நாளை நடக்கும் இறுதிப் போட்டியில் இந்தியா, இலங்கை அணிகள் மோதுகின்றன. இதை நேரில் காண இந்திய ஜனாதிபதி பிரதீபா பாட்டீல் மும்பை வருகிறார்.

தவிர இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் செல்கிறார். இவர்கள் தவிர பல வி.ஐ.பிகள் வர இருப்பதால் ஆகாய, கடல்வழி மற்றும் தரை மார்க்கம் என அனைத்து வழிகளிலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. மும்பை பொலிஸ், தேசிய பாதுகாப்பு படையினர், கறுப்புப் பூனை படைப் பிரிவுகள் கமாண்போக்கள் என அனைத்து படைப்பிரிவுகளும் எவ்வித சூழலையும் சமாளிக்கும் வகையில் தயாராக உள்ளன.

தவிர மும்பை மைதானம் பல அடுக்குகளாக பிரிக்கப்பட்டு உச்சக் கட்ட பாதுகாப் பின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.




பாகிஸ்தான் அணியுடனான அரையிறுதிப் போட்டியில் இந்திய அணி வெற்றிபெற்றது. இவ் வெற்றியை மகனுடன் இணைந்துகொண்டாடும் இந்தியவீரர் சேவாக்.

## ஆறு மாதத்திற்கு...

அளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தேர்தலை ஒரு மாதத்திற்கு ஒத்திவைக்கலாம். அவ்வாறு ஒத்திவைத்தபின்னர் மீண்டும் ஒரு தேவைக்காக ஒத்திவைக்கநேரிடலாம். அவ்வாறு அடிக்கடி தேர்தலை ஒத்திவைப்பதைவிட நேரடியாக ஆறு மாதங்களுக்கு ஒத்திவைப்பது ஏற்றமாகும்.

எனினும் சாத்தியப்படும் பட்சத்தில் ஆறு மாதம் முடிபதற்கு முன்னரும் தேர்தலை நடத்தலாம். அதற்கு அரசாங்கம் தயாராகவுள்ளதுடன் அது குறித்து கவனத்தையும் செலுத்தி வருகிறது என அமைச்சர் மேலும் கூறினார். (ஸ்ரீ-2)

## சமாதானப் பாதயாத்...

களை தட்டிக்கேட்கத் தவறிவிட்டனர். இதன் விளைவு பல்லாயிரக்கணக்கான உயிர்கள் இறக்க நேரிட்டது.

மனிதனுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கு மனிதனே காரணம். மனிதர்களிடையே பிரிவினையை ஏற்படுத்த அவனே முயற்சித்து வருகிறான்.

எமது சர்வமத குழு யுத்தத்தால் பாதிக்கப்பட்டு தமது சொந்த இடங்களில் மீள் குடியேறிவரும் மக்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளது.

மக்கள் தமக்கு சொந்தக் காணி, வீடு என்பவற்றை அமைத்துத் தருமாறும் அடிப்படை வசதிகளைச்செய்து தருமாறும் கேட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அடிப்படை வசதிகளையாவது செய்து கொடுப்பது என எமது சர்வமத ஒன்றியம் தீர்மானித்துள்ளது என தெரிவிக்கப்பட்டது.

சர்வமத ஒன்றிய குழு உறுப்பினராகிய தேசபந்து கலாநிதி மனோகரக் குருக்கள், சிறீசுபத்தாராம மகாவிகாரை வண.ரண்முத்துகல சங்கரத்ன தேரர், வண.தேவகுமார், மௌலவி யு.எல்.எம்.மக்கி, வண.விமல தேரர், வண.றெஜினோல்ட் பிரான்சிஸ், ஈ.கே.மகேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ந-6)

MyWay யின்
Complete English
Volume 1 - Spoken English
Volume 2 - Grammar With CD/DVD
Volume 3 - Fluency Development
தனியாரும் பெற்றுக்கொள்ளலாம்
விலை ரூபா 1500/- மட்டும்
MyWay 182 - 1/5, Stanley Road, Jaffna
Tel : 021 222 95 05 Mobile : 077 33 63 456

MyWay யின் அதிபர், ஆசிரியர்
அலுவலர்களுக்கான சனி ஞாயிறு
3 மாத பயிற்சிநெறி
புதிய பிரிவுகள் ஆரம்பம்
காலம் : 3 மாதம் கட்டணம் : 6000/-
2ஆம் 3ஆம் திகதிகளில் பயிற்சியில்
சேருவோருக்கு சலுகை கட்டணம்
ரூபா 3000/- மட்டும்
MyWay 182 - 1/5, Stanley Road, Jaffna
Tel : 021 222 95 05 Mobile : 077 33 63 456

## லங்கா ஈ...

வெல்லம்பிட்டிய பொலிஸ் நிலையத்திற்கு வந்து வாக்குமூலமொன்றைத் தருமாறு பேன்ட் ரூபசிங்கவிற்கு முன்னதாக பொலிஸார் அறிவித்திருந்ததாக தெரியவருகிறது.

இதன்படி சட்டத்தரணிகள் சகிதம் பொலிஸ் நிலையம் சென்ற பேன்ட் ரூபசிங்க வாக்குமூலமொன்றை வழங்கியுள்ளார். இந்த வாக்கு மூலத்தின் பின்னரே பேன்ட் ரூபசிங்க கைது செய்யப்பட்டுள்ளார். (ந-5)

## கேணல் கடாபியைக்...

இரவு லண்டன் சென்றடைந்தார். தான் இனியும் கேணல் கடாபிக்காக பணியாற்றத் தயாரில்லையென பிரித்தானிய அதிகாரிகளிடம் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் பிரித்தானிய இராணுவ விமானம் என நம்பப்படும் விமானம் ஒன்றில் வந்திறங்கியதாக தனது செய்தியாளர்கள் கூறுவதாக பி.பி.சி தெரிவித்துள்ளது.

அவரிடம் பிரித்தானிய அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

எனினும் அமைச்சர் மௌஸா கௌஸா பிரிந்து செல்லவில்லை எனவும் அவர் இராஜதந்திர பயணம் ஒன்றை மேற்கொண்டதாகவும் லிபிய அரசாங்கத்தின் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக பிரித்தானிய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் கூறுகையில்,

மௌஸா கௌஸா தனது பதவியை இராஜினாமாச் செய்வதாக எம்மிடம் தெரிவித்துள்ளார். அவருடன் நாம் கலந்துரையாடல்களை நடத்திவருகின்றோம். மேலதிகவிபரங்களை உரிய தருணத்தில் வெளியிடுவோம் எனத் தெரிவித்துள்ளார்.

கடாபியின் நீண்டகால விசுவாசியாக விளங்கிய மௌஸா கௌஸா லிபிய புலனாய்வுப் பிரிவின் தலைவராகவும் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

லிபியாவில் கடாபியின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான புலனாய்வுத் தகவல்களை மொஸா கௌஸாவிடமிருந்து மேற்குலக நாடுகள் பெறும் என நம்பப்படுகிறது. (ந-5)

## வடபகுதிக்...

மர்மப் படகிற்கும் கடற்படையினர் காணாமற் போனமைக்கும் தொடர்பு இருக்கலாம் என்றும் மற்றொரு செய்தி தெரிவிக்கின்றது. (ந-5)

NTRE KONDAVIL
O/L Day Class
Mat:- திரு. மகேந்திரன் Ta:- திரு.குகன்
Sci:- இரா. செல்வவடிவேல், திரு.துரைராசா
Rel:- திரு.நித்தி Eng:- வழமையான ஆசிரியர்
His:- வழமையான ஆசிரியர்.
வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
நிரு ரியூசன் சென்ரர்
கோண்டாவில் தொலைபேசி எண் :0775086846
மின்னஞ்சல் : nirukondavil@hotmail.com
(3898)

## லிபியாவின்...

பொதுமக்கள் மீது கூட்டுப்படைகள் நடத்தும் தாக்குதல்களுக்கும் அவற்றை இயக்கும் நாடுகளுக்கும் தகுந்த பாடத்தினை பொதுமக்கள் எதிர்காலத்தில் வழங்குவர் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் விசேட செய்தியாளர் மாநாடு நேற்றுக் காலை இடம்பெற்றபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ந-5)

விற்பனைக்கு/வாடகைக்கு

தொடர்பு - ரூபன்:- 0774667524, 0779238564
(4278)

AAA 2011 விருதுகளுக்கான
குறுந்திரைப்படப் போட்டி

AAA MOVIES INTERNATIONAL நிறுவனம் தனது இரண்டாவது குறுந்திரைப்படப் போட்டியை அகில இலங்கை ரீதியில் நடாத்தவுள்ளது.

- திறந்த பிரிவு, பாடசாலை மட்டப் பிரிவு என இரண்டு பிரிவுகளாக நடைபெறும்.
- பாடசாலைப் பிரிவில் பங்குபற்றும் படங்கள் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்படவேண்டும்.
- கால அளவு: 05 நிமிடத்திலிருந்து 20 நிமிடம் வரை.
- மக்களின் வாழ்வியல், உளவியல், சமூகப்பிரச்சினைகள் சம்பந்தமான படைப்புகள்.
- ஒரு பாடசாலை தயாரிக்கும் படங்களில் அப் பாடசாலை தவிர்ந்த பிற நடிகர்களும் பங்குபற்றலாம்.
- ஒருவர் அல்லது ஒரு அமைப்பு அல்லது ஒரு பாடசாலை எத்தனை படங்களையும் போட்டிக்கு அனுப்பலாம்.
- போட்டியில் பங்குபற்றும் திரைப்படத் தயாரிப்பாளர்கள் 2011ம் வருடம் ஏப்பிரல் மாதம் 20ம் திகதிக்கு முன்பாக எமது அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளல் வேண்டும்.
- பங்குபற்றும் குறும் திரைப்படங்களை 31.07.2011ம் திகதிக்கு முன்பு சமர்ப்பிக்க வேண்டும். சமர்ப்பிக்கும்போது பங்குபற்றும் நடிகர்கள் தொழில்நுட்பக் கலைஞர்களின் விபரங்களை வழங்கவேண்டும்.
- ஒவ்வொரு குறும்படத்தையும் DVD அமைப்பில் மூன்று பிரதிகளாக வழங்க வேண்டும்.
- வழங்கப்பட்ட குறுந்திரைப்பட பிரதிகள் திரும்ப வழங்கப்படமாட்டாது.

கடந்த வருடம் இக் குறுந்திரைப்படப் போட்டியில் பங்குபற்றிய அனைவருக்கும் நன்றிகள்.

குறிப்பு: விவரணப்படங்கள், குறும்படங்கள், வர்த்தக நிறுவனங்களுக்கான விளம்பரங்கள் என்பன துறை சார் வல்லுனர்களைக் கொண்டு தயாரித்துக் கொடுக்கப்படும். தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
AAA Movies International
No. 92, Brown Road, Jaffna.
Tel: +94(0)213207386, +94(0)213734742
Email: aaamoviesintl@hotmail.com
Web: www.AAAmovies.info
(4277)

union assurance
Trust in your tomorrow, today.
பதவி வெற்றிடங்கள்
Join us as an Insurance Adviser to experience what you hoped for...
රක්ෂණ උපදේශකයෙකු ලෙස අප හා අත්වැල් බැඳගන්නා ඔබගේ සිහිනයන් නිසැකවම අපි සැබෑ කරන්නෙමු...
உங்கள் நம்பிக்கைக்குரிய அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள காப்புறுதி ஆலோசகராக எம்மோடு இணைந்து கொள்ளுங்கள்.


இலங்கையில் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான யூனியன் அஷ்யூரன்ஸ் வடமராட்சி கிளைக்கு பின்வரும் பதவிகளுக்குத் தகுதியானவர்களுக்கு உடனடி நியமனம் வழங்கவுள்ளது.

நிதி ஆலோசகர் (Financial Advisor)
அபிவிருத்தி முகாமையாளர் (Team Leader)

அடிப்படைத் தகைமைகள் :-
- க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- காப்புறுதித்துறையில் முன்னனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
- தற்போது A/L பரீட்சைக்கு தோற்றியவர்களும் நேர்முகத் தேர்விற்கு தோற்றலாம்.
- வன்னிப்பிரதேசத்தில் வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருக்கும் இளைஞர், யுவதிகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

யூனியன் அஷ்யூரன்ஸில் இணைவதன் ஊடாக நீங்கள் காப்புறுதி உலகில் அங்கீகரிக்கப்படுகிறீர்கள்.

குறிப்பு:- ஏற்கனவே வேறு தொழில் துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களும் தமது வருமானத்தை மேம்படுத்த எமது நிறுவனத்தில் பகுதி நேரமாக வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

ஏன் தயக்கம்! தோற்றுங்கள் நேர்முகத் தேர்வுக்கு சுயவிபரக் கோவையுடன்

காலம் :- 02.04.2011 சனிக்கிழமை
நேரம் :- காலை 9.30 மணி
இடம் :- யூனியன் அஷ்யூரன்ஸ், இல.357/1, பிரதான வீதி, பருத்தித்துறை.
(4280)

P.விமலன்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
T.P: 077 0774496

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.04.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.